ஓம்.

பரப்ரம்மணே நம:.

முதலாவது

தத்துவவாதம்.

I

TATTVA VADAM

இது

தத்துவவிசாரஞ் செய்பவர்க்குப் பயன்படுமென்று கருதி,

ப்ரம்மவித்யா, இந்துஜனபூஷணி

இப்பத்திரிகைகளிலிருந்தெடுத்து,

சென்னை :

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

[மூன்றாவது பதிப்பு.]

1914.

விலை அணா 4.

இதிலுள்ள விஷயங்கள்.

ஓம்.

பரப்ரஹ்மணேநம:

உலகம் சத்தா? அசத்தா?

சத்து என்பது சத்தினிலக்கணம் கூறுகின்றது. சத்து யாண்டு முள்ளது. சத்தெனினும் உள்ளதெனினு மொக்கும்.

அசத்து என்பது அசத்தினிலக்கணம் கூறுகின்றது. அசத்து யாண்டுமில்லது. அசத்தெனினும் இல்லதெனினு மொக்கும்.

சத்துக்கு உதாரணங் கூறுகின்றது; அது படம். படமென்னும் சொல்லும் அதன் றோற்றமும் பொருளு முடனிகழ்வது. படமெனி னும் ஆடையெனினு மமையும்.

அசத்துச் சொல்மாத்திர மாதற்கு உதாரணங் கூறுகின்றது; அது மலடிமைந்தன்.

அசத்துச் சொல்மாத்திரமுந் தோற்றல்மாத்திரமுமாதற்கு உதாரணங் கூறுகின்றது; அது கயிற்றரவு கானல்நீரென இவை.

அசத்தின் இரண்டுவகை உதாரணம் விளங்கவுரைக்கின்றது. மலடிமைந்தன் தோற்றல் மாத்திரமென்பது எனைத்துணையுமின்றிச் சொல்மாத்திரமாகவே நிகழ்வது.

கயிற்றரவு சொன்மாத்திரமுந் தோற்றல்மாத்திரமுமாய் நிகழ் வது. இது முன்னர் மயக்கத்தான் அரவெனத் தோற்றித் தெளிந்த வழிக் கயிறாகவே நிகழ்வது. அது, காரணமான கயிற்றைக் கண்ட பின்னர்க் காரியமான அரவு தோன்றாது கயிறென்றே காணப்படுவ தென்பது கருத்து.

கானல்நீர் சொல்மாத்திரமுந் தோற்றல் மாத்திரமுமாய் நிகழி னும் கயிற்றரவுபோல் காரணங்கண்டவழிக் காரியந் தோற்றாதிருப்ப தன்று; நீர் தோற்றிக்கொண்டே யிருப்பதுபோல்வது. அங்ஙனம் தோற்றியதொன்றும் நீரென்ப தெத்துணையுமின்றே.

மலடிமைந்தன் போன்று தோற்றமென்பதின்றிச் சொல்மாத் திரமாயிருப்பதூஉம், கயிற்றரவும் கானல்நீரும்போன்று சொல்மாத் திரமும் தோற்றல்மாத்திரமுமா யிருப்பதூஉம், கயிற்றரவு கயிற்றைக் கண்டவழி யரவு தோன்றாதிருப்பதூஉம், கானல்நீர் கானலையுணர்ந்த வழியும் நீர் தோற்றிக்கொண்டிருப்பதூஉமா மூவகைப்பும் அசத்தின் பாற்படுமென்க.

படமென்பதற்குச் சொல்லும் தோற்றமும் பொருளுமென்னு மிம்மூன்றும் உண்மையின் சத்தெனப்படும். இது நிற்க;

இனி உலகம் சத்தா? அசத்தா? என மேற்கூறிப்போந்த நியாய வாயிலாகக் காரிய காரணவாத வேதுவின் கடத்தைக்கொண்டு விவ கரிப்பாம்.

காரியமென்பது: காரியத்தி னிலக்கணங் கூறுகின்றது. காரிய முன்னின்மைக்கு எதிர்மறை.

காரணமென்பது; காரணத்தி னிலக்கணங் கூறுகின்றது. காரணம் காரியத்திற்கு நியதமாய் முன்னிற்பது. நியதம் இன்றியமை யாமை. காரணமெனினுங் கருவியெனினு மொக்கும். காரியத்திற் குப் பேதகாரண மிரண்டும் அபேதகாரண மொன்று முண்டெனத் துணியப்படும். கடமாகிய காரியத்திற்குத் தண்டு சக்கரந் துணைக் காரணமுங் குலாலன் நிமித்தகாரணமுமாகிப் பேதமும், மண் முதற் காரணமாகி அபேதமு மாகின்றன.

காரியம் வனைவதற்கு முன்னும் அழிவுபாட்டிற்குப் பின்னுமின் றென்பது துணிவேனும், வனையப்பட்டபின்னும் அழிவுபாட்டிற்கு முன்னுமுளதாதலான் இடைநின்றகாலத்தே காரியமானகடஞ் சத்தா மெனின், யாது சத்தோ வஃது முன்னும் பின்னு நிகழ்வுமென்னு முக்காலத்து நிகழவேண்டும்; முன்னும் பின்னு மில்லாதது "இல் லது வாராது, உள்ளது போகாது" என்னும் நியாயத்தான் இடை நின்ற காலத்து யாங்ஙனம் நிகழும்? இடைநின்றகாலத்து உளதேல் மண்ணாய் நிகழுங்கால் கடமின்று; மண்ணின்கண் வளைவு குவிவு முதலாய குணங்க ளெய்தியவழிக் கடமென்னும் பெயரெய்தும். வளைவு குவிவுமுதலிய குணங்களையன்றிக் குணியன்றாம்; அக்குணங் களும் குணியான மண்ணின்கட்டோன்றி யதன்கண்ணே நிகழும்.

குணி யெஞ்ஞான்றுளதோ அஞ்ஞான்றே அதற்குக் குணமும் உண்டென்பதன்றே? வளைவு குவிவு முதலாய குணங்க ணிகழ்வ தற்கு முன்னரும் உருட்சி யல்லது வேறுகுணம் நிகழ்ந்தன. மண் ணென்னுங்குணி தன்குணத்தொடுங் கூடியவழியானே யம்மண் ணுக்குக் கடமென்னும் பொருட்பெய ரெங்ஙனம் பொருந்தும்? மண் ணென்னுங் குணியும் அதன்கண் உளதாய வளைவு குவிவு முதலாய குணங்களுமே யல்லது, கடமென்னும் சொற்குப் பொருள் வேறின் மையான் இடைநின்றகாலத்துங் கடமின்றென்பதுவே திண்ணம். இதனானே எஞ்ஞான்றுங் கடமென் றொருபொருளின்றென்றே பசு மாத்தாணிபோல் நாட்டப்பட்டதென்க.

அற்றேல்; கடமென்னுந் தோற்றமும் அபாவமாக வேண்டுமன் றே? கடத்தோற்றங் காணப்படுவதனாற் கடமின்றென் றெவ்வாறு கருதப்படுவதெனின், தோற்றம் பொருளாகுங்கால் கயிற்றினிகழும் அரவ முளதாகல்வேண்டும். அரவு பொய்ம்மையாகத் தோற்றினுங் கயிறென் றுணர்ந்தவழி யாவென்பது தோற்றக்கண்டாமில்லை. கடமங் ஙனமன்று; மண்ணல்லது எஞ்ஞான்றுங் கடமின்றென் றுணர்ந்த

வழியும் பெயர்த்துந் தோற்றுகின்ற தென்னையெனின், நன்று வினா வினாய்; கூறுதும். தோற்றமென்ப திருதிறத்த: அவை காரணத்தைக் கண்டவழிக் காரியந் தோன்றாதிருப்பதொன்று; அது கயிற்றரவு முதலியனவென்க. காரணத்தைக் கண்டவழிக் காரியந் தோற்றுவதொன்று; அது கானல்நீர் முதலியனவென்க. கடத்தோற்றங் கானல்நீர் முதலியனபோல்வ தொன்றாகலின் காரணமான மண்ணை யாண்டுமுளதெனவும் காரியமான கட மில்லதெனவும் ஆய்ந்துணரினுங் கடத்தோற்ற மிலதாகாமற் போந்திலது. அற்றாகலினன்றே இத்துணையுந் தோற்றம் பொருளன்றெனக் கூறவந்தாமன்றித் தோற்றமும் இன்றெனக் கூறினாமில்லை.

“இல்லது வாராது, உள்ளது போகாது” என்னும் நியாயத்தாற் காரியமின்றெனினும் காரியம் நிகழாக்கா லில்லையேயல்லது நிகழ்ந்தா லுளதாகாதோவெனின், செய்பவன் காரணத்தைக் குணவேற்றுமை செய்வதன்றி யிலதாயபொருளை ஆக்கற்கிடனின்றென்க.

மண்ணான்வனைந்த கடம் பெயர்த்து மண்ணாபவழி “உள்ளது போகாது” என்னு நியாயத்தாற் கடமிலதாகாமற் போதலமையாது. கடம்போனுந்தோற்றின தோற்ற மிலதாய்ப் போயதன்றிக் கடமான பொருளிருந்தில்லாம போயதன்று. அற்றாகலின், ‘இல்லது இல்லதே’ ‘உள்ளது உள்ளதே.’ இலதை யுளதாக்கவும் உளதை இலதாக்கவும் யாவரானுமாக லரிதென்க.

இனி “இல்லது வாராது” என்பதுண்மையேனும் இல்லாத கடம் உளதாதலில்லை; காரியமான கடம் வனைவதற்குமுன்னர்க் காரணவடிவாக நின்று, காரியப்படுங்கால் வெளிப்பட்டதெனின், காரியப்படுஞான்றும் மண்ணன்றிக் கடமென்னுஞ் சொற்குப் பொருளின்மையானும், காரணமான மண்ணினுங் கடமின்மையானும் கடமென்பதின்றேயென் றையமின்றிக் கூறத்தகுமன்றே? கடமுளதாயவழியன்றா காரணத்தி னிகழ்வதென்றாவது கூறத்தகும்? ஒருவர் மற்றொருவர்பாற் பேசாநின்று சிறிது ஞான்று வேறு காரியத்திலிருந்து பின்னரவரைக் கண்டவழிக் காணாமை நிகழின், அவரில்லின்கணல்லது வேறிடத்தி லிருப்பரென் றனுமானிக்க விடமுளதன்றே? அவரைப் பேசியிராவழி, அவர் மேலையிடங்களி லிருப்பரென் றெங்ஙனமனுமானிக்கற்பாலது? அதுபோற் கடமுளதாகக் கண்டிருப்பேமெனின் கடமில்லாதவழிக்காரணமான மண்ணின்கண் அடங்கியிருக்கலாமென் றனுமானிக்கத்தகும், அங்ஙனம் எத்துணையும் இன்மையான் கடமின்றென்றே கூறத்தகும். இதனானே கடம் மண்ணின்க ணிருக்கவுமின்றென்றும், வெளிப்படவு மின்றென்றுங் கருதப்பட்டதென்க.

பொருள்களிரண்டு மோரிடத்தின்க ணிருப்பதாகாது. ஒன்று வேறொன்றினுக்கு மேலாகவேனுங் கீழாகவேனும் பக்கமாகவேனுமிருக்கவேண்டும். மண்ணுங்கடமுமுளவாயின் மண்ணினுக்குக் கடம்

யாண்டையுள்ளது? யாண்டேனுமுளதாயின் மண்ணினுக்கு வேறாக வே யிருக்கவேண்டும்; அங்ஙன மின்றாம். ஒன்றில் வேறொன்று நிகழ்வது ஒன்றுண்மையு மொன்று தோற்றல்மாத்திரமுமாயி னமையும்; பழுதையின்கண் பாம்பும், கானலின்க ணீரும்போல். அற்றேல் அற்றாக. இங்ஙனமே மண்ணின்கண் கடம் தோற்றமேயன்றிப் பொருளின்றென்றுணர்க.

மண்ணின்கண் வளைவு குவிவு முதலியகுணங்களுளவேயெனின் அன்னவையுந் தோற்றமேயாம். அற்றன்றி ஒரு மண்ணேனும் வளையவுங் குவியவுங் காணப்பட்டதேயன்று. மண்ணனைத்து மொருங்கு வளைதல் குவிதன் முதலிய தருமங்களை யெய்தியவெனின், எல்லா மொருங்கு சேர்ந்துண்டாய தருமம் ஒரோவொன்றினுக்குஞ் சிறிது சிறிதாகவேனுங் காணப்படவேண்டுமன்றே? அவ்வாறின்மையான் மேற்கூறிய தருமங்களையும் பெற்றதே யின்றென்பது துணியப்படுமென்க.

இதுகாறும் கூறிப்போந்த நியாயங்களான் காரணமொன்றேமுக்காலத்தினு முளதென்பதூஉம், காரிய மங்ஙன மில்லதென்பதூஉம், அஃதுஞ் சொன்மாத்திரமுந் தோற்றன்மாத்திரமுமா மென்பதூஉங் கூறினும். இதனானே மண் யாண்டு முளதென்றும், கடம் யாண்டுமில தென்றுந் துணியப்பட்டனவென்க.

ஒரு பொருளுளதாகவேண்டின் முன்னரில்லாதிருந்தே நிகழவேண்டும். இல்லாதிருந்தது இறந்தகாலத்ததாம்; உளதாவது நிகழ்காலத்ததாம். இறப்பும் நிகழ்வு மொன்றெனப்படா. அங்ஙன மாகாதவழி இன்மையாய காலமும் உண்மையாய காலமும் வேறாமன்றே? ஒரோஞான்று இன்மையும் உண்மையுமாத லியையா. கடத்தோற்றமுளதாமிடத்துக் கடமிருந்து தோன்றிற்றா? இல்லாது நிகழ்ந்ததா? என்றாசங்கை நிகழும். ஆண்டை நிகழ்ந்தவழி யிருந்தே நிகழ்ந்ததெனின் இருந்தது தோன்றுவதற் கிடனின்றே; இல்லாததே தோன்றிற்றெனின் இன்மையும் உண்மையுங் காலவேறுபாடெய்தலின் நிகழ்வின்க ணின்மையு முண்மையுங் கூடா. இப்பெற்றியாற் பொருடோன்றற் கிடனின்று. ஒருபொரு ளழிவுபாடெய்த வேண்டின் உள்ள தொருபோதும் அழிவுபாடொருபோது மாதலியையும். அழியுஞான்று இருந்ததழிந்ததா? இல்லாததழிந்ததா? என்ற இக்கடாவினுக் கிருந்த தழிந்ததென்றே விடை கூறவேண்டும். இருப்பதாயவுண்மையும் அழிவதாய வின்மையும் ஒரோஞான் றியையா. இதனானே உள்பொருள் அழிதற் கிடனின்று. "இல்லது வாராது, உள்ளது போகாது" என்னும் நியாயமே ஈண்டைச் சாலும்.

காரியமான கடம் அசத்தேனும் காரணமாய மண்ணேனுஞ் சத்தென்பாமே யெனின் கூறுதும். எது காரணமெனப்படுமோ அது காரியப்படவே வேண்டும். ஆடைக்கு நூல் காரணமேனும் பஞ்சி

ணுக் கந்நால் காரியமாகும். அங்ஙனமே கடத்துக்கு மண் காரணமேனும் அம்மண்ணும் தன்காரணமாய அணுக்களுக்குக் காரியமாம். காரியமென்பதனைத்து மெக்காலத்து மின்றென் றிதுகாறுங் கூறிப் போந்தாமாகலின் அம்மண்ணும் அசத்தெனப் படுமென்க.

காரியமாகவேனுங் காரணமாகவேனு முள்ள தியாதோ அஃதே யுண்மையாயுள்ளது, அஃதே சத்தெனின் காரியமாகவேனுங் காரணமாகவேனு மிருந்ததியாதோ அஃது காரியமாகவேனுங் காரணமாகவேனு மிருக்கவேண்டும். காரியமெனின் முக்காலத்து மின்றென்று துணியப்பட்டதென்க. யாது காரணமெனப்படுமோ அது காரணமாகவே யிராது வேறொன்றினுக்குக் காரியப்பட்டு அசத்தென்னும் பெய ரெய்துகின்றது. காரியகாரணஞ் சங்கிலித்தொடர்போபோன்று முடிவின்றி நிற்குமெனின் அஃதுங் காரியகாரணத்தினடங்கி அசத்தெனப்படுமென்க.

பரமாணு அழிவின்றி யெஞ்ஞான்றுநின்று காரியப்பட்டு மீண்டு மழிந்து காரணமாகவே யிருக்கும், அஃது காரியப்படுவதின்று, எஞ்ஞான்றுங் காரணமாகவே யிருப்பதொன்றுமாகலின் எனின், அனைத்துங் காரியப்பட்டு அஃதொன்றுங் காரியப்படாதெனக் கோடற்கு எனைத்துமே நியாயம் புலப்படுவதின்று. அஃதே காரணமாமெனின், ஓர் பரமாணுவினோடு வேறோர் பரமாணு விரவி, அஃது வேறோர் பரமாணுவினோடு விரவி, இங்ஙனமே காரியப்பட்டு மகத்தாகவேண்டும். முன்னர் ஓரணுவினோடு வேறோர் அணு விரவுமாயின் ஓர் பால்விரவி, ஏனைய மூன்றுபாலும் விரவாதிருக்கவேண்டும். திருட்டாந்தமாக ஒரெலுமிச்சங்கனியோடு வேறோர் கனி விரவுமாயின் ஓர் பால் விரவி யேனைய விரவாதிருக்கக் கண்கூடாகக் கண்டாமன்றே? இவ்வாறே யோர்பொருளோடு வேறொன்று விரவுங்கால் ஓர் பால் விரவி யேனையபால் விரவா. விரவியவழி விரவாதனவு நிகழ்தலின் முன் பின் நடு முதலியன நிகழ்வது ஒருதலையா மென்க. எது உறுப்பினிகழ்வதோ அஃது காரணமாகாமே காரியமேயாம். காரணமாக நிகழ்ந்தன எனைத்துங் காரியமாக, இஃதொன்றுங் காரியப்படாதென்பது உத்திக் கொத்ததன்று. யாது எவ்வாறு நிகழினுங் காரணமொன்றுளதாக வேண்டுமெனின் அஃதேன் காரியப்படாது? உலகத் தோற்றவுக்குக் காரணம் வேண்டற்பாற்றெனின், ஆண்டைக் காரணமாய அணு நிலைபெறுடைத்தாயினன்று ஈண்டையுலகமென்பது சத்தாம்? காரியகாரண முடிவின்றிச் சேறலின் அனவத்தாதோடமெய்தும்; ஆகலின் முடிவின்கண் எத்துணைய ணுவு மிருப்பதாகக் கூறல் எவ்வாற்றானு மியையாதென்க.

கண்ணுக்கும் மனத்துக்கும் விடயமான அணு அசத்தாய்க்கழியினுங் கண்ணுக்கும் மனத்துக்கும் எட்டா அதிநுட்ப அணு உண்மையாயுளதேல் அஃது கண்கூடாமா? அநுமான அளவையா னறிதற்

பாற்று? காண்டலளவையா னறிவதன்று, அனுமான வளவையா னறிதற்பாற்றெனின், கண்கூடான சத்தைக்கொண்டு கண்கூடன்மை யான சத்தையறிவது அனுமானத்துக் கிலக்கணமாம். இவ்விலக்கணத்தான் புகை சத்து; நெருப்புச் சத்து. புகை கண்கூடு; நெருப்பு அங்ஙன மல்லாதது. கண்கூடான புகையா னங்ஙனமல்லாத நெருப்பை யுணர்வது தக்க திருட்டாந்தமாம். இதுபோன்று தாட்டாந்தத்துக்கொவ்வாது. கண்ணுக்கும் மனத்துக்கும் விடயமான அணு அசத்தெனத் துணியப்பட்டது; கண்ணுக்கும் மனத்துக்கு மெட்டாத அணு சத்தெனச் சொல்லப்படுகின்றது கண்கூடாம்புகை சத்தாயிருப்பதுபோன்று தாட்டாந்தத்தும் கண்ணுக்கும் மனத்துக்கும் விடயமான அணு சத்தாகவே யிருக்கவேண்டும். அங்ஙனமன்றி அசத்தாய்ப் போந்தமையின் திருட்டாந்தாபாசமாகின்றது. கண்ணுக்கும் மனத்துக்கும் விடயமான அணு சத்தாயிருப்பதாயின் கண்கூடான இச்சத்தைக்கொண்டு அங்ஙனம் அன்மையான கண்ணுக்கும் மனத்துக்கு மெட்டாத அணு சத்தாயிருப்பதென் றனுமானிக்கலாம். புகையானது ஆராய்ந்துழிப் பனியாய்ப் போந்தவிடத்துப் புகை அசத்தாய்ப்போமன்றோ? அற்றேல் நெருப்பு எங்ஙனஞ் சத்தாம்? அனுமானம் தோற்றம் எதார்த்தமென் றிருதிறத்த. இவற்றுள் தோற்ற அனுமானத்தால் பொருள் சித்தித்திலது; எதார்த்த அனுமானத்தால் பொருள் சித்திக்கும். புகை எதார்த்த அனுமானம்; புகையைப்போல் தோற்றி ஆராய்ச்சியின்கண் அஃதின்றிநின்ற பனி தோற்றவனுமானமாம். எதார்த்த அனுமானப் புகையால் நெருப்புச் சித்திக்குமன்றித் தோற்ற அனுமானப் பனியாற் சித்தித்தற்பாலதா? அங்ஙனமே கண்ணுக்கும் மனத்துக்கும் விடயப்படும் அசத்தான தோற்ற அனுமானத்தால் கண்ணுக்கும் மனத்துக்கு மெட்டாத அணு சித்தித்தற்பாலதன்று.

"உலகினின்றும் பற்பல பொருள்கள் காரியப்பட்டுப் பின்னைக் காரணமாவதைக் கண்டிருக்கின்றோமன்றி, உலகங் காரியப்படுவதை நாமேனும் நம்முன்னோரேனுங் கண்டதுமின்று; கேட்டதுமின்று. காண்ட லுடலானன்றி யாகாது; கேட்டல் ஏனையோர் கூறக் கேட்கவேண்டுவது; கூறல் காண்டலின்றி யெங்ஙனமியையும்? காண்டல் உடலினோடுங்கூடியே நிகழற்பாலதாம்; உடல் உலகன்றி யின்றாம். உலகத்தின் இன்மை யுடலன்றிப் பிறிதொன்றிருந்து கண்டாரைக் காண்கின்றிலேம். அற்றாகலின் உலகமெஞ்ஞான்று முள்ளது; காரியமன்று, காரணமே" யெனின் கூறுதும்.

எவ்வெப்பொருளினையு மாராயின் ஒன்றன்கூட்டம், பலவினீட்ட மென்றிருத்த. ஒன்றன்கூட்டம் பலவினீட்ட மென்பவற்றின் பாற்படுவனவன்றி யெப்பொருளும் யாண்டு முளவாகா. திருட்டாந்தமாகக் கட மொன்றன்கூட்டமா? பலவினீட்டமா? எனின் ஒன்றன் கூட்டமேயாம். ஒன்றன்கூட்டமாய மண்ணையன்றி முக்காலத்தினுங்

கடமென்பதொன்றின்றாம்; அம்மண்ணு மொன்றன் கூட்டமான அணுவினையன்றி யாகா. பலவினீட்டமும் இவ்வாறே காண்க. இங்ஙனமே ஒவ்வொரு பொருளினையும் ஆராயுங்கால் இன்றாகவே முடியும். உலக மிங்ஙனமாய ஆராய்ச்சியான் இன்றெனப்படும். ஒன்றன் கூட்டம், பலவினீட்டமென்பன காரணமாகக் கூடிநின்று வேறாகத் தோற்றுமவசரத்தினைக் காரியமெனப்படும். முன்னரே யணுவினைப் பூருவபக்கப்படுத்தினும்; ஆண்டை யுணர்க.

"உலகங் காரியப்படுவதைக் கண்டாருங் கேட்டாருமின்றாகலின் எஞ்ஞான்றும் நித்திய" மேல், உலகஞ்சத்தாய் எஞ்ஞான்றும் நித்தியமா? அசத்தாய் எஞ்ஞான்றும் நித்தியமா? சத்தாய் எஞ்ஞான்றும் நித்தியமேல் சத்தென்றுரைப்பது எவ்வாற்றானும் இயைபந்திலது. அசத்தாய்நின்று நித்தியமேல் இல்லாதது நித்தியமென்றுரைத்தலா லென்பயன்? இல்லாத முயற்கொம்பினையும் நித்தியமென்றுரைப்பதற்கு ஒக்குமன்றா? உலகம் எக்காலத்து மின்றாகலின் உலகத்தினைக் காரியமென்றேனுங் காரணமென்றேனுங் கூறுதலெத்துணையும் இயையாதென்க.

இதுகாறுங் கூறிப்போந்ததனான் உலகம் அசத்தாய்க் கழியினுங் கண்கூடாக இன்பத்துன்பங்களைத் துய்க்கின்றோம்; யாங்ஙனம் உலகை அசத்தென்றுரைப்பதெனிற் கூறுதும்:—இன்பத்துன்பங்களைத் துய்ப்பார் யார்? நாமே. நாம் யார்? மானிடர். மானிடர் காரியமா? காரணமா? காரியம். காரியம் பொய்யென்பதனை முன்னரே விளக்கினும். காரணமான உறுப்போ, அவை தாம், தமது காரணமாய ஊன், குருதி, என்பு முதலியவற்றை நோக்கக் காரியப்பட்டுப் பொய்யேயாம். இவ்வாறே ஒரோவொன்றும் பொய்யாமிடத்து இன்பத்துன்பங்களும் அவற்றினைத் துய்க்கும் அனுபவங்களும் பொய்யாகப்போதலாகும். இஃதென்னை? வாயடி கைபடியா யிருக்கின்றதன்றி ஐய நிகழ்ச்சி யொழிந்த தின்றெனின், சொப்பன முழுவதூஉம் பொய்யாமன்றே? சொப்பனத்திற் கண்கூடாகக் கண்டிருக்கும் இன்பத் துன்பங்களும் அவற்றினுக்கு முதலாயுள்ள சொப்பனவுலகமும் பொய்யென்று துணிந்ததின்றா? அவ்வாறே யிவ்வுலகினையும் இன்பத்துன்பங்களையும் ஏன் பொய்யென் றியம்பற்பாற்றன்று?

ஒருபொருளினை யறியவேண்டுவான் அப்பொருட்கு வேறாய் நின்றே யறியவேண்டும். வீட்டினை யறியவேண்டுவான் வீட்டிற்கு வேறாய்நின்றே யறியவேண்டும். இவ்வாறே யெவற்றினையும் உணர்கின்றாம். அற்றேல், உலகத்தை யறியவேண்டுவான் உலகினுக்கு வேறாய்நின்றே யறியவேண்டும். அவ்வாறு கண்டுரைத்தா ரொருவருமிலர். காண்பவர் சமட்டியான உலக அமிச வியட்டி சரீரத்தைக் கொண்டு உணர்கின்றமையான் அது வேறுபட்டு உணர்ந்ததாக யாங்ஙனம் கூறற்கிடனாகும்? அசத்தியமான சொப்பன சகத்தின்கண்

அச்சகத்தின் அமிச அசத்திய சரீரங்கொண்டு அச்சகத்தை ஆண்டுக் காணுந்துணையும் அது சத்தியமாகவே நிகழினும், அச்சகத்தினையும் அச்சகத்தின் அமிச சரீரத்தினையும் விட்டு வேறாயிருக்கும் இஞ்ஞான்று தோன்றாது பொய்பாகப் போந்ததின்றா? சொப்பனவத்தையின்கண் சொப்பன சகத்தைச் சத்தியமாகக் காணினும் காணுமஞ்ஞான்றும் அச்சொப்பன சகம் யாங்ஙனமித்தையோ, அங்ஙனமே இச்சகத்தினையும் இச்சகத்தின் அமிசமான சரீரத்தைக்கொண்டு காணுந்துணையும் சத்தியமாகத் தோற்றினும் அங்ஙனமே இச்சகமும் மித்தையென்றுரைத்தல் ஏனடாது? இதனானே ஒரு பொருளினையறியவேண்டின் அறிபவன் வேறாயிருந்தே யுணரவேண்டுமென்றும், அங்ஙனமின்றி யதுவாயிருந்துணர்தல் பொய்யு மெய்யுமாகத் தோற்றுமென்றுங் கூறியவாறாயிற்று.

ஒருபொருளினை யுளது இலதென் றாயுங்கால் அப்பொருளின் ஓர்பால் மற்றோர் பாலினோடு உற்றறிதலானே யுளதெனக்கோடலெவ்வாற்றானு மமையாது. அங்ஙனங் கொள்ளுங்கால் கானல்நீரின் அலை மற்றோரலையோடு பொருந்துவதனானே அக்கானல் நீரும் உண்டெனக் கொள்ளவரும். இங்ஙனமே யுலகத்தின் ஓர் பகுதி மற்றோர் பகுதியினோடு பொருந்துமாற்றானே யறிஞர் உலகைச் சத்தென்று ஓதாரென்க.

இவையனைத்தும் நியாயமேனுங் கண்கூடாகக் கடத்தைவனைந்த நிமித்தகாரணனான குலாலனையும், துணைக்காரணமாய தண்டு சக்கரங்களையும் எவ்வாற்றான் அசத்தியமாகக் கூறற்பாற்றெனின், குலாலனையுந் தண்டுசக்கரங்களையுங் காரியகாரண பக்கமாய் ஆராயுமிடத்துப் பொய்பாக முடிகின்றதன்றோ? சொப்பனத்தின்கண் குலாலன் தண்டு சக்கரங்களைக்கொண்டு கடமுதலானவற்றை வனையக்காணினுங் குலாலனுந் தண்டு சக்கரங்களும் அவற்றினுக்கு உபாதான காரணமான சகமும் யாங்ஙனம் பொய்யாமோ, அங்ஙனமே யிஞ்ஞான்றும் பொய்யென்னுமை யாதுபற்றியென்க. இதனானே யுலகமென்பது அசத்தென்றே துணிதற்பாற்றென்க.

(1886ஆ ஆகஸ்டுமீ 23உசுதேசமித்திரன், 30உப்ரம்மவித்தியா) இந்து.

உலகம் அசத்தா? சத்தா?

இந்தச் சங்கையைப்பற்றி யாலோசிக்குமிடத்து, உலகத்தினது இலக்கணம் இன்னதென்றும், சத்தினிலக்கணம் இன்னதென்றும், அசத்தினிலக்கணம் இன்னதென்றும் முன்னம் வரையறுத்துப் பின் அவ்வுலகம் சத்தின்பாற் படத்தக்கதோ அல்லது அசத்தின்பாற் படத்தக்கதோவெனத் தருக்கித்துப் பாற்படுத்தல் வேண்டும். இங்ஙனஞ் செய்யாமல் சத்து அசத்துகளைமாத்திரம் தமக்குத் தோன்றிய

மட்டும் ஒருவாறு வரையறுத்துவிட்டு, வரையறப்படுத்காத உலகத்தைச் சத்தென்றாவது அசத்தென்றாவது தீர்மானித்தலைக்காட்டினும் அந்தகநியாயம் வேறென்றுளதோ? நிலக்கரி உலோகமா? கல்லா? வென ஆசங்கை நிகழுழி, நிலக்கரி இன்னதென்றும், உலோகம் இன்னதென்றும், கல் இன்னதென்றும் இலக்ஷணசித்தப்பட்டாலன்று இதன் இலக்கணம் இதனோடு பொருத்தம். ஆதலால் அனுதரும சம்பந்த வாற்றலால் இது இதுவேயாம் என்று துணிதல் கூடும்.

1886வரு ஆகஸ்டுமீ 23உ மித்திரனில் வெளியாகிய "இந்து" வைப்போலாது, நாம் உலகம் இன்னதென்றும், சத்து இன்னதென்றும், அசத்து இன்னதென்றும் முன்னம் வரையறுத்து, பின் உலகம் சத்தென்றும் அசத்தென்றும் தீர்மானிப்பாம்.

உலகம், அல்லது வஸ்து, அல்லது பூதியம் என்பது தனக்கென ஓர் சொரூபமின்றி, முக்காலத்துநிகழு மெல்லாச் சொரூபங்களுக்குந் தாமாய்க் குருத்துவம், இயக்கம், ஆகருஷிணம், திரிவு முதலியவற்றை அபின்னமா யாண்டுமுடைய உண்மைப்பொருள்; இதுவே சத்தென்றும் சொல்லப்படும்.

இந்தச் சத்தினுடைய அபாவமே அசத்தாதலாலும், அசத்து யாண்டு மிலதாதலாலும் இல்பொருள்களுக்கு இலக்கணமு மின்றென்க.

ஆதலால் உலகம் சத்தின்பாற்படுமேயல்லாது சத்திற்குச் சர்வ விரோதமாகிய அசத்தின்பாற்படாது.

ஆனல் மேற்சொன்ன பத்திரிகையில் உலகம் அசத்து என்று காட்டிய ஸ்ரீமான் "இந்து" வின் நியாயம் போலியேயாமெனின் முக்காலும் போலியே. அதை ஈண்டுக் காட்டுவாம்.

இவ்விந்து, "சத்து யாண்டுமுள்ளது" என்று கூறினரேயல்லது அது இதுவென்று காட்டினரில்லை. சத்துக்கு உதாரணமாகப் படத்தைக் கூறினரோவெனின், படம் யாண்டு முள்ளதா! படம் காரணமா; காரியமா; காரியமெனின், இவர் கூறிய கடநாஸ்தி நியாயமே இவருக்கு விரோதமாகின்றது. படத்தை வியவகாரிகமாய்க் கூறியதே யல்லாமல் பாரமார்த்திகத்திற்கு அன்று எனின், யாண்டுமுள்ளது பாரமார்த்திக சத்தா? வியவகாரிக சத்தா? பாரமார்த்திக சத்தெனின், இலக்கணங்கூறியது ஒன்றற்கும் எடுத்துக்காட்டியது ஒன்றுமாகின்றமையால் 'பாம்புகடிக்குத் தேள்விஷந்தீரு மருந்தளித்ததுபோலன்றே இருக்கின்றது. 'அசத்து யாண்டுமிலது' என்று கூறி, பின்னர்க் காட்சியைக் காணப்படுபொருளாகவும், சொல்லைப் பொருளாகவும், காட்சி, சொல் ஆகிய இவ்விரண்டையும் பொருளாகவும் மயங்கி உதா

ரணங் கூறியுள்ளார். இலக்ஷணமெல்லாம் அவற்றை யேற்றுள்ள இலக்ஷியப்பொருளுக்கே யல்லாமல், இல்பொருளுக்கன்றே. இல்பொருளுக்கு உதாரணம் பகர்ந்தது என்னபயனைக்கருதியோ? மேலும் இவ்வாதி உற்பத்திக்கும் உருமாற்றத்திற்கும் பேதமுணராமல் மயங்கி வாதாடுகின்றார். உற்பத்தியாவது முதற்காரண மில்லாமல் உண்டாவது. உற்பத்தியை வைதிகிகள சிருஷ்டியென்றுங் கூறுவர். "இல்லது வாராது" என்ற நியாயம் இதற்கே பொருந்துமாதலால், இதற்கு உதாரணமும் கிடையாது. உருத்திரிதலாவது ஓர் உரு மற்றொருருவாய்த்திரிதல். இதற்குஉதாரணம்கடமே. கடமென்பது ஓர்வகை உருவிற்குத் தமிழ்நாட்டார்சொற்சுருக்கமாய் வைத்துக்கொண்ட கற்பிதப்பெயரேயல்லது வேறல்ல. இந்தக் கடம் மண்ணாயிருந்தாலும் கடம்தான், பொன்னாயிருந்தாலும் கடம் தான், செம்பாயிருந்தாலும் கடம்தான், பித்தளையாயிருந்தாலும் கடம்தான். கடஉருவம் மாறினும் வஸ்துவாகிய மண், பொன், செம்பு, பித்தளை இவைகள் மாறவும் மாறா; அழியவும் அழியா. ஆதலால்தான் 'உள்ளது போகாது' என்னும் நியாயமும் இதற்கே பொருந்தும்.

இன்னும் இவர்கூறிய சத்து அசத்துக்களின் லக்ஷணவியாப்தி தோஷங்களைப்பற்றி விசாரிப்போம். சத்துக்கு அசத்து சர்வவிரோதமாயின், இவர் சொன்ன இலக்கணங்களில் வியாப்தி தோஷமின்று. சர்வவிரோதமல்லாக்கால், வியாப்திதோஷம் கூறுதேயமையும். ஆதலால் அவ்விலக்கணங்கள் சர்வ விரோதமா அல்லது வேறு விரோதமா வென்பதனை நியாயசாத்திரப் பிரமாணத்தால் விளக்கிக்காட்டுவாம்:—

விரோதம் சர்வவிரோதமென்றும், சம்பவவிரோதமென்றும், பாரிசேடவிரோதமென்றும், சகளவிரோதமென்றும் நான்குவகைப் படும். இவற்றுள்,

1.	சர்வவிரோதம்	யாண்டுமுள்ளது சத்து ஓர்போதும் இல்லது அசத்து
2.	சம்பவவிரோதம்	யாண்டுமுள்ளது சத்து சிலபோதுள்ளது சத்து
3.	பாரிசேடவிரோதம்	யாண்டுமுள்ளது சத்து யாண்டுமில்லது அசத்து
4.	சகளவிரோதம்	சிலபோதுள்ளது சத்து சிலபோதில்லது அசத்து

மேலே இவர் கூறிய இலக்கணப்படி சத்துக்கும் அசத்துக்கும் உள்ள விரோதம் சிறப்பாந்தன்மையினதாகிய 'சர்வவிரோதத்துளடங்காமல், சிறப்பின்மையாகிய பாரிசேடவிரோதத்து ளடங்குகின்றமையால், அசத்திற்குக் கூறிய போலி இலக்கணத்தில் வியாப்திதோஷமுண்டாகின்றது. இவ்வியாப்தி தோஷத்தை நையாயித்துக்காட்டுவோம்.

ஏது அசத்தோ அது யாண்டுமில்லது.
கடம் அசத்து என்றதனால்
கடம் யாண்டுமில்லது.

வினைந்ததற்குப் பின்னும் அழிவுபாட்டிற்கு முன்னும் கடமுண்டாதலால் கடம் யாண்டுமில்லதாய் எங்ஙனமாகும்? கடம் யாண்டுமில்லதல்லாதபோது அசத்தெப்படியாகும்? கடம் யாண்டுமுள்ளது மல்லவாதலால் சத்தும் அன்று. இவர் கூறிய இலக்கணப்படி கடம் சத்தும் ஆகாமல் அசத்தும் ஆகாமல் சங்கா சங்கேதநிலையில் நிற்கின்றது; ஆதலால் இவர் கூறிய அசத்திலக்கணத்தோடு இவரது உதாரணமே முரண்படுகின்றது. உலகத்திலே நையாயிகரெல்லாரும் ஒன்றைக் காரணமென்றும், மற்றொன்றைக் காரியமென்றுங் குறிப்பது சொரூபத்தை நோக்கியே யல்லாமல் வஸ்துவை நோக்கியல்ல. வஸ்துவோ காரணத்திற்கும் காரியத்திற்கும் நியதமாயிருப்பது. மனோபாவனையால் காரணத்தை நோக்குழிக் காரியமும், காரியத்தை நோக்குழிக் காரணமும் இன்மையாய்க் காணப்படினும் இவ்விரண்டிற்கும் நியதமாயுள்ளது எதுவோ, அது எக்காலத்தும் உள்ளதே; அதுவே சத்தென்பதும், வஸ்துவென்பதும், உலகமென்பதுமாதலால், உலகு அசத்தாதல் ஒருக்காலுமில்லை. இதனைச் சிந்தித்து இந்துவென்னப்பட்ட நமது நன்பர் பின் மறுமொழி பகர்வாராக.

(1886ஆ செப்டெம்பர்மீ 26உ தத்துவவிவேசினி.) ஹிதோபதேசி.

விடை கூறல்.

"உலகம் சத்தா? அசத்தா? என்பது" இவ்விடயத்தினைச் சுட்டி முன்னர்ச் சுதேசமித்திரனினும், பின்னர்ப் பிரமவித்தையினும் வரைந்திருந்தாம். அதனை "ஹிதோபதேசியார்" என்னும் நமது நண்பரொருவர் "தத்துவவிவேசினி" என்னும் பத்திரிகையின்கண் தமக்குத் தோன்றியாங்கு பொறித்து விளக்கினர். அதனை 1886ஆ அக்டோபர்மீ 30உ பிரசுரமான பிரமவித்தையின்கண்ணும் காண்க. இனி யெமக்குப் போந்தவாறு நிறுத்துவான் பின்வருமாறு வரைகின்றும்:—

'உலகம் சத்தா? அசத்தா?' என்புழி யீண்டை யுலகவிலக்கணமெனைத்துணையும் கூறகில்லாது ஏனைய விரண்டற்கு மிலக்கணமுணர்த்திய தெம்மாட்டுக் குற்றமென் றுணர்த்தியபின்னர், அவ்விலக்கணமுணர்த்திய தொடங்கும் தாமேனும் அம்மூன்றனுக்கு நன்குணர்த்தினரா? இன்றே. இவர் உலகினிலக்கணமே சத்துக்கு மென்பதன்றி உலகவிலக்கணமும், குருத்துவமுதலிய சில குணங்களையுடைய உண்மைப்பொருளே யென்றனர். அவ்விலக்கணத்தின்பா லுண்மைப் பொருளெனச் சேர்த்தற்குக் காரணம் யாதோ அறிந்திலமென்க. இவ்வாறு இலக்கணங் கூறிப்போந்து அதனையே சத்தெனக்கொண்டு,

இதனானே தாமிம்மூன்றனுக்கு மிலக்கண முணர்த்தியதூஉம் சால வியக்கற்பாற்றேயாம். உலகம் சத்து என்னுமிரண்டனுள் ஒன்றனுக் கிலக்கண முணர்த்தி மற்றொன்றனை யிவருங் கூறாதொழிந்தனர்; யாமு மவ்வாறே கூறாதொழிந்தாம். இதனானே நம்பால் யாது குறைவு? இன்னோர்க்கஃதேதனின்று? இவர் உலகமே சத்து, சத்தே யுலகமென்றன்றோ வுணர்த்தினாரெனின் அஃதூஉ மியைபுடைத்தன் றென்க. அஃதங்ஙனமேல் இவ்வாசங்கை யாங்ஙன நிகழும்? கடம் கலசமா? படமா? என்றோ ராசங்கையுளதே லஃதியையும். இவர் எடுத்துக்காட்டிய நிலக்கரி உலோகமா? கல்லா? என்னு மாசங்கையின் கண்நிலக்கரியென்பதூஉம்,உலோகமென்பதூஉம் பரியாயபதமன்றே! இவற்றுள் ஒன்று சாமானியமும், மற்றொன்று விசேடமுமா மென்க. ஈண்டங்ஙனமின்றி யிரண்டு மொரோவொருபொருள் கருதியதெனக் கூறி, மீண்டுங் கூறியதுகூற லென்னுங் குற்றத்திற் கிடனாகா தியாங்ஙனந் தப்புவர்?

உலகமென்னுஞ் சொற்பொருளை நன்காராய்ந்துழி அஃது காணப்படுவதென்னும் பொருட்டதாகலின் காணப்படுவதென்பதற் குலகமென்ப தியையும். இன்னோர் நையாயிகநூல் வல்லுனர்போன்று வரைந்தனரே யல்லது சத்தநூல் வல்லார்போன்றல்லர். இஃதியாங்ஙன மெனின் காட்டுதும்:—

உலகமென்னுஞ் சொல் (லோக்) காண்டலெனப் பொருள்படும் வடமொழிப்பகுதியென் றுய்த்துணர்வரேல் உலகமென்ப துண்மைப் பொருளென் றெவ்வாற்றானுங் கூறத் துணியார். இனி உலகமெனி னும் திருசியமெனினு மொக்கும். உலகமென்னும் பதார்த்த வியல் பினை நன்குணர்ந்துகொள்ளு நிலையினன்றே யிவ்வாசங்கை யெழும்? அதனானே யிவ்வாசங்கையின் விடயமான விரண்டு தன்மைகளையும் உணர்த்துவான்வேண்டியதே யின்றியமையாமை யுடைத்தென்பது கருதி, யிவ்விரண்டினுக்கே யிலக்கணம் பரக்கக்காட்டினாம். சத்து, அசத்தென்னு மிவ்விரு சொற்களுக்கும் பொருள், உள்பொருளினை யும் இல்பொருளினையுமே புணர்த்தினமையே சாலுமென்பதனை வட நூல் வல்லார்வாய்க் கேட்டுணர்க. அங்ஙன முணராமாட்டாமையானே கடமென்னும்பெயர் தமிழ்நாட்டாரிட்டு வழங்குவதெனக் கூறி யுள்ளார்.

"உலகம், அல்லது வஸ்து, அல்லது பூதியம் என்பது தனக் கெனவோர் சொரூப மின்றி முக்காலத்துநிகழு மெல்லாச்சொரூபங்க ளுந் தாமாய்க் குருத்துவம், இயக்கம், ஆகருஷணம், திரிவு முதலிய வற்றை யபின்னமா யாண்டு முடைய வுண்மைப்பொருள்; இதுவே சத்தென்றுஞ் சொல்லப்படும்." எனக் கூறினர். உலகம் அல்லது வஸ்து அல்லது பூதியம் என்பது தனக்கென்றோர் சொரூபமிலதென்று கூறிப்போந்த இவரே, பிறண்டும் எல்லாச்சொரூபங்களுந் தாமா

யென முராணிக் குருத்துவம், இயக்கம், ஆகருஷணம், திரிவு முதலிய
வற்றை யபின்னமாகவுடையவுண்மைப்பொருளென்றனர். உண்மைப்
பொரு ளிஃதென வெள்ளிடை மலைபோல விளக்காது குருத்துவ
முதலனவற்றை வாளா கூறியதனாற் போந்த பயனென்னை? இதுவே
சத்தென்றும் சொல்லப்படு மென்பதனுள் இதுவெனுஞ் சுட்டெதன்
மேற்று? அச்சுட்டினை யேற்கும் பொருளின்னதெனக் குறிப்பதற்
கெனைத்துணையும் வகையின்றே! இதற் கியாது கூறுவதெனக் கடாவி
யொழிக. "இந்தச் சத்தினுடைய அபாவமே அசத்தாதலாலும்,
அசத்து யாண்டு மிலதாதலாலும் இல்பொருளுக் கிலக்கணமு மின்
றென்க" என்றனர். சத்து இனைத்தென் றுணர்த்தாமே சத்தினபாவம்
அசத்தென்றதூஉம், அசத்து யாண்டுமிலதென்றதூஉம், இல்பொரு
ளிற் கிலக்கண மின்றென்றதூஉம் பயனில் கூற்றேயா மென்றொழிக.
இது நிற்க ;

இலக்கணக்குற்றஞ் சிலவெடுத்துக் கூறுவான்றொடங்கி இல்
பொருளுக்கிலையுமா வெனக் கூறினர். அற்றேல் தாங்கற்ற தருக்க
நூலில் அபாவ நான்கு மெற்றுக்கு மறந்தனரோ! அஃதுணர்கின்
றிலம். அற்றேல் அஃதாக.

இனி இலக்கணக்குற்ற மெடுத்துரைக்கப் போந்து இலக்கியங்
காட்டி நிறுத்திய தமைவுடைத் தன்றென்றனர். அஃது நன்று!
நன்று!! இதுநிற்க; சததுக்குதாரணங் காட்டியதூஉம் போலியென்ற
னர். அந்தோ! வியவகாரிகசத்துவாயிலாகப் பாரமார்த்திகசத்தை
உணர்த்துவான் அங்ஙனமுரைத்ததல்லது உள்ளவாறு சத்தெனப்
படுவது பிரமமேனும், விவகாரத்திற் காட்டுவான் றொடங்கிய இத
னைக் காட்டி நிறுத்தியதூஉ மென்க.

காரண காரியங்க ளனைத்தினுக்கு மூலமாயுள்ளது உலகப்
பொருள்; அதனையே சத்தெனத் துணிந்தவர் இங்ஙனமே யன்று
கடம் சத்தெனப்படுவதென்றனர்? யாம் கூறியாங் கஃது சத்தாகாதே
னும் இவருரைத்தவாற்றான் சத்தாக வியைவ தியாண்டையதென்க.
இனி "உற்பத்தியாவது முதற்காரணமில்லாம லுண்டாவது" என்
றுரைத்துப்பிறுண்டும் "உற்பத்திக்கும்உருமாற்றத்திற்கும்பேதமுண
ராமல் மயங்கி வாதாடுகின்றார்" என்றனர். இஃது நன்று! நன்று!!
எம்மை வசை கூறுவா ணிப்புதுவிதி புனைந்ததூஉமன்றி "வைதிகி
கள் சிருட்டியென்றுங் கூறுவர்" என்றனர். இனி இவர் வரைந்த
நூலினைக் கற்கப்புகுவார் அங்ஙனங் கோடலமையும். இவர் கற்று
ணர்ந்த தருக்கநூலின்கண் உற்பத்திக்கிலக்கணம் முதற்காரணத்திற்
றோன்றும் பொருள் முதற்கணத்தோடியையுடைத் தென்றன்று இயம்
புந் தகைமைத்து? கணமென்பது ஓர்காலநுட்பப்பகுதி என்க.

கடமோருருவிற்குப் பெயரொன்றனாகலின் கடம் குணப்பெய
ரேயல்லது பொருட்பெயராத லெத்துணையு மியையாதென்க. அற்றேல்

கடத்தைக்கொண்டுவா, கடத்தின்க ணீரிருக்கின்றது இன்ன விவ
காரங்க ளெவ்வாற்று ணியையும்? உருவங் குணமாகலின் அதற்குத்
தொழிலின்று. அஃது நீரிருப்பதற் கெவ்வாற்று ணாதார மெனற்பா
லது? இவர், நாம் கூறிய இலக்கணத்தின்கண் வியாத்திதோட முண்
டென முன்னர்க்காட்ட முயன்று, அத்தோடங்களைத் தாமறிந்த
துணையும் எடுத்துக்காட்டியும் இறுதியின்கண் எனைத்துணையும்
பயன்படாது சென்றமையின் யாதோ சில கூறி விடுத்தனர். சர்வ
விரோதம் யாண்டுமுள்ளது ஒருபோது மில்லது என்றும், பாரிசேட
விரோதம் யாண்டுமுள்ளது யாண்டு மில்லது என்றும், இரண்ட
னுள்ளும் முற்கூறிய விரோதம் விசேடமென்றும், பின்னருரைத்த
மை சாமானியமென்றும் கூறி, யாம் கூறிப்போந்தமையைச் சாமா
னியத்து ளடக்கினர். இவர் கூறியாங்கு முதல் விரோதத்தினுக்கும்
மற்றொன்றினுக்கும் ஒருபோதுமென்னும் பதமும், அதன் பரியாய
மாகிய யாண்டுமென்றதூஉம் சொன்மாத்திரையான் வேறுபாடுடைய
தேனும் பொருள்மாத்திரையான் யாங்ஙனம் வேறுபாடுடையதெனக்
கடாவிடுமொழிக. இன்னோரன்னவற்றை யிவரே நன்குணர்த்த வல்லு
னர்போலும்! யாண்டும் வியாத்திதோட மென்பதனை மறவியின்றிக்
கூறுமாற்ற லுடையாராகலின் எந்நூலுள் எவ்வாசிரியர் கூறியுள்ளா
ரென் றையுறுவார்க்கு அதனைத் தெற்றென் றுணர்த்துவரென்க.

“நையாயிக ரெல்லாரும் ஒன்றைக் காரணமென்றும், மற்றொன்
றைக் காரியமென்றும் குறிப்பது சொரூபத்தை நோக்கியே யல்லா
மல் வஸ்துவை நோக்கியல்ல” வென்றும், காரணம் காரியம் இவ்விர
ண்டு மனோபாவனை யென்றுங் கூறிப்போந்தனர். இதனானே வஸ்து
சொரூப மன்றென்பதுவே திண்ணமென்றன்று புலப்படுகின்றது?
இது நிற்க; வஸ்து தனக்கெனச் சொரூப மின்றெனமுன்னர்க் கூறிப்
போந்து, பின்னர்ச் சொரூபத்திற்கே காரணமென்றுங் காரியமென்
றுங் கூறிய தெற்றிற்கென்க. “மனோபாவனையால் காரணத்தை
நோக்குழிக் காரியமும், காரியத்தை நோக்குழிக் காரணமும், இன்மை
யாகக் காணப்படினும் இவ்விரண்டிற்கும் நியதமாயுள்ள தெதுவோ,
அது எக்காலத்துமுள்ளதே; அதுவே சத்தென்பதும் வஸ்து வென்
பதும் உலகமென்பது மாதலால், உலகு அசத்தாதல் ஒருக்காலு
மில்லை” என்றனர். காரியமுங் காரணமு மனோபாவனையெனக் கூறிய
வாற்றான் வஸ்துவின்கண் காரியமும் காரணமு மின்றென்றே
துணிபு. காரணத்தை நோக்குங்காற் காரியமென்ப தின்மையேனுங்
காரியத்தை நோக்குங்காற் காரணமின்றென் றியாங்ஙனங் கூறற்
பாற்று? மண்ணை நோக்குங்காற் கடமென்ப தின்மையேனுங் கடத்
தை நோக்குங்கால் மண்ணென்ப தியாங்ஙன மின்மையாம்? ‘வஸ்து
வே காரணத்திற்கும் காரியத்திற்கு நியதமாயிருப்பது’ என்றுங்
கூறியுள்ளார். அவ்வஸ்து காரியமா? காரணமா? இரண்டி னொன்று
கற்பாலதே துணிபு. காரியமெனின் அதற்கு மோர் காரண முளதா

தல் வேண்டும்; காரணமெனின் அஃது மற்றொன்றினுக்குக் காரியப் படல் வேண்டும். இங்ஙன முடிபின்றிப்போதலின் எல்லையின்மை யென்னும் அனவத்தாதோட மெய்தும். யாம் ஆண்டை அணுகாரண வாதமறுப்பு நன்குணர்த்தின மாகலி னிவர் இறுதியின்கண் பொருளின்னதெனக் கூறிற்றிலர்.

இனி "உருத்திரிதலாவது ஓருரு மற்றோருருவாய்த் திரிதல்; இதற்குதாரணங் கடமே" என்றும், "கடவுருவமாறினு மண் மாறாது" என்று முரைத்தனர். உருவென்பது குணம். மண்ணின்கண் யாதுகுண நிகழ்ந்தது? வளைதல், குவிதன் முதலனவெனின் எம்மண் அக்குணங்களை யெய்திற்று? எனைத்துந் தலைப்பெய்தெனின் தனித் தனி மண்ணும் அக்குணத்தைச் சிறிது சிறிதேனு மெய்தினன்றிக் கூறற்பாற்றன்று. காரிய மாறினும் காரண மாறாதென்பதனான் வஸ்துவாகிய மண் மாறாதென்றனர். யாது காரண மெனப்படுமோ, அஃது மற்றொன்றினுக்குக் காரியமெனப்படுமே. இங்ஙனமாகலின் அழிவுபாடெய்தாக் காரணம் யாது? அக்காரணத்திற் குறுப்புளதா? இலதா? உளதாயின் காரணமெனக் கூறற்பாற்றன்று; இலதேல் காரிய மாதற் கியையுடைத்தன்று. இதுநிற்க;

"வனைந்த பின்னும் அழிவுபாட்டிற்கு முன்னுங் கடமுண்டாதலால் கடம் யாண்டு மில்லதா யெங்ஙனமாகும்? கடம் யாண்டு மில்லதல்லாதபோது அசத்தெப்படியாகும்?" என்றனர். அற்றேல் வனைந்த பின்னரும் அழிவுபாட்டிற்கு முன்னருங்கடமுளதென்றிவர்க்கியாவர் கூறியுள்ளார்? யாம் அங்ஙனம் இதுகாறுங் கூறிப்போந்தோமல்லேம். பெயர்த்தும் யாம் வரைந்ததனைச் சிறிது நோக்குங்கா லஃது பூர்வ பக்கத்தவர் துணிபென்றுணர்ந்து "கடம் சத்து மாகாமல் அசத்து மாகாமல் சங்காசங்கேத நிலையி னிற்கின்றது" என்றெம்பாற் கூறிப் போந்த குற்றமெனைத்துனையுங் குற்றமன்றெனத் தாமே தெரிப்பர். இனி, இவர் முன்னர்க் கூறிப்போந்த வுலகவிலக்கணம் வேறு; இறுதிக்கட் கூறிப்போந்த வுலகமென்னுஞ் சொற்பொருள் வேறு. அற்றாகலின் தெள்ளிதி னோர்ந்துணர்வாராக.

(1887ஆ ஜனவரிமீ 30உ ப்ரம்மவித்தியா.) இந்து.

சக்தி.

உலகின்கண் உளதாய பொருளனைத்தினையு மாராயுங்கால் அவற்றின் றோற்றஞ் சத்தியின்கணன்றி வேறன்றென்க. சத்தியெனினும், ஆற்றலெனினும், வன்மையெனினு மொக்கும். அற்றாகலின் சத்தியென்பது இனைத்தென்று விவகரிப்பாம்:—

கடம் மண்ணினின்று மெழுகின்றதேனும் நேர்மண்ணினின்று மெழுந்ததன்று. மண்ணினின்று மெழுந்ததுண்டேல் கடல், யாறு

முதலான மண்ணினின்று முளைதாகவேண்டும். அங்ஙனமின்று. கடசத்தி யெய்திய மண்ணினின்றுந் தோன்றியதென்பது திண்ணம். அற்றாகலின், கடத்துக்குச் சத்தியே யுபாதானகாரணமென்க. ஆடைக்கு நூலும் பஞ்சுங் காரணமாக நிகழினும் நூல் யாங்ஙனம் நேர் காரணமாமோ, அங்ஙனமே மண்ணுஞ் சத்தியுங் காரணமாக நிகழினுஞ் சத்தி நேர் காரணமாமென்பது தெற்றென்றுணர்க. அவ்வப் பொருட்கண்ணும் நியதமாய சத்திகள் பலவுள. எவ்வெப்பொருளினும் நியதசத்திகள் யாவை யுளவாமோ அன்னவை யவ்வப் பொருளினின்று மெழுவது திண்ணம். அவையே காரியமெனப்படுமென்க.

இனி மண்ணினின்றுங் கடமுதலியன வெழுகின்றனவேயன்றிப் படமுதலியன வெழக் கண்டாமின்று. இங்ஙனமே அவ்வப்பொருளினின்றும் அன்னவற்றிற்கினமாய பொருள்களே தோன்றுகின்றன. அவ்வப்பொருள்கள் தோன்றற்கு உபாதானகாரணமாய சத்தி, கண்கூடா நிகழ்வதன்று. யாங்ஙனமெனின் சத்தன், சத்தி, காரியமென்னு மிம்மூன்றனுள்ளுஞ் சத்தனுங் காரியமுங் கண்கூடாம் பகுதிய; சத்தியெனின் அற்றன்று. காரியம் புறத்தே தோன்றுவழிச் சத்தி யுளதெனக் கூறலொல்லாது. காரியந் தோற்றும் ஞான்றும், அங்ஙன மாகாஞான்றும் சத்தி கண்கூடாகப் புலப்படுவ தெவ்வாற்றானு மியைந்திலதென்க. சித்திரிகன் சித்திரிக்குங்கால் சித்திரசத்தியன்னோன்பாலதாகக் கொள்ளுநரான்றி. வரையாவழி யங்ஙனங் கோடலமையுமோ? அன்றே. அற்றாகலின் காரியத்தானே காரணமினைத் தென்றியம்பற்பாலதென்க. காரியமாயபுகை காணுதவழிக் காரணமாய தீ யுளதாகக் கூறுநருளரோ? அற்றன்றே. சித்திரிகன் சத்தன்; சித்திரம் வரையுமாற்றல் சத்தி; சித்திரங் காரியம். சித்திரம் வரையுஞான்று சித்திரிசனுப சத்தனும், அன்னோன் வரையுஞ் சித்திரமும் கண்கூடாக நிகழ்வதன்றிச் சத்தி கண்கூடன்று. கண்கூடாய காரியங் கொண்டு அங்ஙனமன்றாய காரணத்தைத் துணிவது அநுமானமென்பதாம்; புகையைக்கொண்டு தீயுளதெனக் கோடல் போன்றதென்க. அன்னவற்றான் மண், சத்தி, கடமென்பனவாய இம்மூன்றனுள்ளும் மண்ணுங் கடமும் கண்கூடாயுள்ளன; சத்தி யங்ஙனமன்று. காரியம் கடம்; காரணம் சத்தி. காரியமாய கடவாயிலாகக் காரணமாய சத்தி யுளதென்றனுமானிப்பது: புகையுள்வழித் தீயுளதாகக் கோடல் போன்றதென்க.

இனிக் கடமெனற்பாலது சத்தா? அசத்தா? என்று காரியகாரணவாதத்தான் விவகரிக்குங்கால் யாண்டு மீன்றென முடிந்ததாகலின், இது முடிந்ததுமுடித்தலென்னு முத்திக்கினமென்க. இனிக் கடமேயிலதாயவழி, சத்தியுளதென்றியாண்டைக்கூறலமையும்? புகையைக் காணுதவழித் தீ யுண்டென்றியாவர் கூறுவர்! கடத்தோற்ற முள

னின் தோற்றம் பொருளென்றமையாதன்றே! தோற்றம் பொருளாங்கால் பனியின் றோற்றப் புகையும் பொருளாக, அதுகாரணமாய்த் தீ யுளதெனக்கோட லமையுமன்றோ? தோற்றப் புகையைக் கொண்டு தீயுளதெனக்கோட லெவ்வாற்றா னியைந்ததோ, அங்ஙனமே யுள்ளதுபோன்று தோற்றுங் கடத்தோற்றத்தைக்கொண்டு சத்தி யுளதெனக்கூற லெத்துணையு மியையாதென்க. சத்தாய கண்கூடாகக் காண்டலான் சத்தாய அங்ஙனமன்மையை யுணர்வது அநுமானமாகலின், அசத்தாய கடத்தைக்கொண்டு சத்தாய சத்தியை யுணர்வது எத்துணையு மியையாதென்க. எதார்த்த வநுமானத்தான் பொருள் சித்தித்தலல்லது தோற்றவநுமானத்தா னெத்துணையுஞ் சித்தித்த லமையாதென்க. இஃது அநுமானத்தானாகிய குற்றமேயாம். இதனானே கடமுஞ் சத்தியு மியாண்டு மில்லனவென்றே துணியப்பட்டனவென்க. இங்ஙனமே யொவ்வோர் பொருளினையு மாராயுங்கால் சத்தியுங் காரியமு மில்லனவென்றே நிகழ்கின்றனவன்றி யோர் பொருளினின்று மேனைய பொருள்கள் தோன்றுதலெனல் வாளா சழக்கேயென்க.

(1886ஹு அக்டோபர்மீ 30உ ப்ரம்மவித்தியா.) இந்து.

காரணமே காரியம்.

காரணமென்றுங் காரியமென்று மெடுத்துக் கூறப்படு மிரண்டனுள்ளும் காரணங் காரியத்திற்கு நியதமாய் முன்னிற்பது; காரிய முன்னின்மைக்கு எதிர்மறை. காரணம் மண்; காரியங்கடம். மண்ணாகநின்ற ஞான்றுங் கடமின்று; கடமழிவெய்தியஞான்றுங் கடமின்று; இடையேமாத்திர முளதெனப்படும். அற்றைஞான்று மாராயுங்கால் மண்ணையன்றிப் பொருட்பேறின்று. வளைவு குவிவு முதலாய குணங்கள் நவமாகத் தோன்றியமையானே அதனைக் கடமெனக் கூறுதுமெனின், அவ்வளைவு குவிவு முதலன குணமேயல்லது குணியன்றென்க. அக்குணமுங் குணியாய மண்ணின்பாலதாகத் தோற்றப்படும். மேலைக் கூறப்பாலதாய குணங்கள் தோற்றுவதற்கு முன்னரும் உருளைக்குணத்தி னிகழ்ச்சி யல்லது வேறு குணம் நிகழ்ந்துளது. குணமோ பொருளன்று. அக்குணந்தா னுளதோவெனின் அஃதுஞ் சொன்மாத்திரையாயும், தோற்றன்மாத்திரையாயு மல்லது உண்மையானிலதென்பது திண்ணம். அற்றாகலின் உளதாவது காரணமாய மண்ணேயாம்; காரியமென்பது தோற்றுதலும், நிகழ்தலும், அழிவுபாடெய்தலும் திரிபுணர்ச்சியேயன்றி வேறன்றென்க. இதனைச் சுட்டி முன்னர் நன்கு விளக்கினாம், ஆண்டை யோர்ந்துணர்க.

இனி மண்ணே கடமாகக் காணப்படுவதன்றி மண்ணேபோலுங் கடமுமோர் பொருளன்று. கடமுக்காலத்து மின்றென்பதுவே திண்

ணம். உளதாகத் தோன்றுந் தோற்றமு மண்ணின் தோற்றமல்லது வேறன்மையின் கடமென்பதோர்பொருளுளதாயவழித் தோன்றிய தோற்றமேயன்று. அற்றாகலினன்றே காரணமே காரியமாமென்பது தெற்றென்றுணர்க. ஒன்றே விவகாரத்தின்கண் இரண்டாக விவகரிக்கப்பட்டதேனும் உண்மையானே பொருளிரண்டன்று, ஒன்றேயாமென்க.

(1886ஆ டிசம்பர்மீ 30உ ப்ரம்மவித்தியா.) இந்து.

காரிய் காரணம் திண்ண மன்றென்பது.

காரியமென்பது தோற்ற நிகழ்ச்சியே யன்றிப் பிறிதின்மையின் காரியமென்பது முக்காலத்தினு மின்றெனக் கூறினுங் காரணமென்பதுளதேயெனின் கட்டுரைக்குதும்:—

காரியமே யின்றேல் காரணமென்ப தியாண்டையது? காரிய நிகழ்ச்சியானன்றோ காரணமென்று கூறப்படுவது? காரியமே யிலதாயின் காரணமென்னுங் கூற்றுப் பயனில் கூற்றென்றொழிக. ஒரோவொரு தந்தைக்கு ஓர் மக னுளனாயின் அவன் முன்னோ னெனற்பாலனா? பின்னோ னெனற்பாலனா?

முன்தோன்றியோ னுளனாயின் பின்னோனென்றும், பின்றோன்றியோ னுளனாயின் முன்னோனென்றும் கூறுந்தகையதன்றி, யோர் மகனையே முன்னோனென்றும் பின்னோனென்றுங் கூறலியலாதே. முன்னோனென்னுமொழி பின்னோனையும், பின்னோனென்னுமொழி முன்னோனையும் விடாமே சங்கிலித் தொடர்பேபோன்று கோவைப்பட நிகழலின், ஒன்றனைவிட்டொன்று பிரிவெய்தா. இவ்வாறே நன்மையுந் தீமையும், ஒளியும் இருளும், உயர்வுந் தாழ்வும், இவைபோல்வன பிறவும் காணும் பகுதியவாம். நாலொன்றனைக் கண்டு, இஃது பெரிதென்னுஞ் சொன்னிகழின் சிறிதென்னுஞ் சொல்லைத் தழுவியேயுள்ளது. சிறிதென்னுஞ்சொல் இன்றாயின் பெரிதென் றியாங்ஙனங் கூறும் பகுதிய? ஆதவனைச் சுட்டிப் பெரியனோ? சிறியனோ? வென்றாசங்கை நிகழின் பிறிதோராதவன் இருக்கினன்றி யிரண்டினுள் ஒன் றியம்பற்பாற்றன்று.

கடமென்பதின்றாயி னதற்கிட்ட காரியமென்பதோர் பெயரு மின்றாம். காரியமே யின்றாயின் அதனை யிகவாது தொடரும் காரணமென்பதேதது? காரணமின்றேற் காரணமெனும் பெயரு மின்றாமன்றோ; இதனானே மண்ணென்ப தோர்பொருளு மின்றெனப் பகர்ந்ததன்று. அம்மண்ணுக்குக் காரணமென்னுஞ் சொன்னிகழ்ச்சி யின்றென்றாம். ஒரேமண் விவகாரநாட்டத்திற் காரணமாகவும் காரியமாகவும் விவகரிக்கப்பட்டு, உண்மையானாாயின் மேலைவிரித்த விரண்டு

மின்மையாய் நிகழ்கின்றன. காரியமாக நிகழ்ந்ததூஉ மண்ணேயாம்; காரணமாக நிகழ்ந்ததூஉ மண்ணேயாம்; காரணத்தையன்றிக் காரிய மின்றெனக் கூறற்கிடனாக நின்றதூஉ மண்ணென்றே. காரியம் காரண மிரண்டும் காலமூன்றினும் இன்றாகமுடியும். உளதாதலும், நிற்றலும், அழிவுபாடெய்தலு மின்றெனற்கு முன்னர் நின்றதூஉ மோர்மண்ணேயாம். ஓர்மண்ணே கடமுதலனவாயும், அவையல்ல வாயும், விகாரமெய்தியும், அஃதின்றியும், களங்கமுடைத்தாயும், அங்ஙனமன்றாயும், பலவாயும், அங்ஙனமன்றாயும், காரியமாயும் காரண மாயு நிகழ்கின்றது. விகாரப்படுதன் முதலன வின்றேனும் விகார மின்மைமுதலன கூறற்பாற்றேயெனின், விகாரங்காரணமாக விகார மின்மை நிகழ்தலின் விகாரப்பாடெய்தாதொன்று விகாரமின்மையெ னப் பகர்தலுங் குற்றந் தங்குதற்கிடனாம். ஆகலின் விகாரம் விகார மின்மை முதலனவனைத்துங் கற்பனைக்கிடனாம். இதனானே மண் ணொன்றே யுளதெனவும், அதற்குக் காரணமென்றுங் காரியமென் றுங் கூறுதல் கற்பிதமென்றும் பெறலாம்.

(1886ஞு டிசம்பர்மீ 30வ் ப்ரம்மவித்தியா.) இந்து.

சுழுத்தியின்கண் உலகுண்டா வென்பது.

ஒரோவழிச் சாக்கிரமாவது இவ்வுலகு காணப்படும் நிலைமைத் தெனவும், சொப்பனம் இதுபோன்று காணப்படும் நிலைமைத்தென வும், சுழுத்தி இங்ஙனமன்றாம் நிலைமைத்தெனவும் கூறப்படுமென்க. மேலைச் சுழுத்தியின்கண் இவ்வுல குளதாகிக் காணப்படுவதின்றா? இலதாகிக் காணப்படுவதின்றா? இந் நிகழ்ந்த ஆசங்கைகட் கியாது விடையென்க.

A: நீரினுளதாய அதிநுட்பமாய கிருமி; நங் கட்புலனுக்குப் புலப்படுவ தின்றேனும் பூதக்கண்ணடியின் துணையான் புலப்படுவது போன்று சுழுத்தியின்கண் உலகு புலப்படாதேனும் மனக்கருவி கொண்டு பார்க்கும்வழிப் புலப்படுகின்றதேயன்றா? கண்ணடியில்லா வழிக் கிருமித்தோற்றங் காணப்படுவதின்றேனும் இதனாற் கட்புல னுக்குப் புலப்படாதொன்று கிருமித்தோற்ற மின்றென்று சாதித்தல் யாங்ஙன மியையும்? இதுபோன்று மனமின்றி நிகழும் சுழுத்தியின் கண் உலகின் தோற்றமின்றேனும் உலகு இன்றென்று யாங்ஙனங் கூறலமையும்?

B: ஓராடவனுக்குப் பித்து நேர்ந்தவழி முன்னர்க் கட்புலனுக் குப் புலனாகாப் பொருள்கள் காணப்பட்டு அஃதொழியுமொன்று, புலப் படுமேல் அப்போது அப்பொருள்க ளுளவென்று கூறவியையுமோ? கண்ணின்பால் காசமென்பதோர் நோயணுகியவழி யொரோவொரு விளக்குப் பலவாகக் காணப்பட்டு அஃது நீங்கியவழி ஒன்றாகவே

காணப்படுமெனின் காசமில்வழியும் விளக்குப் பலவென்பாரு முளரோ? யாண்டுமின்றென்க.

A: பித்துடையானுக்குப் புலனும் பொருள்கள் உண்மையன்று; காசத்தாற் காணப்படும் விளக்குகளு மங்ஙனமேயாம். பொய்யலது யாதென்க; வெறுந்தோற்ற மெனப்படுதலின். நீரின்கண்ணதாய கிருமி அங்ஙனமன்று; உளதேயாமென்க. நுட்பவுருவினைக் கண்ணடி பெரிதாகக் காட்டுவதன்றி யில்லதை யுள்ளதாகக் காட்டியதேயன்று. பித்தும் காசமும் இல்லதை யுளதாகத் தோற்றச் செய்வன. இவற்றுள் கிருமியுவமானமே சிறப்புடைத்தாகலின் அதனையே யீண்டுலகுக் கெடுத்து நாட்டப்படுமென்க; உலகெனப்படுவது உண்மைப் பொருளாகலின்.

(இன்னோர் கூறிய இவ்விரண்டு உவமானங்களான் நீரின்கணுள தாய கிருமியைக் காட்டக் கண்ணடி துணைக்கருவியாயும், எதிர்ப்பட்ட பொருள்களும் விளக்குப்பலவும் காட்டப் பித்துங்காசமுமாய இவ்விரண்டும் முதற்கருவியும் துணைக்கருவியுமாக நிகழ்கின்றன. இவ் விருவகையுள் உலகுக்கு மனம் துணைக்கருவியாமா? அல்லது முதற்கருவியும் துணைக்கருவியுமாமா? எற்றென்க.)

B: கண்ணடி இல்லாஞான்று கிருமி யுண்டெனக்கோடல் கண்கூடன்று; அனுமானமேயாம். அனுமானம் காட்சியன்றி நிகழ்வதாகாது. கிருமிகாணுவழிக்கடுகுமுதலிய நுட்பப்பொருளாற் கண்கூடாம். எற்றெனின், கண்ணாற்கண்ட கடுகுமுதலிய நுட்பப்பொருளினைக் கண்ணடி பேருருவாகக் காட்டுந் தன்மையான், கண்ணடி, இன்மையை உண்மையாகத் தெரிவிக்கும் ஆற்றலுடையதன்று; சிறியதனைப் பெரிதாகக்காட்டுந் தகையதே. இப்பெற்றியானே கண்ணடியில்லாஞான்று, கிருமி, காண்பதரிதாயினும் காண்டற்கரிய அதிநுட்பமென் றனுமானிக்க வேண்டற்பாற்றென்க. இதுபோன்று சுழுத்தியின்கண் வேறுபொருள்க ளேதுவினுமேனும் சிறிதாகவேனுங் கண்டாரிலாராகலின், துணைக்கருவியாய் கண்ணடி யுவமானத்தான் உலகைச் சத்தெனல் யாங்ஙன மமையுமென்று கூறி மறுக்க.

எது துணைக்கருவியா னிகழ்வதோ அது பலப்பலபேதமாய் நிகழும். எது முதற்கருவி துணைக்கருவிகளா னிகழ்வதோ அது ஒரே தன்மைத்தாய் நிகழும். துணைக்கருவியான கண்ணடியின் துணையான் எவ்வெப்பொருளைக் காணினும் அவ்வப்பொருள்கள் பேருருவாகத் தோற்றுகின்றன. பித்துடையானுக் கங்ஙனமன்று. அவன் எவ்விடஞ்செல்லினும் அவனுக்குத் தோன்றும்பொருள் ஒன்றேயாம்; அன்றி ஒரே தன்மைத்தாம். இதுபோன்று உலகிற்கு மனம் முதற்கருவியும் துணைக்கருவியுமாகலின் அம்மனத்தைக்கொண்டு எங்குச்சென்று காணினும் உலகொன்றே காணுதல் கண்கூடு. மனந்

துணைக்கருவியாமேல் கண்ணடி பல்வகைப்பொருளைக் காண்பிப்பது போன்று மனமும் பல்வகைப்பொருளைக் காட்டிடுதல்வேண்டும். அங்ஙனமின்மையின் உலகுக்கு மனம் துணைக்கருவியாத லமையாது. முதற்கருவியும் துணைக்கருவியுமாதலே யமையுமென்றறிக.

சுழுத்தியின்கண் அறிபவ னின்மையான் உலகைக்காண்ட லெங்ஙன மமைவுடைத்தெனின், அறிபவனின்மை யேதுவாகத் துணைக்கருவி யுவமானமாத்திர மெவ்வாறு அமைவுடைத்து? அற்றேல், முதற்கருவியும் துணைக்கருவியுமாய வுவமானம் பொருந்தாமைக்குக் காரணம் யாண்டையதென்க. இது நிற்க; அறிபவனின்றென் றோர்ஞான்றுங் கூற லமைந்திலது. இனியொன்று முணராது சுகமாக வுறங்கினேனென்று யாவரும் அனுபவமாகக் கூறுகின்றமையானும், விழித்தவழிக் கூறுவதன்றி யுறங்குங்காலத் தனுபவமின்றெனின் உறங்கினேனென இறந்தகாலத்தனுபவ முரைக்கின்றமையானும், விழித்தவழிச் சுகானுபவ மின்றாமாதலானும், உறங்கினானை யெழுப்பியவழி அவன் துன்புறலானும், அஞ்ஞான்றெய்திய சுகம் போன்று பிறிதொன் றின்மையானும், 'கிணற்றில் வீழ்ந்த பாத்திர மெடுக்கச் சென்றானுக்கு அப்பாத்திரம் நீருட்கிடைப்பினும் புறத் தெய்தினன்றி யுரைக்க லாமையானே நீருட்பாத்திரங் கிடைக்க வில்லையென்று கூறல் அடாமையானும் சுழுத்தியவத்தையின்கண் அறிவுளதென்றே கூறல் அமைவுடைத்தென்க.

இதுகாறுங் கூறிப்போந்தமையானே உலகுக்கு மனம் முதற் கருவியும் துணைக்கருவியு மாமென்றும், சுழுத்தியின்கண் உலகின் றென்றுங் கூறப்பட்டனவென்க.

சுழுத்தியின்கண் உலகின்றெனக் கூறின் விழித்திருக்குமேனை யோர்க்குக் காணப்படுகின்றதேயெனின், அன்னோர் நிற்பது சாக்கிர நிலைமைத்தாகலின் காணப்பட்டதென்க. இதுகாறும் சுழுத்தியின்கண் உலகின்றென்றுரைக்க வந்தாமன்றிச் சாக்கிரத் தன்றென்றொழிக.

(ப்ரம்மவித்யா 1887௵ ஜனவரி௴ 30௳.) இந்து.

ஆகாயவாதம்.

பூதபௌதிகங்களாய வுலகப்பொருளனைத்தினுஞ் சந்தென்பதுண்டென்ப துண்மையேயாம். சந்தெனினு மின்மை எனினு மபாவமெனினு மாகாயமெனினு மமையும். சந்துளதன்றாகத் தோன்றியதேனு முண்டென்பதே துணிபுடைத்து. யாங்ஙனமெனின் நன்று விளக்குதும்:—

சுவர்கட்டியஞான்று அதன்கண் உளதாய ஈரத்தை யுட்டினவாயு
வெளிப்படுத்துவதென்பது திண்ணம். சந்தென்பதாண்டையின்றே
லீரம் வெளிப்பட்டதெங்ஙனம்? ஒருவாற்றானுமின்றேயாம். இருப்புப்
பாத்திர முதலியவற்றை யனலிலிட் டெரிக்குங்கால் கீழ்ப்பக்கத்தே
படுங் கனலின்சூடு மேலைப்பக்கத்தே தோன்றக் கண்டுள்ளாம். இத
னை யப்பாத்திரத்தின்க ணுளதாய சந்தானன்று அச்சூடெழுந்த
தாகத் தெரிகின்றாம். அற்றேலற்றாக. இனி மிக்கவிடம்பெறுவதாய
ஓர் பாரப்பஞ்சினை யந்திரத்தினழுத்த வப்பஞ்சே சிறிதிடத்தினடங்
குவதைக் கண்டுள்ளாம். வாளாவைத்தக்கால் மிக்கசந்தும் யந்திரத்தி
லழுத்தியகாலைச் சிறிதுசந்து முளவாகத் தோன்றும். இங்ஙனமே
பொருள்கள் நெருக்கமின்மையானே மிக்கசந்து மஃதுண்மையானே
குறைவுமுறக் காண்கின்றாமன்றே? அற்றாகலின் சந்தின்றி யாண்டு
மெப்பொருளு மின்றென்பதே துணிபென்க. மலை, கருங்கற்பாறை
யேனு மதன்கணின்றும் புனல் பெருகக் காண்கின்றாமன்றே? சந்தி
யாண்டுளதோ ஆண்டைப் பொருணிகழ்ச்சி யின்றென்க. சல்லடை
யின்கண் சந்தும் பொருளு முண்டென்பது திண்ணம். சந்துளதாய
விடத்து வேயின்று; வேயின்கண் சந்துளதாம். இங்ஙனமே செங்கல்
ஒன்றனை யாயுமிடத்துச் சந்தும் பொருளுமுள்ளன. சந்துளதாமிடத்
துச் செங்கல்லென்ப தொன்றின்று. அச்சந்தொழிந்த கல்லின்கண்
ணும் சந்துளதா என்றாராயின் ஆண்டுஞ் சந்துநிகழ்கின்றது. இவ்
வாறு தொடர்ந்து செல்லின், அணு நிகழ்கின்றது. அவ்வணுவினையு
மாயின் சந்து நிகழ்கின்றது. சந்தொழிய நின்ற அணுவையு மாயுங்
கால் பரமாணு நிகழ்கின்றது. அதனையு மாயுங்கால் சந்து நிகழ்கின்
றது. இங்ஙனமே எம்மட்டுச் செல்லினுஞ் சந்தின்றி எத்துணை
யணுவினையும் காண்டலரிது. சந்துளதாயவழிப் பொருளின்று;
பொருளுளதாயவழிச் சந்துளது. சந்தின்றிப் பொருணிகழ்ந்தானன்
றிப் பொருள் சித்தித்திலது. அற்றாகலின் சந்தின்றிப் பொருள்கிடை
ப்ப தரிதினு மரிதென்க.

பரமாணுவாய வதிநுட்பவணுவிற் சந்தின்றென்றும், இரண்டு
பரமாணு சேர்ந்தவிடத்துமாத்திரம் இடையே சந்துண்டென்றும்
கருதுவர் சில்லோர். யாதுமிலதாய வெற்ற வெளியின்கண் ஓர்
தூணினை நிறுத்திவைப்பின், வைத்தற்குமுன்னர் நிரம்பி முற்றுமாண்
டிருந்த இன்மை எங்கேனு மோடிப்போயதோ? தூணினை எடுத்து
விடின் பெயர்த்தும் அவ்வின்மை அங்கெய்தியதோ? இரண்டுமின்று.
ஆண்டிருந்த வின்மை யாதெய்தினும் யாதுகழியினும் வருதல்போத
லின்றாம். தூணெனல் பலப்பல பரமாணு நிறைந்துளதாகலின் யாண்
டும் நிரம்பிய இன்மை பரமாணுவின்கண்மாத்திர மிலதென்ப தொரு
வாற்றானுமியம்பலொல்லாதென்க. ஆகலின் இவ்வுலகுமுற்றுமின்மை
யின்மையே. பெரும்பான்மை யிலதேனுஞ் சிறுபான்மையேனு முண்
மை என்று வாதிப்பதற்கொல்லாதென்க. ஆகலின் யாண்டு மாகாய

மூளதென்பது பெற்றும். சத்தாய்த் தோற்றுதல் அதிட்டானத்தை நோக்கியென்க. அதிட்டான மென்பது வேறு

(ப்ரம்மவித்யா 1887ஞு மார்ச்சுமீ 30உ.) இந்து.

சம்பாஷணை.

சாத்தன். அறிவு முன்னா? அறிபடுபொருள் முன்னா?

கொற்றன். அறிபடுபொருளே முன்.

சா. அறிவை முன்னென ஏன் கூறப்படாது?

கொ. அறிவு ஒருகாலத்தில் தோன்றி நசித்தலாலென்க.

சா. அறிபடுபொருளே ஒருகாலத்தில் தோன்றி நசிப்பதாகக் கூறப்படாதோ?

கொ. அறிபடுபொருள் என்றுமிருக்கவும், அறிவு ஒருபோது தோன்றி நசிக்கவும் காண்கையால் அங்ஙனங் கூறப்படாது.

சா. அறிவே என்று மிருப்பதெனக் கூறற் கியைந்திலதோ?

கொ. அறிவு என்பது விஷயங்களின் வேற்றுமையை உணர்வது; அறிவெனினும், சித்தெனினும் திருக்கெனினு மொக்கும். அறிபடுபொருளென்பது அங்ஙன முணராதது. அறிபடுபொருளெனினும், அசித்தெனினும், திருசியமெனினும், சடமெனினும் ஒக்கும். அதுவே உலகம். சரீரம், கருத்தரிக்குங்கால் அறிவின்றிப் பின்ன ருதித்துப் பிரேதத்தின்மையாவதைக் காண்கின்றோம். இதனானே அறிபடுபொருளான சரீரம் கருத்தரிக்குங்காலத்தும், பிரேதமாங்காலத்தும், அறிவோடு கூடியதன்றும் இருக்கின்றதாகவும், அறிவு இடைநடுவில் மாத்திரமிருந்து நீங்குவதாகவும் காணப்படுகின்றமையான் அறிபடுபொருளே முன்பெனவும், அறிவு பின்பெனவும் ஆகின்றன.

சா. உலகமானது அறிபடுபொருள். உலகமென்று கூறுங் கூற்றே அறிவின்கண்ணது. கடத்தைக் கடமெனவும், படத்தைப் படமெனவும் பகுத்துணர்ந்துகூறச் சடத்தாலாகா. அறிவே யறிந்து கூறவேண்டுவது. கருத்தரிக்குஞான்று அறிவில்லையெனவுணர்ந்ததும் அறிவே; ஈற்றிற் பிரேதமெனவுணர்ந்ததும் அறிவே; இடைநின்றகாலத்து அறிவோடு நின்றதென வுணர்ந்ததும் அறிவே. இங்ஙனம் முக்காலத்தும் அறிவு காணப்படுகின்றமையான், அறிவு ஓர்போது மாத்திரம் தோன்றி மறைகின்றதென் றெங்ஙனங் கூறற்பாற்று?

கொ. ஓர் தேகத்தைச் சுட்டிப் பேசுங்காலத்து, அதுமட்டும் நின்றன்றோ பேசவேண்டுவது? வேறு தேகத்தைப்பற்றியும் அதின்கண்ணுள்ள அறிவைப்பற்றியும் பேசுதல் தக்கதன்றே.

அங்ஙனமாயின் அத்தேகத்தையும், அத்தேகத்தின்க ணிகழும் அறிவையும் சுட்டிமாத்திரம் பேசுதல்வேண்டும். தேகம் பிணமாங்கால் அப்பிணத்தின்கண் அறிவில்லை. அதனால் பிணமெனவும், உலகெனவும், அவை யுளவெனவும், இலவெனவும் அறிவதியார்? வேறோர் அறிவு அறிகின்றதெனின், அவ்வறிவுக்கே வியஷ்டியான சரீரமும், சமஷ்டியான வுலகமும் தோற்றப்படுகின்றன. இதுகொண்டே அறிவு முன்னரென்றும். கருத்தரிக்குஞான்றும் பிரேதமாஞான்றும் ஏனைய அறிவுக்கு அறியப்படுகின்றமைகொண்டு அறிபடுபொருளை முக்காலத்து முளதெனக் கூறுகின்றோமெனின், அறிவுக்கு வியஷ்டி சமஷ்டியான வுலகம் காணப்படுவதுபோன்று, கருவையும் பிரேதத்தையும் காணு மறிவுக்குச் சமஷ்டியான வுலகமும், அதிலடங்கிய வியஷ்டியும், (வியஷ்டியில் பிரேதமும் கருவும்) காணப்படுகின்றன. இதனானே அறிபடுபொருள் முன்பெனவும், முக்காலத்து முளதெனவும், அறிவு பின்பெனவும், ஓர்காலத்தே யுளதெனவும் கூற வியையா.

கொ. அறிபடுபொருள் காரணம்; அறிவு காரியமாகலின் காரணம் முக்காலத்ததெனவும், காரியம் ஓர்காலத்ததெனவும், காரணம் முன்பெனவும், காரியம் பின்பெனவும் யாருஞ் சம்மதமாக ஒப்புக்கொள்ளத்தக்கனவே.

சா. இஃது எமக்கும் உடன்பாடே. ஆனால் அறிவைக் காரணமென்றும் அறிபடுபொருளைக் காரியமென்றும் பகர்கின்றோம்.

கொ. உலகம் அழிந்திலது; அறிவோ அழிவுறுகின்றது. ஆகலின், உலகம் முன்பெனவும் அறிவு பின்பெனவுங் கூறத்தகும்.

சா. அறிவு அழிந்திலது; உலகமோ அழிவுறுகின்றது. ஆகலின், அறிவு முன்பெனவும் உலகம் பின்பெனவும் கூறத்தகும்.

கொ. மஞ்சள் சுண்ணம் சேர்ந்தவிடத்துச் சிவப்புத் தருமம் தோற்றப்படுவதுபோன்று, பூதச்சேர்க்கையின்கண் அறிவு காணப்படுகின்றமையான் உலகு முன்னாகும்

சா. கடலின்கணுள்ள நீரில் அலையாதி தோன்றுவதுபோல் அறிவின்கண் உலகு தோன்றுகின்றதாகலின் அறிவே முன்னாகும்.

கொ. கடியாரம் முக்காலத்தும் ஓட்டம் ஓர்காலத்து முள்ளன போல் உலகு முக்காலத்தும் அறிவு ஓர்காலத்து முள்ளன வால் உலகே முன்னுறும்.

சா. கடியாரம் முக்காலத்தும் ஓட்டம் ஓர்காலத்து மிருத்தலுண் மைதான். அதுபோல் அறிவு முக்காலத்தும் அறிபடு பொருள் ஓர்காலத்து முள்ளனவாக வுவமேயப்படுத்தல் வேண்டும்.

கொ. அறிவு சரீரத்தின்கண் ஓர்காலத்துக் காணப்படுந் தர்மம். அது ஓர் பொருளன்று.

சா. அறிவின்கண் சமஷ்டி வியஷ்டியான உலகு ஓர்காலத்துக் காணப்படுந் தர்மம்; அது ஓர் பொருளன்று.

கொ. அறிவு தொழிலா? முதலா?

சா. உலகம் தொழிலா? முதலா?

கொ. உலகம் முதல்.

சா. அறிவு முதல்.

கொ. அறிவு எங்ஙனம் முதல்?

சா. உலகம் எங்ஙனம் முதல்?

கொ. அறிவு, அறிதலான தொழிலால் முதலன்று; தொழிலே.

சா. உலகம், தோற்றுதலான தொழிலால் முதலன்று; தொழிலே.

கொ. அறிவு முதலானுற் பொருளென்னை?

சா. உலகம் முதலானுற் பொருளென்னை?

கொ. உலகம் பூதக்கூட்டமேயாம்.

சா. பூதக்கூட்டத்தையன்றி யுலகிற்குப் பொருள் யாது? அப்பூத மும் தனக்குக் காரணத்தை நோக்க அணுவும், அணுவும் ஆராய்வின்கண் அபாவமுமாகுமே.

கொ. உலகில்லாவிடத்து அறிவு காணப்படுகின்றதா?

சா. அறிவில்லாவிடத்து உலகு காணப்படுகின்றதா?

கொ. சரீரமில்லாதகாலத்து அறிவுளதா?

சா. அறிவில்லாதகாலத்துச் சரீரமுளதா?

கொ. உலகைவிட்டு அறிவுளதோ?

சா. அறிவைவிட்டு உலகுளதோ?

கொ. அறிவு முக்காலத்துமுள்ள சத்தா?

சா. உலகு முக்காலத்துமுள்ள சத்தா?

கொ. பிராணன் நீங்கியபின்னர் அறிவுளதா?

சா. அறிவு நீங்கியபின்னர்ப் பிராணனுளதா?

கொ. ஓட்டமொழிந்த கடியாரத்தைக் காண்பதுபோன்று, உலகற்ற அறிவைக் காண்கின்றோமா?

சா. ஓட்டமொழிந்த கடியாரத்தைக் காண்பதுபோன்று, அறிவொழிந்த உலகத்தைக் காண்கின்றோமா?

கொ. அறிவிலாவிடின் உலகிராதோ?

சா. உலகிராவிடின் அறிவிராதோ?

கொ. நூதனமாய் ஓர் நகரத்தை யின்று காண்போமாயின், அஃது நேற்றின்று?

சா. இன்று நகரம் பிரத்தியக்ஷம்; நேற்றநுமானம். இன்று அறிவில் பிரத்தியக்ஷம்; பிரத்தியக்ஷத்தில் நகரம். நேற்றைப்பற்றி அறிவில்அநுமானம்; அநுமானத்தில் நகரம். எவ்வாறு நோக்கினும் அறிவே முன்னாகும்.

கொ. உள்ளவுலகு அறிவின்மையான் ஓடுமோ?

சா. உள்ள அறிவு உலகின்மையான் ஓடுமோ?

கொ. அறிவு எங்குளது?

சா. உலகு எங்குளது?

கொ. உலகு வெளியான இன்மையிலுளது.

சா. இன்மையிலுள்ளவுலகு இன்மையேயாகு மன்றோ?

கொ. பெட்டியிலுள்ள புத்தகமும் பெட்டியாமோ?

சா. இன்மை பூரணமாகலின், அதிலுள்ள உலகும் இன்மையேயாகும்; பெட்டி பூரணமன்றாகலின், அதிலுள்ள புத்தகம் பெட்டியாகாது.

கொ. உலகில்லா எவ்விடத்து அறிவு உளது?

சா. அறிவில்லா எவ்விடத்து உலகுளது?

கொ. உலகிற்கு அறிவு பின்னமா? அபின்னமா?

சா. அறிவிற்கு உலகு பின்னமா? அபின்னமா?

கொ. உலகிற்கு அறிவு அபின்னமே.

சா. அறிவிற்கு உலகு அபின்னமே.

கொ. அறிவைத் தனியே கண்டாருளரோ?

சா. உலகைத் தனியே கண்டாருளரோ?

கொ. அறிவு எவ்வண்ணமுளது?

சா. உலகு எவ்வண்ணமுளது?

(ப்ரம்மவித்யா 1887௵ ஜனவரீ௴ 30௳.)

கொ. உலகு பூதமயமாயுள்ளது.

சா. அறிவு பகுத்துணரும் தன்மையாயுள்ளது,

கொ. அறிவு உருவா? உருவமற்றதா?

சா. உலகு உருவா? உருவமற்றதா?

கொ. உலகு உருவே.

சா. உலகு உருவாயின் அறிவும் உருவே.

கொ. அறிவு எங்ஙனம் உருவாகும்?

சா. உலகு எங்ஙனம் உருவாகும்?

கொ. உலகு கண்ணுக்குப் புலப்படுவதால் உருவே.

சா. கண் உடலன்றி யுளதோ? உடல் உலகன்றி யுளதோ?

கொ. உலகன்றி இன்றாம்.

சா. ஓர் பொருளினை யுள திலதென வாயுங்கால் அதற்குப் பின்னமாயிருந்தன்றோ வுணர்தல்வேண்டும்? அங்ஙனமே உலகைப் பின்னமா யுணர்ந்தார் யாவர்?

கொ. யாருமிலர்.

சா. பின்னை உருவென்று அங்கீகரித்த லெங்ஙனம்?

கொ. உலகின்கணிருந்து சுகதுக்கங்களை அனுபவிக்க, எங்ஙனம் உலகு இன்றெனக் கூறுவது?

சா. அனுபவித்தார் யாவர்? உளரேல் பின்னமா யிருத்தல்வேண்டும்.

கொ. அறிவினின்றே யுலகுண்டாவது எங்ஙனம்?

சா. தூக்கத்தில் காணும் சொப்பன உலகு அறிவின்கண்ணே யுண்டாகின்றதன்றோ?

கொ. சொப்பன உலகம் சுத்தமித்தையன்றோ?

சா. இவ்வுலகுமாத்திரம் சத்தியமோ? ஆராய்ச்சியின்கண் பொருளின்றிப்போதலானும், வேற்றுமையாக நின்றுகண்டார் ஒருவரு மிலாதலானும் மித்தையெனற்கையமா?

கொ. அவ்வறிவு சரீரமன்றோ?

சா. அச்சரீரம் அறிவன்றோ?

கொ. இங்ஙனம் செல்லின் அனவத்தாதோட மெய்துமே.

சா. அனவத்தாதோடமின்றிக் கூறுவது உமது கடமையே. உலகு முன்னரெனக் கூறியதன்மேல் அதை மறுக்க அறிவென்று கூறினோம். நீர் அங்ஙனங் கூறுவிடில் யாமுங் கூறோம்.

கொ. உலகினின்றே அறிவுண்டாவதற்குச் சரீர அவயவத்தானும் கல்வியானும், பழக்கத்தானும் அறிவுபெறப்படுவதே போதுமான சாக்ஷியன்றோ?

சா. உலகெனமேலே அறிவாயிருக்கவும், அறிவன்றியுலகில்லாதிருக்கவும் கண்டும் மீண்டும் உலகினின்று அறிவுஉண்டாமெனக் கூற லெங்ஙனமாகும்? அன்றிச் சொப்பனத்தின்கண் அறிவின் காரியமான அவ்வுலகில் அங்குச் சரீரதர்ம்மத்திற்கியைய அறிவு காணப்படினும் அவ்வறிவின்கண்ணிருக்கும் வியட்டி தேகத்திற்கும், சமட்டியுலகிற்கும் அறிவே காரணமன்றோ?

கொ. அறிவின்காரியமுலகெனின், அறிவிற்கும் உலகிற்கும் பேதம் தோன்றப்படாதே.

சா. சந்திரனில்லா இரவின்கண் ஆகாயத்தில் சந்திரனிருப்பதாக நினைக்கின், அந்நினைவுக்கு அச்சந்திரன் பேதமாகக் காணப்படினும் அபேதமன்றோ? அங்ஙனமே சொப்பனவத்தையின்கண், அறிவினின்றுந் தோன்றியவுலகு பேதமாகத் தோன்றினும் அபேதமேயாம்.

கொ. உலகிருந்துதானே ஆதியில் ஜீவப்பிராணிகள் தோன்றியிருக்கவேண்டுவது.

சா. அறிவிருந்துதானே ஆதியில் உலகுதித்திருக்கவேண்டுவது.

கொ. சுழுத்தியின்கண் உலகின்றோ?

சா. சுழுத்தியின்கண் உலகுளதோ?

கொ. இருப்பதனாலன்றோ வினையோர் அறிவது?

சா. வினையோர் அறிவுடனிருப்பதாலன்றோ உலகு காணப்படுவது?

கொ. உலகினின்றன்றோ அறிவைக்காண்பது?

சா. அறிவினின்றன்றோ உலகைக்காண்பது?

கொ. நீரினின்றும் அலையுண்டாவதுபோன்று உலகினின்றும் அறிவு தோன்றுகின்றதன்றோ?

சா. நீரினின்று அலை உண்டாவதுபோன்று அறிவினின்று உலகுண்டாவதாகக் கூறப்படாதோ?

கொ. கண்டமான அறிவினின்றும் அகண்டமான வுலகம் எங்ஙனமுதிக்கும்?

சா. கண்டமான உலகினின்றும் அகண்டமான அறிவு எங்ஙனமுதிக்கும்?

கொ. அரூபமான அறிவினின்றும் ரூபமான வுலகு தோற்றுமா?

சா. உலகம், காரியகாரண சோதனையிலில்லாமற்போதலானும், ஒன்றன் அல்லது பலவின் கூட்டத்தையன்றி அபாவப்படுதலானும், இன்மையில் தோற்றுவது இன்மையேயாதலானும், பொருளின்மைபற்றிப் பொருட்பெயரன்மையானும் இன்மையாயவுலகு ரூபமெனல் எங்ஙனம் அமையும்?

கொ. இன்மையாய அறிவினின்றும்உண்மையாயவுலகுதோற்றுமா?

சா. இன்மையாய வுலகினின்றும் உண்மையாய அறிவு தோற்றுமா?

கொ. ஓர்போதுளதாய அறிவினின்றும் என்று முளதாய வுலகுதிக்குமா?

சா. ஓர்போதுளதாய வுலகினின்றும் என்று முளதாய அறிவுதிக்குமா?

கொ. அநித்தியமாய அறிவினின்றும் நித்தியமாய வுலகு தோன்றுமா?

சா. அநித்தியமாய வுலகினின்றும் நித்தியமாய அறிவு தோன்றுமா?

கொ. கற்பிதமான அறிவினின்றும் ஸ்வயமான உலகுதிக்குமா?

சா. கற்பிதமான உலகினின்றும் ஸ்வயமான அறிவெழுமா?

கொ. சித்தினின்றும் சடம் நிகழுமா?

சா. சடத்தினின்றும் சித்து நிகழுமா?

கொ. வியாப்பியமான அறிவினின்றும் வியாபகமான வுலகுதிப்பதெங்ஙனம்?

சா. வியாப்பியமான வுலகினின்றும் வியாபகமான அறிவுதிப்பதெங்ஙனம்?

கொ உலகு இருந்து தோற்றுவதால் சத்தேயாகும்.

சா. அறிவு இருந்து தோற்றுவதால் சத்தேயாகும்.

கொ. அறிவிருப்பதுண்மையேல் உலகின்றியிருத்தல்வேண்டும்.

சா. உலகிருப்பதுண்மையேல் அறிவின்றி யிருத்தல்வேண்டும்.

கொ. உலகு காரணமாகலின் அதுவே முன்னாகும்.

சா. அறிவு காரணமாகலின் அதுவே முன்னாகும்.

கொ. உலகு குணியும் தர்மியுமாதலால் முன்னெனக் கூறவேண்டும்.

சா. அறிவு குணியும் தர்மியுமாதலால் முன்னெனக் கூறவேண்டும்.

கொ. அறிவு என்பது தொழிற்பெயராகலின் எங்ஙனம் குணியும் தர்மியுமாகும்?

சா. உலகு என்பது சமஸ்கிருத பாஷையில் காணப்படுவது என்னும்பொருள் தருவதால் எங்ஙனம்குணியும் தர்மியுமாகும்?

(ப்ரம்மவித்யா 1887ஸு மார்ச்சுமீ 30வ.)

கொ. அறிவினின்றும் உலகம் உதிப்பதென்றுரைப்பது சொல்லால் சொல்வதன்றி அநுபவமின்றே.

சா. உலகினின்றும் அறிவுதிப்பதென்று நீரும் சொல்லால் சொல்வதன்றி அநுபவமின்றே.

கொ. அநுமானத்தால் கூறுகின்றோம்.

சா. யாமும் அநுமானத்தால் கூறுகின்றோம்.

கொ. எங்ஙனம் அநுமானம்?

சா. உமக்கு எங்ஙனம் அநுமானம்?

கொ. சாணியில் தோன்றும் புழுவுக்கு அறிவு அபின்னமாயிருப்பதுபோல், சரீரத்திலும் அறிவு அபின்னமாய்க் காணப்படுகின்றது.

சா. சொப்பனத்தின்கண் தோற்றும் உலகிற்கு அறிவு எங்ஙனம் முதற்காரணமோ, அறிவினின்றும் அச்சொப்பனவுலகம் எங்ஙனம் தோற்றியதோ, அங்ஙனமே இப்போது காணப்படும் இவ்வுலகிற்கும் அறிவே முதற்காரணமும், அவ்வறிவினின்றே யுலகம் தோற்றியதுமாம்.

கொ. இவ்வாறே பேசிக்கொண்டு வந்தால் முடிவுபெறவில்லையே. ஆதலால் முடிவு சொல்லவேண்டும்.

சா. உலகும், உலகத்தை அறியும் அறிவும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்திரா; சூரியனும் பிரகாசமும் போலாகலின்.

கொ. ஆனல் உலகை அறியும் அறிவு, அறிபடுபொருளான உலகு ஆகிய விரண்டும் நித்தியமும் சத்துமா?

சா. அல்ல; அநித்தியமும் அசத்துமேயாம்.

கொ. பின்னை, நித்தியமும் சத்துமா யிருப்பதியாது?

சா. சுழுத்தியின்கண் சாக்ஷியாய் விளங்கும் சலனமற்ற அறிவே நித்தியமும் சத்துமாம். (அதன்கண் உலகும், உலகை அறியும் சலனமுள்ள அறிவும் ஓர்காலத்துத் தோற்றி விளங்கி மறைகின்றனவாம்.)

கொ. சுழுத்தியின்கண் அறிவு உளதென்பதெங்ஙனம்?

சா. சுழுத்தியின்கண் சுகமாய் நித்திரை செய்தேனென்று சொல்லுமிடத்துச் சுகானுபவம்காணப்படுகின்றமையாலும், அவ்வனுபவம் அறிவினுக்கே விளங்கவேண்டுமாகையாலும், அதைத் தள்ள யாராலுங் கூடாமையாலும் அறிவுளதென்பதே திண்ணம்.

(ப்ரம்மவித்தியா 1887௵ ஆகஸ்டு மீ 31௳.) ஓர் நன்பன்.

அறிவே உலகம். (திருக்கே திருசியம்)

அறிவென்பது பொருள்களின் வேற்றுமைகளைத் தெரிந்து கொள்ளுந்தன்மையது; உலகமென்பது அங்ஙனம் தெரிந்துகொள்ளாத் தன்மையது. அறிவெனினும் சித்தெனினும் திருக்கெனினுமமையும்; உலகமெனினும் சடமெனினும் திருசியமெனினும் பொருந்தும்.

இவ்விரண்டில் ஒன்றுகாரணமும், ஒன்று காரியமுமாம். "வெற்றிலை பாக்கு சுண்ணம் மிம்மூன்றுஞ் சேர்ந்தவிடத்துச் சிவப்புத்தருமமுண்டாவதுபோல் பூதக்கலப்பில் அறிவென்னுந் தர்மமுண்டாவதால் தேகமே காரணமெனவும் முன்னெனவும் அறிவெனவும் கூறப்படும். இதுகொண்டே உலகே அறிவெனவுரைக்கப்படு" மெனின், அறிவினின்றும் உலகு தோற்றி அதனின்றுமே தேகம் நிகழலின் அறிவே உலகாம். யாங்ஙனமெனின், சொப்பனத்தின்கண் அறிவே உலகாகி மேற்படி உலகான சமட்டியில் வியட்டிசரீரங்கள் நிகழ்ந்து அதில் அறிவு காணப்படுவ துண்மையன்றோ? அச்சரீரங்கட்கு அவ்வறிவு பேதமாய்த் தோற்றினும் சொப்பனவுலகிற்கு முதற்காரணமாயுள்ள அறிவின் பிரதிபலனமெனவே கொள்ளத்தக்கது. எங்ஙனமெனின், ஏகமான சூரியன் கண்ணாடியிற் பிரதிபலித்துப் பிரகாசத்தைத்தரும் ஞான்று, பிரதிபலனபிரகாசம் கண்ணாடியினின்று தோற்றினும் உண்மையில் சூரியனிலிருந்தே தோற்றுகின்றது. அங்ஙனமே சொப்பனவுலகிற்கு முதன்மையான அறிவு, சொப்பனசரீரத்தின்கண் பிரதிபலித்து அச்சரீரத்திற் கபேதமாய்த் தோற்றினும் உண்மையில் வேறன்றோ? இத்திருட்டாந்தவாயிலாக ஆராயின் நூலே எங்ஙனம் ஆடையோ அங்ஙனமே அறிவே சொப்பனவுலகமாகவும், ஆடையில் நூல் எங்ஙனம் நிறைவோ அங்ஙனமே சொப்பனவுலகில் அறிவு நிறைவாகவும், நூலையன்றி ஆடை எங்ஙன முக்காலுமின்றோ அங்ஙனமே அறிவையன்றிச் சொப்பனவுலகு முக்காலு மின்றாகவும், ஆடைக்குப் பொருளின்றி எங்ஙனம் சொல்மாத்திரமும் தோற்றல் மாத்திரமுமாமோ அங்ஙனமே சொப்பனவுலகுக்குப் பொருளின்றிச் சொல்மாத்திரமுந் தோற்றல்மாத்திரமுமாமென்க.

சாக்கிரத்தின்கணுள்ள அறிவு, சொப்பனத்தில் காணும் அண்ட பிண்ட சராசரமா யிருத்தலினாலும், அவ்வளவிலும் அவ்வறிவு பூரணமாயிருத்தலினாலும் அவ்வறிவையன்றி அவை , யின்மையானும் அறிவே சொப்பனவுலகெனவும் அறிவு வியாபகமும் உலகு வியாப்பியமெனவும் கூறத்தகும்.

அறிவின் காரியம் சொப்பன மென்பதுபற்றி அறிவே சொப்பனவுலகேனும், அறிவே சாக்கிரவுலகென லெங்ஙன மியையுமெனின், கயிற்றை மயக்கத்தால் அரவெனக் காணும்போது அரவாகவும்

தெளியும்போது கயிறாகவும் காணப்படுவது கண்கூடே. அறிவு, கருதியவண்ணம் காணப்பட்டதன்றிக் கயிற்றின்கண் அரவு தோற்றலும் நிகழ்தலும் அழிவுபாடெய்தலு மின்றென்பதே துணிபுடைத்து. அரவு தோற்றமேனும் எதினின்றும் தோன்றிற்றெனின் அறிவினின்றே தோன்றிற்று; இதனாலே அரவுக்கு அறிவே முதற்காரணமாம். இங்ஙனமே மண்ணின்கண் கடம், தோற்றலும் நிகழ்தலும் அழிவுபாடெய்தலு மின்று. இவ்வாறு விசாரித்ததற்கு முன்னர் உண்மையாகத்தோற்றிய கடம், அறிவினின்றே தோற்றிநிகழ்ந்து, தெளிந்தஞான்று அழிவுபா டடைந்தது. ஆகலின் அறிவே கடமாம். சோதனைக்குமுன் உண்மையாகத் தோற்றியகடம், அறிவினின்றே எழுந்து தெளியும்வரையில் நிகழ்ந்து தெளிந்த பின்பு இன்றெனத் துணியப்பட்டது. அறிவும் மண்ணு மிருந்தாலன்றிக் கடம் தோற்றப்படாதெனின், மண்ணையல்லது கடமெங்ஙனமின்றோ அங்ஙனமே அணுவையன்றி மண்ணும், பரமாணுவையன்றி அணுவுமின்றாகி, அதுவும் ஆராய்ச்சியில் திண்ணமன்றெனத் துணியப்படுகின்றது. அறிவையன்றிக் கடமெங்ஙனமின்றோ அங்ஙனமே மண்முதலியயாவு மின்றெனத் தீர்வாம். இவ்வாறு உலகிலுள்ள எந்தப் பொருள்களையும் ஆராய்ச்சிசெய்யின் அறிவின் காரியமாகின்றது. இதனானே அறிவே உலகெனக் கூறப்பட்டதென்க.

(ப்ரம்மவித்யா 1888௵ பிப்ரவரி௴ 29௳.) ஓர்நண்பன்.

அறிவோ உலகம்?

நாளது ௧௮௮௮௵ ஏப்ரல்௴ ௭௳ வெளிப்பட்ட தங்களது பத்திரிகையில் (பிரஹ்மவித்தியா)விலிருந்து எடுத்துப் பதித்து விடுத்த (அறிவே உலகம்)என்னும் விஷயத்தை யாம் பார்த்தோம். அறிவு, உலகு என்பவைகள் இரண்டுபொருள்க ளல்லவெனவும், இரண்டும் ஓரே பொருளெனவும் அதனை யெழுதிய நண்பர் சித்தாந்தப்படுத்துகிறார். அன்றியும், அவர் வெற்றிலை பாக்கு சுண்ணம் இம்மூன்றும் கூடியவழிச் சிவப்புநிற முண்டாவதுபோலப் பிருதிவி முதலிய பூதங்களொன்றுகூடியவழி அறிவுண்டாதலின், தேகமே அறிவுக்குக் காரணம் எனவும், அதனால் உலகமே அறிவு எனவுங் கூறுமோர் ஸித்தாந்தத்தை மறுக்கின்றார். இதனால் அறிவே உலகம் என்பது ஒருவர் மதமும், உலகமே அறிவு என்பது மற்றொருவர் மதமுமாக ஏற்படுகின்றது. உலகமே அறிவு என்பவரது நியாயத்தை அறிவே உலகம் என்பவர் வருவித்துக் காட்டியதேயன்றி, அந்நியாயத்தை மறுத்துப் பின்னர்த் தமது ஸித்தாந்தத்தை நாட்டினாரில்லை. மேல், தமது ஸித்தாந்தத்தை நாட்டுதற்கு (சொப்பனத்தின்கண் ணறிவேயுலகாகி, அதிற் சரீரங்க ணிகழ்ந்து அறிவு காணப்படுத லுண்மையாகலின்,

அறிவினின்று முலகு தோற்றி, அதினின்றுந் தேகம் நிகழ்கின்றது) என வோருண்மைகண்டு கூறினர். அன்றியும், அவர் அறிவு=தெரிந்து கொள்ளுந் தன்மையது அல்லது சித்து எனவும், உலகம்=தெரிந்து கொள்ளாத் தன்மையது அல்லது ஜடம் எனவுங் கூறினர். இவற்றுள் ஒன்று காரணமும், மற்றொன்று காரியமுமா மெனவுங் கூறினர். இனி இவற்றை விசாரித்து எமதுண்மையை நிறுத்துவாம்.

நமது தோழர் அறிவு, உலகம் எனவிரண்டு சொற்களைப் பிரயோகித்துவிட்டு இரண்டு மொன்றே யென்பதும், அவற்றுள் ஒன்று தெரிந்துகொள்ளுந்தன்மையது, மற்றொன்று தெரிந்துகொள்ளாத் தன்மையது என்றதும் அவருக்கே நகைப்பை விளைக்கும். பூ, மலர் என்பனபோல அறிவு உலகம்என்பவைகளைக்கொண்டாலோவெனின், பூ என்பதோர் பொருளும், மலரென்பதோர் பொருளுமாகி இரண்டற்குந் தனித்தனித் தன்மை வேறுபட்டதில்லை. அறிவு உலகம் என்பவைகள் தனித்தனி வேறுவேறு பொருள்களாகி, அறிவு ஒருதன்மையும், உலகம் ஒருதன்மையும்பெற்று விளங்கலால் இரண்டும் ஒருபொருளென்பது கூடாது. அறிவு ஒரு முதலும், உலகம் ஒருமுதலுமாகி அறிவே உலகம் என்பதழிந்து நம்மவரது மதம் நிலை தளர்ந்திடும். தெரிந்துகொள்ளுந் தன்மையினதாகிய அறிவையும், தெரிந்துகொள்ளாத் தன்மையினதாகிய உலகையும் ஒன்றென்னல் பெருஞ் சிரிப்பையே விளைக்கின்றது. இது மனுஷ்யனையும் கழுதையையும் ஒன்றாக எண்ணும் புத்திசாலிகளுக்கே அமையும். பொன்னும் பூஷணமுங் காரணகாரியங்களாகி இரண்டு சொற்களா லமையினு மிரண்டு மொன்றே யாதல்போற் கொள்ளத் தக்கதெனின், காரணகாரியங்களாக வமைந்த பொன்னும் பூஷணமுந் தன்மை வேறுபடக் காண்கிலேம். பொன்னென்பதோர் பொருளும், பூஷணமென்பது அதன் றிரிவுமாம். திரியாதபோதும், திரிந்தபோதும் பொருள் ஒருதன்மையா யிருக்கக் கண்டோம். அறிவு ஓர் பொருளும், உலகம் அதன் றிரிவுமாயின், அது திரியாதபோதுந் திரிந்தபோதும் ஒரே தன்மையா யிருத்தல் வேண்டும். அங்ஙனமின்றி அவைகள் முறையே அறியுந் தன்மையையும், அறியாத்தன்மையையும் பெறலா லிரண்டு மொரு பொருளென்றது ஏற்றம் பெறாது. அன்றியும், அறிவாகிய காரணத்தினின்றும் உலகமாகிய காரியம் பிறந்ததென்பது மானிடஜன்மத்திலிருந்து கழுதைபிறந்தது என்னும் விவேகிகள் கழகத்துக்கே ஒப்பாகும். இப்படி யழிதலால் அறிவே உலகு என்பவரது மதம் அநாதாரணியமாயிற்று. இனி உலகமும் அறிவும் ஒன்றென்பதற்கும், உலகமாகிய காரணத்தினின்றே அறிவாகிய காரியம் பிறந்தது என்பதற்கும் மேல் யாம் காட்டிய வுபமானங்களைத் திருப்பிக் கழுதையும் மனுஷ்யனும் ஒன்றெனவும், கழுதை ஜன்மத்திலிருந்து மனுஷ்யன் பிறந்தான் எனவுங் கூறும் நிதர்சனமே போதுமானதாகையால் உலகமே அறிவு என்பவர் மதமும் அநாதாரணியமாயிற்று. இந்தச்

சித்தாந்தியை யாம் பிரஸ்தாபிப்பது அவசியமன்றாயினும், ஸந்தர்ப்ப நேர்ந்தமையால் பிரஸ்தாபித்தது குற்றமாகாதென்க. இங்ஙனநிற்க, அறிவுக்கு முதன்மைகூறு மறிஞர் காட்டிய சொப்பன திட்டாந்தத்தைக் கொஞ்சந் தொட்டுப்பார்ப்போம்.

இவர் சொப்பனத்தின்கண் அறிவே யுலகாகு மென்றார். சொப்பனமென்பது அறிவு என்னும் பேருடைய ஆன்மா முப்பத்தைந்து கருவிகளைப் பெற்று நுதலின்கட் சாக்கிராவஸ்தையை யடைந்திருப்பதுபோல, அந்த முப்பத்தைந்து கருவிகளில் பத்துக்கருவிகள் குறைந்து இருபத்தைந்து கருவிகளைப்பெற்றுக் கண்டத்தின்கட் டங்கியிருக்கு மோரவஸ்தா நிலயமாம். சாக்கிரத்தில் முப்பத்தைந்து கருவிகளோடு கூடியவழி ஆன்மா உலகை யறிகின்றது. சொப்பனத்தில் இருபத்தைந்து கருவிகளோடு கூடியவழி அவ்வான்மா உலகை யறிகின்றது. கருவிகளோடு கூடாதவழி ஆன்மாத் தானே உலகை யறிந்திலது. ஆன்மாத் தனித்துநிற்ப தொருபொருளுமன்று. ஆன்மாத் தனித்துநின்றமைக்கும், அங்ஙனந் தனித்துநின்றே அது உலகாயினமைக்கும் தக்க வுபமானங்காட்டி அறிவே உலகம் என்னும் ஸித்தாந்தத்தைப் பூர்வபட்சியார் சாதித்துக்கொள்ளக்கடவர். தேகவியாபாரமின்றி அறிவு தனித்துநின்று உலகு அதனிடத்திற் காணப்படுமெனின் அறிவேஉலகுஎன்னும் ஸித்தாந்தம் கனம்பெறும். தனுவாதிகளைத் துணைக்கோடலா லாணவத்தான் மூடப்பெற்ற வறிவு சிறிது விளங்கப்பெற்றுத் தனக்கெனவோர் சுதந்தரமின்றி வாழும் மலினவறிவாகிய பசுவையே சுத்தவறிவாகிய பதியென மயங்கியும், சுத்த அறிவாகிய வந்தப்பதியினிடத்தில் மலினமாகிய மலமாயாதி தோஷங்களைக் கற்பித்தும் அறிவே உலகு என்று சாதிப்பது ஸர்வாஸங்கதமென்க. இவ்வுண்மை தோராது (அறிவினின்று முலகுதோற்றி, அதினின்றுந் தேகம் நிகழ்கின்றது) என்றது முதலிய வெறுஞ்சொற்களையடுக்கி நம்மவர் அவலராயினர். நமது பூர்வபட்சியார் அறிவினிடத்தில் உலகு காரியப்படுதலைச் சாதித்தற்குச் சாக்கிரத்தைத் தள்ளிச் சொப்பனத்தை யெடுத்துக்கொண்டார். இதனால் ஜாக்கிரம் தமக்குப் பிரதிகூலமும், சொப்பனம் தமக்கு அநுகூலமுமாகத் துணிந்தாராக ஏற்படுகின்றது. எம்முடைய பிரவசனத்தால் அவரெடுத்துக்கொண்ட சொப்பனமும் அவரைக் கைவிட்ட நியாயம் புலப்பட்டமையால், இனி அந்தச் சொப்பனத்தையும் அவர் கைவிடவேண்டியவரேயாயினர். அன்றியும் அவரது ஸித்தாந்தத்தில் உலகத்தை மித்தையென்று நாட்டுமவஸரத்தில் சொப்பன திருட்டாந்தத்தையுங் காட்டிச் சொப்பனம் பொய்யானவாறு உலகம் பொய்யென்று சாதிப்ப துண்டாகையால், அத்தகைய சொப்பனத்தை அறிவினிடத்தி னுலகம் காரியப்பட்ட தென்பதற்கு அவர் ஓதாரவாகத் தேடியதும் பிரதிகூலமேயாம். அவருக்கு ஸ்வப்நம் பொய்யாகையால் அறிவினிடத்தில் உலகம் காரியப்பட்டது பொய்யாகி, அறிவே உலகம் என்று அவர்சாதித்த

தும் பொய்யாக முடிந்தது. அதற்காக அவரெடுத்துக்கொண்ட பிரயாசமும் அவலமாயிற்று. அறிவே உலகம் என்புழி அறிவு எப்படி மெய்யோ அப்படி உலகமும் மெய்யாகின்றது. உலகம் மெய்ப்பொருளின் றிரிவு அல்லது விகாரம் என வெளிபாயின பின்னர் அவ்வுலகத்தை மிச்சையெனக்கூறி வேறு திருஷ்டாந்தங்களாற் கலங்குதல் வினையேயாம். மெய்ப்பொருளும், பொய்ப்பொருளுமாகச் சாதித்தற்கு ஓர்பொருளிடங்கொடுக்கமாட்டாதாகையால், நம்மவாது ஸித்தாந்தம் ஒன்றிலொன்று விரோதமான பல ஹேய திருஷ்டாந்தங்களை யுடன்கொண்டு ஜீவித்தால் அதனது கௌரவ மிருந்தவாறென்றறிக. எடுத்துக்கொண்ட பிரமேயத்தைப் பத்திரிகைதோறுங்கொஞ்சம்கொஞ்சமாக விளக்கி முடிவுசெய்து பிரம்ஹவித்யாவிலடங்கிய (உலகம் சத்தா அசத்தா) என்பது முதலிய ஏனைய விஷயங்களையுங் கொஞ்சம் விசாரிக்க ஆசைகொண்டிருக்கின்றோம்.

(இந்துஜனபூஷணி 1888ஆு மேமீ 19௨)

அறிவே உலகம் என்று சாதிப்பான்றொடங்கிய நமது நண்பர் "ஏகமான சூரியன் கண்ணுடியிற் பிரதிபலித்துப் பிரகாசத்தைத் தருஞான்று பிரதிபலனப்பிரகாசம் கண்ணுடியினின்று தோன்றினும், உண்மையில் சூரியனிலிருந்தே தோற்றுகின்றது. அங்ஙனமே சொப்பனவுலகிற்கு முதன்மையான அறிவு சொப்பன சரீரத்தின்கண் பிரதிபலித்து அச்சரீரத்திற் கபேதமாய்த் தோன்றினும் உண்மையில் வேறு" என்று பிரகாசப்படுத்தினர். இந்த வுபமானம் அவாது மதத்தை யழிப்பதொன்றேயொழிய நிறுத்துவ தொன்றன்று. எங்ஙனமெனின், நம்மவர் அறிவு, சொப்பனவுலக மென்பவைகளை முன்னர்ப் பிரஸ்தாபித்தபோது அறிவே சொப்பனவுலக மாயிற்றெனவும், அறிவு காரணமும் சொப்பனவுலகு காரியமுமா மெனவுங் கூறியிருக்கின்றனர். இப்போது அதனை நிலைப்பிப்பதற்கு எடுத்துக்கொண்ட சூரியன், கண்ணுடி யென்பவைகள் அதனோடு பொருந்துமா றெங்ஙன்? சூரியனே கண்ணுடியாகியும், சூரியன் காரணமும், கண்ணுடி காரியமுமாகி நிலைபெறினன்றோ எடுத்துக்கொண்ட பிரமேயம்சிதைவுருது? சூரியன் வேறு, கண்ணுடிவேறு எனவும், சூரியனிற் கண்ணுடி காரியப்பட்டதில்லை யெனவும் இனிது விளங்கலால், அறிவு வேறு, சொப்பனவுலகு வேறு எனவும், அறிவினிடத்திற் சொப்பனவுலகு காரியப்பட்டதில்லை யெனவும் நிச்சயிக்கப்பட்டு (அறிவே உலகம்) என்று சாதித்த அவாது ஸித்தாந்தம் அவல ஸித்தாந்தமாயிற்று. அன்றியும், அவர் "சொப்பனவுலகிற்கு முதன்மையான அறிவு" எனவும், "சொப்பன சரீரத்தின்கண் (அறிவு) பிரதிபலித்து" எனவுங் கூறியதும் பிழையாம். எங்ஙனமெனின், அவாபிமதப்படி அறிவையன்றிச் சொப்பனவுலகும், அதினிகழுஞ் சொப்பன சரீரமும் இல்லை. அதனுல், அறிவுக்குஞ் சொப்பனசரீரத்திற்கும் பேத

மின்றுகி, அறிவே சொப்பனசரீரம் என்று ஏற்படுகின்றது. அறிவே சொப்பனசரீர மாகுகையில், சொப்பனசரீரமாகிய தன்னில், அறிவாகிய தான் பிரதிபலித்தலைத் தானுகாத கண்ணுடியில் சூரியனுகிய தான் பிரதிபலித்ததனோடு ஸாம்யங் கூறியது பொருந்தாதென்க. அன்றியும் "உண்மையில் வேறு" என்று அவர் சொப்பன சரீரத்திலான்மாவைப் பிரித்தோதியதுந் தவறுடைத்தென்க. நமது பூர்வ பட்சியார் தாபிக்க வெழுந்தது (அறிவே உலகு) என்னுந் தமது மதமும், தாபித்தது (அறிவு உலகன்று) என்னும் எமது மதமுமாக முடிந்தது. அவரெடுத்துக்கொண்ட திருட்டாந்தங்கள் அறிவே வுலகம் என்று சாதிக்க இடங்கொடாமல் அறிவு உலகன்றென்பதையே ருசுப்படுத்துகின்றன. இவ்வாறு வழுவுதல் அவரது மதத்திலுண்டான வழுவேயன்றி, அவரது புத்தியிலுண்டான வழுவென யாம் கூறுகிலேம்.

இன்னும் அவரது பிரஸங்கத்தி லுண்டாகிய தோஷத்தைக் காட்டுவாம். சூரியன் கண்ணுடியிற் பிரதிபலித்துப் பிரகாசிக்கையில், பிரதிபலனப் பிரகாசம் கண்ணுடியினின்று தோன்றினும், உண்மையில் சூரியனிலிருந்தே தோன்றுகிறது என்று வரைந்தாரன்றோ? இதனுல் நமது தோழருக்குண்டாகிய ஸாதகம் இன்னதென்று எமக்குப் புலப்படவில்லை. அறிவு சொப்பனவுலகமாகி, அதில் நிகழுஞ் சொப்பனசரீரத்தில் அது புகுந்து விளையாடு முண்மைக்கு நம்மவர் தேடிய வுபமானம் அதுவாகையால், அவை யொன்றேடொன்று பொருந்தாமையைக் கண்டிரங்கியே யாமவ்வாறு கூறினேம். எங்ஙனமெனின், சொப்பன வுலகமானதும், சொப்பனசரீரத்தி னுழைந்ததும் அறிவேயன்றி அறிவினது பிரகாசமன்று. கண்ணுடியி னுழைந்தது சூரியனுகி முதலாகாமல் அவனது பிரகாசமாக முடிந்தது. இதனுல், உபமானவிருத்த முண்டாயினதன்றியும், அந்தக் கண்ணுடியில் சூரியன் பிரதிபலித்தபோது பிரகாசத்தை வெளியே கண்டதன்றி, ஒரு செங்கற்பலகையில் சூரியன் பிரதிபலித்தலும், அதினின்று பிரகாச மெழுதலுங் காணக்கூடாமையால், கண்ணுடியைத் தள்ளிச் சூரியனே பிரகாசம் வெளியானதற்குக் காரணம் என்று வரைந்துகொண்டது தவறுக முடிந்தது. சூரியனது பிரகாசம் வெளியானதற்கு அந்தச் சூரியனேயன்றி அவன் பிரதிபலித்த கண்ணுடியாகிய நிர்மலவஸ்துவுங் காரணமாய் நின்றமையால், நம்மவரது நியாயம் நிலைபெறு தொழிந்தது. இந்த வுபமானபங்க சமர்த்தனத்தால் அவரது உபமேயம் அழியத் தட்டில்லையாகையால், இதனையும் நமது அன்பர் கனிந்து பார்த்து ஸந்தோஷிப்பாராக. இதனுல் (அறிவே உலகு) என்பது அஸத்தாயினமை யறிக.

(இந்துஜனபூஷணி 1888ஸு மேமீ 26உ).

இனி நமது நண்பர் நூலையன்றி ஆடையின்மைபோல அறிவையன்றிச் சொப்பன வுலகில்லை யெனவும், ஆடையில் நூல்நிறைவு

போலச் சொப்பனவுலகில் அறிவு நிறைவு எனவும், சொன்மாத்திர மும் தோற்றன்மாத்திரமுமே யன்றிப் பொருண்மாத்திரமாகச் சொப்பனவுலகில்லை யெனவும், உள்ளது அறிவே யெனவுஞ் சாதித் தார். சொப்பனவுலகு அறிவினின்று வந்ததெனவும், அறிவே சொப் பனவுலகு எனவும் முன்னர்க் கூறியதற்கு மாறாக அந்தச் சொப்பன வுலகைச் சொன்மாத்திரமும், தோற்றன்மாத்திரமுமாகக் கூறியது யாங்ஙனம்? சொன்மாத்திர மென்பது முயற்கோடு போல்வது. தோற்றன்மாத்திரமென்பது கானற்சலம் போல்வது. இவற்றுள் முயற்கோடு திருஷ்டிக்கு விஷயமாகாததும், சுகதுக்கா நுபவமாகாத தும், வேறொன்றிலேநின்றுங் காரியப்படாததுமாம். சொப்பனவுல கம் சூக்ஷ்ம தநுவில் திருஷ்டிக்கு விஷயமானதும், சுகதுக்காநுபவ மானதும், அவர் மதப்படி அறிவிலேநின்றுங் காரியப்பட்டதுமாம். இவ்வுபமான வுபமேயங்கள் எங்ஙனே பொருந்தும்? இனித் தோற் றன்மாத்திரமாகிய கானற்சலம் சுகதுக்காநுபவமாகாதது. சொப்பன வுலகம் அதுபோல்வ தன்று. சுகதுக்காநுபவமா யுள்ளது. இவ்வுப மான வுபமேயங்களும் நிலைபெறுமா றெங்ஙனம்? பூர்வபட்சியா ரெடுத்துக்கொண்ட இரண்டுபமானங்களும் அவரது உபயோகத்தைச் சாதிக்க வலியில்லாதனவாயின. அன்றியும் அவரெடுத்துக்கொண்ட வுபமானங்களில், சொன்மாத்திரமாகிய முயற்கோடு ஒருதன்மைய தும், தோற்றன்மாத்திரமாகிய கானற்சலம் மற்றொரு தன்மையது மாகின்றமையால் ஒன்றிலேயொன்று மாறுபட்டஅவ்விரண்டுபமானங் களையும் அவ்விருதன்மைகளையு மெய்தாத சொப்பன வுலகமாகிய வொருபொருளினிடத்திலே ஸமர்த்தித்ததும் பெருஞ் சிரிப்பையே விளைக்கின்றது. இப்படி விசாரித்தறிந்தபேர்கள் நூலிலேயுண்டாகிய ஆடையைச் சொன்மாத்திரமும், தோற்றன்மாத்திரமுமாக அவர் கிரகித்து, அதனை யுபமானமாக வெடுத்துக்கொண்டு சொப்பனவுல கைச் சோதிக்க வந்தது தெரியாமையென்றே கூறுவார்கள். இது நிற்க.

நம்மவரெடுத்துக்கொண்ட நூல், ஆடை என்பவைகளில் நூல் ஓர்காலத்திலும் ஆடை ஓர்காலத்திலும் வியக்தம். நூலாயிருந்த போது ஆடை என்னும் பேரில்லை. ஆடையாயுள்ளபோது நூல் என் னும் பேரில்லை. நூல் ஆடையாகத்திரிந்ததும் ஆடை நூலிலேநின்று வெளிவந்ததும் பிரிவறநிற்றலால் நூலையும், ஆடையையும் தனித்தனி இரண்டுகாலங்களிலன்றி ஒரே காலத்தில் கவர்ந்திடுதல் கூடாது. இந்த உபமானசாத்ருஸப்படி அறிவு சொப்பனவுலகு என்பவைகளில் அறிவு ஓர்காலத்திலும், சொப்பனவுலகு ஓர்காலத்திலும் வியக்த மாகவேண்டும். அறிவாயிருந்தபோது சொப்பனவுலகு என்னும் பேரில்லை. சொப்பனவுலகாயிருந்தபோது அறிவு என்னும் பேரில்லை. அறிவு சொப்பனவுலகாகத் திரிந்தும், சொப்பனவுலகு அறிவிலே நின்று வெளிவந்தும் பிரிவறநிற்றலால்அறிவையும்,சொப்பனவுலகை

யும் தனித்தனி இரண்டு காலங்களிலன்றி ஒரேகாலத்திற் கண்டிடுதல் கூடாது. நம்மவரது உபமானத்தை யநுசரித்தே யாமிவ்வாறு விசாரித்தோம். இங்ஙனமாக ஆடையையும், சொப்பனவுலகையும் சொன்மாத்திரமும், தோற்றன்மாத்திரமுமாக வுள்ளனவென்று நமது தோழர் கூறியது எந்த அறிவுகொண்டோ அறியேம். சொன்மாத்திரம், தோற்றன்மாத்திரம் என்பவைகட்கு யாம் விளக்கிக் காட்டிய முயற்கோடு கானற்சலம் என்பவைகள் விஷயமாயின. நூல் ஆடை என்பவைகள் விஷயமாகவில்லை. நம்மவர் அவைகளை எவ்வாறு விஷயமாக விளக்கிக்காட்டுவாரோ அறியேம். எமது பிரவசனத்தால் பூர்வபட்சியார் எடுத்துக்கொண்ட வுபமான வுபமேயங்கள் சொன்மாத்திரமும், தோற்றன்மாத்திரமு மாகாதொழிந்தமையால், சொப்பனவுலகைச் சூனியமென்றொழித்து (உள்ளது அறிவே) என்று சாதித்த அவரது ஸித்தாந்தம் புன்மையடைந்துபோயிற்று. (அறிவே உலகம்) என்பது அழிந்தபடி (உள்ளது அறிவே) என்பதும் அழிந்தமையால் இனி அவர் கூறும் ஏனைய புதுமைகளையும் விசாரித்திடுவாம்.

(இந்துஜனபூஷணி 1888ஸ்ரீ ஜூன்மீ 2உ).

நமது தோழர் கயிற்றை மயக்கத்தால் அரவெனக் காணும்போது அரவாகவும், தெளியும்போது கயிறாகவுங் காணப்படுவதுபோல் அறிவை மயக்கத்தால் உலகாகக் காணும்போது உலகாகவும், தெளியும்போது அறிவாகவுங் காணப்படுதலின், அறிவே சொப்பனவுலகாதல்போல் சாக்கிரவுலகுமாமெனவும், அங்ஙனமாயினும் கயிற்றினிடத் தரவுதோற்றலும், நிகழ்தலும், அழிவுபாடெய்தலு மின்றெனத் துணியப்படுதல்போல அறிவு கருதியவண்ணங் காணப்பட்டதேயன்றி அதனிடத் துலகு தோன்றிநின்றழிந்ததில்லையெனவும், அரவு தோன்றியதும் அறிவினிடத்தேயாகலின் அரவுக்கு முதற்காரணம் அரவேயாகுமெனவும் பிரஸங்கித்தனர். இதனையும் விசாரிப்பாம். நம்மவருக்குக் கயிறும், அரவும் உபமானப்பொருள்களும், அறிவும், உலகும் உபமேயப்பொருள்களுமாகி நிலைத்தன. கயிறும் அரவும் ஸத்தியமானவாறு அறிவும் உலகும் ஸத்தியமாகும். கயிற்றில் அரவு ஸத்தியமாகாததுபோல அறிவில் உலகு ஸத்தியமானதில்லையெனின், கயிற்றினிடத்தில் அரவை அஸத்தியமாகக்கண்டது கயிறு? அல்லது அரவா? இரண்டுமல்லவாகி அவ்விரண்டற்கும் வேறாகிய தொருபொருளென்பது நிச்சயம். இவ்வுபமேய நிதரிசனத்தால் அறிவில் உலகை அஸத்தியமாகக் கண்டது அறிவும், உலகுமல்லவாகி அவ்விரண்டற்கும் வேறாய தொருபொருளாதலமையும். அஃதியாது? அறிவுக்கு வேறாய் ஜடமாய்க்காணப்படும் உலகையே இன்மைப்பொருளாக்கவந்த நம்மவருக்கு அறிவும், உலகுமன்றி மூன்றாவதொருபொருளுண் முளைத்தது அவரது அதிர்ஷ்டமேயாம். அறிவே ஸத்தியம், உலகு மிச்சையெனத் தாபித்தற்குக் கயிற்றரவு நியாயம் பிரதிகூலமென்க. கயிறு தன்னை

அரவாக மயங்கின், அறிவு தன்னை உலகமாக மயங்கும். அஃதின்மை யின் அறிவு மயங்கியதின்மையறிக. அறிவு என்று ஓர் பொருளுக்குப் பேரிட்டுவிட்டு, அதனிடத்தில் அறியாமையையேற்றி, அது மயங்கிய தென்றிடல் யாங்ஙனம்? அது மயங்குமாயின் அதனை அறிவென்றிடல் யாங்ஙனம்? கயிற்றில் அரவைக் கண்டபொருள் அவ்விரண்டற்கும் வேறாய தோர்புருடனேயன்றோ? அவன் யாவனென விசாரிக்கின், அறிவாகிய பிரமம் தனது நிலைகெட்டு அறிவறியாமையோடு கூடிய ஜீவனாய் நின்ற கற்பிதப்பொருளே யாகையால், அவரது மதம் கேவலம் விரோதமாயுள்ளதென்க. காரணவறிவு நிர்மலமும், காரியவறிவு கல்மஷமுமாயிடுதல் யாங்ஙனம்? அறிவுக் கன்னிய மில்லாதபோது கல்மஷம் அதற்கெப்படிவந்தது? கல்மஷ மின்றெனின் ஜீவசப்தம் ஏன் பிறந்தது? அதுவு மின்றெனின் கயிற்றை அரவாக மயங்கினான் என்றது யாரை? அதுவும் பொய்யெனின் உள்ள மெய்தான் யாது? அறிவொன்றுள்ளதுதான் மெய்யெனின் இங்ஙனங் கூறுவதுமாத் திரம் மெய்யாதல் யாங்ஙனம்? சிதாபாஸனாகிய இல்லாத ஜீவனது பிரவர்த்தகம் அந்த ஜீவனைப்போல் இல்லாததேதே யாகையால், அவர் கூறிய (அறிவொன்றே யுள்ளது) என்பதும் இல்லாததேயாகும். எல்லா மில்லாததாய்ப் போகின்ற அவரது ஸித்தாந்தம் சூனியசித் தாந்தமென்க. அன்றியும் முந்திய பிரமவறிவு தன்னை யுலகமாகவும், ஜீவனாகவும் மயங்கியது. பிந்திய ஜீவ அறிவு கயிற்றை அரவாக மயங் கியது. இவை மயக்கநிலையிலேயே கிடத்தலால் இந்த ஸித்தாந்தம் (முற்று மையநிலைபெற்று நின்மல மிலாததால்) என்றபடி பிரமை ஸித்தாந்தமாகவும் வியக்தமாகின்றது.

இனி நம்மவரது உபமான உபமேயங்களில் கயிறு அறிவுக்கும், அரவு உலகுக்கும் பொருந்தின. கயிறு ஜடம். இந்த வுபமானத்தை அறிவாகிய பிரமத்தோ டொன்றக் கூறினர். அரவு சித்து. இதனைக் கொண்டுபோய் அசித்தாகிய உலகத்தோடொன்றக் கூறினர். உப மானப்பொருளும், உபமேயப்பொருளும் பொதுத்தன்மையால் தம்மி லொருவாறு ஒக்கினும், சிறப்புத்தன்மையால் ஒன்றிலொன்று வேறாகி இரண்டுமுதலாதல் ஸர்வஸம்மதம். இங்ஙனமாகவும் உபமானமே உப மேயம், உபமேயமே உபமானம் என விரண்டையு மொருமுதலாகக் கொண்டு அறிவே கயிறு, கயிறே அறிவு எனத் திரிபுணர்ச்சியான் மயங்கி (த் தமது கொள்கையின்படி உபமானப்பொருளாகிய கயிற்றி னிடத்தில் அரவு தோற்றினும், உபமேயப்பொருளாகிய அறிவி னிடத்து அவ்வரவு தோன்றியதாகவே கொண்டு) அரவுக்கு முதற் காரணம் அறிவேயெனச் சாதித்தல் யாங்ஙனம்? அறிவே கயிறு, கயிறே அறிவு என்னுமதுகொண்டுதாம் முன் சித்தென்று சொல்லிய அறிவை ஜடமென்று சொல்லவருந் தோஷத்துக்கு அவர் தேடும் பரிகாரம் யாது? அவரது வார்த்தைகள் யாவும் பரிகாஸத்துக்கே இடஞ்செய்தலால் அஸத்காரியவாதியாகிய அவரது பிரசங்கம்

நிஸ்ப்ருஹமென்க. அவர் கயிற்றரவு திருட்டாந்தத்தால் (அறிவே உலகம்) என்று சாதித்தலும், சொப்பனவுலகைப்போலச் சாக்கிரவுலகும் அறிவேயென்று தாபித்தலும் வெறுஞ் சொல்லேயன்றிச் சாதித்தபாடும், தாபித்தபாடுமில்லை. இந்த வியவஸ்தையால் அறிவு உலகன்றெனத் துணியப்பட்டுப் பூர்வபட்சியாரது மதம் நிரஸ்தமாயிற்று.

இனி, நம்மவர் (விசாரித்தற்கு முன்னர் உள்ளதாகத் தோன்றிய கடம் விசாரித்துத் தெளிந்தபோது இல்லதாக முடிதலின், கடம் தோற்றலும், நிகழ்தலும், அழிவுபாடெய்தலும் அறிவினிடத்தன்றி மண்ணினிடத்தி லல்லவாகலின், அறிவே கடமாம்) என்றனர். ஒருவனொருபதார்த்தத்தை விசாரித்து இல்லையென்று வாயாற் சொல்லிவிடுவதினாலேயே அது இல்லாமற்போய்விடமாட்டாது. ஒரு பதார்த்தமிருந்ததனால், அதனை விசாரிக்கவந்ததே யன்றி அது இல்லையாயின் விசாரிக்கவேண்டியதின்றாம். இல்லாத பதார்த்தம் உள்ளதுபோற்றோன்ற வதனையே விசாரித்து இல்லதாகத் தெளிந்ததெனின், இல்லாதது உள்ளதாகத் தோன்றியதற்கு ஓரேது வேண்டுமாகலின், அவ்வேதுயாது? ஏதுவின்றி முன்னில்லாதது தோன்றமாட்டாதாகையால் முன்னிருந்ததே தோன்றியதெனல் ஸித்தம். இதனால் விசாரித்தற்கு முன்ன ருள்ளதாகத் தோன்றிய கடம் விசாரித்துத் தெளிந்தபோது இல்லாததாய்விட்டது என்று ஸந்தோஷித்தது ஸந்தோஷமாகாது. உள்ளதை இல்லாததாக விசாரித்தது விபரீதமேயாம். உள்ளதை இல்லதாகவும், இல்லதை உள்ளதாகவுந் தெளிதல் யாங்ஙனம்? கடம் ஜடம், அறிவு சித்து. ஜடம் சித்தில் யாங்ஙன முதிக்கும்? சித்திலே சித்தன்றிக் கடமுதியாதாகையால், அறிவிலேதானே கடமுதித்தது என்னு மஸங்கதம் அடிப்பட்டுப்போய்விட்டது. இதனால் கடமுதித்தது மண்ணினிடத்தென்றே வியக்தமாயிற்று. அவரது கொள்கையின்படி அறிவே கடமாயின், கடமில்லாததாய்விடுகிறபடி அதற்கு மூலமாகிய அறிவுமில்லாததாய்விடும். இல்லாததி லில்லாதது பிறக்குமேயன்றி உள்ளதி லில்லது பிறவாது. அறிவு உள்ளது என்பாரெனின் அதிற்றோன்றிய கடமுமுள்ளதாகும். கடத்திற்கு அறிவு காரணமென்றவிடத்தும், மண் காரணமென்றவிடத்தும் கடத்திற்கு இன்மையை யொப்ப முடியாமையால் அதனைத் தெளிந்தபோது இல்லாததாகக் கண்டோமென்ற வாதமே நிலையில்லாததாய்விட்டது. மண் ஜடமாகையால் அதிற் காரியமாயுள்ள கடவிகாரத்தை ஜடத்தினின்று நீங்கிய சித்தாயிருப்பதொன்று வெளிப்படுத்தியதென்க. இதனால் கடத்துக்கு மண்ணைப்போல் அறிவுங் காரணமெனல் நிலைத்தது. மண் முதற்காரணமும், அறிவு நிமித்தகாரணமுமாகும். இரண்டுங் காரணங்க ளாயினமையால் இவ்விரண்டானுங் காரியப்பட்டதொன்றை இல்லாததாக விசாரித்துத் தெளிந்தோமென்றது பரிகசிக்கத் தக்கதேயாயிற்று.

நமது தோழ ரிவ்வளவிலமையாது (கடம் மண்ணாகியும், மண் அணுவாகியும், அணு பரமாணுவாகியும், அப்பரமாணுவானது ஆராய்

ய்ச்சியி லின்றாகியுஞ் சூனியப்பட்டு அறிவே கடமாயிடுதல் யாங்ஙனமோ, அங்ஙனமே பிருதிவிமுதலியபாவும்இல்லையெனவும், ஆராய்ச்சியில் உலகிலுள்ள பொருள்கள் யாவும் அறிவின் காரியமேயாமெனவும், அதனால் அறிவே உலகெனவும்) கூறினர். மண்ணானது அணுவாயும், அணுவானது பரமாணுவாயும் பாகிக்கப்படினும் அவை முடிவிலில்லாமற் போய்விடுதல்அஸங்கதம். கண்ணுக்குக்காணக்கூடாமல் அதி ஸூக்ஷ்மரூபமாயிருக்குமத்தால் அதனை யில்பொருளாகத் துணிதல் கூடாது. (உள்ளது போகாது, உள்ளது உள்ளதே) என்னுந் தருக்கத்தால் கடஞ் சிதைந்து பரமாணுவானவிடத்தும் போகாததும், உள்ளதுமேயாம். (இல்லதுவாராது, இல்லது இல்லதே) என்னுந் தருக்கப்படி உலகம் இல்லாதாயின் வரமாட்டாது. வந்திருக்கையால் முயற்கோடுபோல் இல்லதாகமாட்டாது. உலகம் இல்லாததாயின் (இல்லதற்குத் தோற்றமின்மையின்) என்ற நியாயத்துக்கு விரோதமுண்டாம். அவ்வுலகு தோன்றியிருத்தலால் அது ஒடுங்குமிடத்து இல்லாததாய் விடுமெனின் (யாது யாண்டொடுங்கும், அஃதாண்டுதிக்கும்) எனவும், (ஒடுங்கினவிடத்தினின்று மீளவுண்டாம்) எனவும் போந்த தருக்கவுரைகளால் புனருற்பவங்கூறும்வேதாகமங்களும் பொய்பட்டுப்போம். அநந்த ஸ்ருஷ்டிகளையும், கற்பங்களையுமொப்பிய வைதிகஸித்தாந்தமும் அடிபட்டுப்போம். (அறிவே உலகம்) என்றது (பாலே தயிர்) என்னும் பரிணாமமாகவு முடிதலால் அறிவு சிதைந்து உலகமாகித் தயிருக்கே இருப்புக் கூறுதல்போல உலகிற்கே இருப்புக்கூறி, அவ்வுலகம் ஜடமாகின்றமையானும், அவர் சித்தாந்தப்படி சூனியமாகின்றமையானும் (அறிவொன்றேயுள்ளது) என்னு மவரதுமதம் அநாதரணியமாகும். (அறிவே உலகம்) என்றதும் பித்துரையாக முடியும். எடுத்துக்கொண்ட பிரமேயத்தையொருவாறு விசாரித்து முடிவுசெய்து விசிராந்தியடைந்தோம்.

(இந்துஜனபூஷணி 1888௵ ஜூன்௴ 9௳) * அத்வைதி.

சொப்பனம் சத்தியமென்பதை மறுத்து, அறிவே உலகமென வுரைத்தல்.

1888௵ பிப்ரவரி௴ ௨௯௳ பிரசுரமான ப்ரம்மவித்தியாவின்கண் "அறிவே உலகம்" (திருக்கே திருசியம்) என்னும் விஷயமொன்று சுருக்கி வரைந்தாம். இந்துஜனபூஷணி பத்திராசிரியர் அதனை 1888௵ ஏப்ரல்௴ ௭௳ வெளியான தமது பத்திரிகையின்கண் பொறித்து விளக்கினார். 1888௵ மே௴ 19௳ 26௳ ஜூன்௴ 2௳ 9௳யில் பிரசுரமான ஷை பத்திரிகைகளின் வாயிலாகவே "அத்

* அத்வைதி யென்பவர் சூளை-சோமசுந்தர நாயகரென அவரே மற்றொரு பத்திரிகையில் தெரிவித்திருக்கிறார்.

வைதி" எனப் பெயர் புனைந்த பிரதிவாதியாரொருவர் "அறிவே உலகம்?" என்னு முடிப்பெயர் சூட்டி யாம் கூறியதை மறுத்தார். அதனைப் பூர்வபக்ஷம் செய்யக்கருதி "சொப்பனம் சத்தியமென்பதை மறுத்து, அறிவே உலகமென உரைத்தல்" என்னும் விஷயத்தை யுரைக்கலுற்றும்.

சாக்கிரவுலகம் எவ்வாறு சத்தியமோ அவ்வாறே சொப்பன வுலகமும் சத்தியமெனப் பிரதிவாதியார் அபிப்பிராயப்படுகின்றார். சாக்கிரவுலகத்தை அறிவு, புறக்கருவிகளான இந்திரியங்கள் வாயிலாக அறிகின்றதெனவும், சொப்பனவுலகை இந்திரியங்கள் வாயிலாகவன்றி நேரே யறிகின்றதெனவும் கூறுகின்றார். ஒருபொருளை அறியவேண்டின் இந்திரியங்களின் துணையின்றி அறிதலாகாது. ஆகுமெனின் இப்போது மெய் வாய் கண் மூக்கு செவி இவற்றின் ஞானமின்றி இவ்வுலகை யறிதல்வேண்டும். அங்ஙன மின்மையான் அறிவானது சொப்பனவுலகை யிந்திரியங்களின் சகாயமின்றி யறிதலென்பது கூடாது. சொப்பனவுலகை நேரே யறியுமெனின் அவ்வறிவு பிரமாணமாத லின்றியமையாமையன்றோ? அஃது பிரமாணமாயின் காண்டல் கருதல் உரைமுதலிய பிரமாணங்களி லொன்றுதல் வேண்டும். காண்டலெனக் கொள்வோமெனின் இந்திரியவாயிலாகவன்றித் தோன்றுமறிவைக் காண்டலெனக் கூறுதல் அமையாது. மானதக்காண்டலெனின் அஃதும் பொருந்தாது. மானதக்காண்டலென்பது ஆன்மாவின் சுகம் துக்கம் அறிவு முதலிய பல குணங்களைக் கவருவதேயன்றி மற்றப்படி யல்லவென நியாயநூல் கூறுதலாலென்க. அறிவின் றிரிபே சொப்பனவுலகாதலால் மண்ணைக் காணும் கண், குடத்தையும் காண்பதுபோல் அறிவை யறியுங் கருவியான மனம், அவ்வறிவின் றிரிபான சொப்பனவுலகை யறியுமெனின், குடம் மண்ணின் றிரிபாவதுபோல் சொப்பனவுலகம் அறிவின் றிரிபெனவும், அதை யுபமானமாகக்கொண்ட சாக்கிரவுலகமும் அத்தன்மைத்தெனவும், அதாவது அறிவே சாக்கிரவுலகமெனவும் கொள்ள வேண்டிவரும். சுவசம்வேதனப்பிரத்தியக்ஷமென்றாவது, யோகக் காண்டலென்றாவது கூறுதல் முற்றிலும் பொருந்தாது. ஆதலால் இஃது காண்ட லன்றென்றறிக. இனிக் கருதலென்போமெனின் அதற்கு வியாத்தி பக்க தரும வுணர்வு முதலிய பல காரணங்க ளின்மையால் கருதலுமாகாது. உரையென் றுரைப்பாமெனின் பிரதிவாதியார் உரைபன்றி வேறு உரை சித்தித்த விலது. ஆதலால் அதுவும் அமையாது. இப்பிரமாண விலக்கணங்கள் சற்றேனு மமையப்பெறாத சொப்பனவறிவு, மயக்கமென்றே கூறற்பாலதாமென்க.

சொப்பனவுலகு ஜாக்கிரவுலகைவிட வேறு மெய்யாயின் வேறாகவே காணப்படவேண்டும். அவ்வாறின்றி அது ஜாக்கிர வுலகமே யாகவும் ஜாக்கிர வுலகானுபவமாகவும் காணப்படுகின்றமையால் பொருந்தாது. அன்றிச் சென்னையினின்றும் மதுரைக்குப் போவது

போலவும், போவதாய்த் தெரிவதுபோலவும், வேறுவேறு பொருளாகவும், வேறுவேறு இடமாகவும், வேறுவேறு அநுபவமாகவுங் காணப்படுதல்வேண்டும். அங்ஙனமின்றி ஜாக்கிரமே சொப்பனமாக காணப்படுதல் கண்கூடாம். சாக்கிரம் ஒருமணிநேரம், சொப்பனம் பலநாளாகின்றன. இது சூரிய சந்திர நட்சத்திரங்களின் கதிக்கு முற்றும் விரோதம். ஜாக்கிரத்தில் குழந்தைப் பருவமுதல் 70வயது வரையில் வளர்ந்துவந்ததாக வறியாநின்றோம். சொப்பனத்திலும் குழந்தைப் பருவமுதல் 70 வயசுவரையில் வளர்ந்துவந்ததாக அநுபவப்படுகின்றது. சொப்பனத்தில் காணும் ஷெ அநுபவ முண்மையாமா? அதுமட்டில் ஷெ அநுபவம் மயக்கமென்றும் அசத்தியமென்றும் ஒப்புக்கொள்ளாவிடில் வேறுவழியென்ன? சேலத்திலிருந்து மதுரைக்கு 20 வயசில் போவோமாயின் 20 வயசில் போனதாகவே தெரிகின்றது. அங்ஙனமே ஜாக்கிரத்திலிருந்து 20 வயசில் சொப்பனவுலகத்திற்குப் போவோமானால் (அதாவது சொப்பனவஸ்தையைக் காண்போமாயின்) அவ்வாறு தோன்றாது, இளமைப் பருவமுதல் அவ்வவஸ்தையில் வளர்ந்து வந்ததாகவே அநுபவப்படுகின்றது. ஆதலால் சொப்பனம் மனோபிராந்தியேயாம்.

அறிவு, ஜாக்கிர சரீரத்தினின்றும் சொப்பன வுலகைக் காண்கின்றதெனின் ஜாக்கிரவுலகிலேயே சொப்பன வுலகிருத்தல் வேண்டும். ஒரு இடத்தி லிரண்டு சத்துப்பொருளிருத்தல் அசம்பவமாம். மனம் இச்சரீரத்தை விட்டுத் தூரமாய்ச்சென்று சொப்பனவுலகையுணர்கின்றதெனின், அக்காலத்து மன மிச்சரீரத்திலில்லாது சொப்பன சரீரத்திற் செல்கின்றதாகின்றது. அங்ஙனமாயின் மனத்தினுடன் ஜீவனும் பிராணனும் அச்சரீரத்திற் சென்று இச்சரீரம் பிணமாதல்வேண்டும். நித்திரை புரியுங்கால் இச்சரீரத்தில் உஷ்ணம், பிராணன், நாடியடித்தல், ரத்த ஓட்டமுதலிய விருத்தலாலும், பிணம்போல் அமங்களகரமாயின்றி மங்களகரமா யிருத்தலாலும் அஃதுண்மை யன்று.

சொப்பனத்தின்கண் திரிசிரபுரத்திற்கு வடக்கு மதுரை யிருப்பதாகவும், வடதிசையில் சூரியோதய மானதாகவும், மிருகங்கள் பேசுவதாகவும், நாம் பறப்பதாகவும், நாம் மரித்து நம்மைத் தூக்கிப்போவதாகவும் இன்னு மிவைபோன்ற அசம்பவமான பலவற்றையும் பார்க்கின்றோம். நாம் ஒவ்வொரு நாளிலும் பலசொப்பனங்கள் காண்கின்றோம்; அவற்றில் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லை. சொப்பனம் சத்தாமாயின் ஒவ்வொரு முறையிலும் காணுமுலகு வேறுவேறெனவே கொள்ளற்பாலது. அவ்வா றின்றென்பதை நாமறிகின்றோம். பல்லாயிரங்கோடி ஆத்துமாக்கள் தங்களாயுளில் காணும் சொப்பனவுலகங்கள் இத்தனைகோடியென் றெண்ணுதற் காகாவென்பது திண்ணம். எண்ணிக்கையிலடங்கா அத்தனைகோடி சொப்பன வுலகங்களு மிவ்வொரு உலகிலேயே இருத்தல்வேண்டும்; மன மிச்

சரீரத்தினின்றே (சத்தென்றவர் கூறும்) சொப்பனவுலகைக் காண்கின்றதெனப் பிரதிவாதியா ருரைத்தலினு லெனக. ஒரு சத்துப்பொருளின்கண் பிறிதொரு சத்துப்பொருளே யிருத்தல் அசம்பவமெனின் அளவற்றகோடி சத்துப்பொரு ளிருத்தலாமெனல் யுக்தி அநுபவ விருத்தமேபாம்.

நாமிரண்டு சத்துப்பொருளைக் காண்போமாயின், இதுவேறு, அதுவேறு என்னும் ஞான முண்டாகின்றது. அவ்வண்ணமே ஜாக்கிரவுலகம் சொப்பன வுலகமாகிய விரண்டுஞ் சத்துப் பொருளாயின் இரண்டுந் தனித்தனியே வேறென்னும் ஞான முண்டாகவேண்டும். அவ்வாறின்றியிதுவேஅதுவென்னும்ஞானமுண்மையான், இரண்டுஞ் சத்தெனல் அமையாது. தூரத்திலுள்ள பொருளைக் கனவின்கண் காணுகின்றோம். அப்பொரு ளிங்கு வந்ததா? அங்கு நாம் சென்றோமா? அது வந்ததெனின், அது இங்கு வருங்கால் இவ்வுலகு சென்ற திபாங்ஙனம்? யாம் சென்றோமெனின் இந்தத் தேகம் பிணமாதல்வேண்டும். சாக்கிராவஸ்தையின்கண் கடிகாரமொன்றை ஒரு மாதத்துக்குமுன் வாங்கி வீட்டில் வைத்தோம். சொப்பனத்தும் அக்கடிகாரத்தை வீட்டிலிருக்கக் காண்பதனோடு, ஒரு மாதத்துக்கு முன் வாங்கினோமென்னும் ஞானமு முண்டாகின்றது. அதனை ஜாக்கிரத்தில் வாங்கினோமேயன்றிச் சொப்பனத்தின்கணல்ல. ஜாக்கிரத்தில் இறந்த பிள்ளை சொப்பனத்தி லுயிருடனிருக்கக் காண்கின்றோம். புத்திரனில்லா வொருவன் புத்திரன் பிறந்ததாகப் பார்க்கின்றான். பித்தம் சந்நிபாததோஷ முதலியவற்றால் நனவும் கனவுமல்லாத வேறு உலகம் தோற்றுகின்றது. நனவில் அதிக வேலை செய்யின் கனவு காண்பதில்லை; அல்லது விசேஷமாகக் காண்பதில்லை. சில பித்த பதார்த்தங்களைத் தின்போமாயின் விசேஷ சொப்பனங் காண்கின்றோம். நித்திரையின்வசம் கனவேயன்றிக் கனவின்வசம் நித்திரையன்று கனவு இதைப்போன்று வேறு சத்தாயின் அது வேறுமாதிரியா யிருத்தல்வேண்டும்; அவ்வா றில்லையென்பது நமதனுபவம். கனவின்கண் நமது சினேகிதனுடன் பேசினதாகக் காண்போமானல் நனவில் அவன் பேசியதாக ஒப்புக்கொள்ளுகின்றானில்லை.

சொப்பனத்தைவிட்டு நாம் சாக்ரத்திற்கு வந்தபின் அச்சொப்பனவுலக மிருக்கின்றதா? இருக்கின்றதெனில், அங்கு யார் சுகதுக்கங்களை அநுபவிப்பது? இன்றெனின் அந்தந்த க்ஷணத்தில் பல்லாயிரங்கோடி பிரபஞ்சங்கள் சிருஷ்டிக்கப்படல்வேண்டும். நாம் தினந்தோறும் காணும் பல்லாயிரம் சொப்பனவுலகங்கள் பல்லாயிரங்கோடி ஆத்துமாக்களுக்காகச் சிருஷ்டிக்கப்படுகின்றனவா? நம்மொருவர் பொருட்டுச் சிருஷ்டிக்கப்படுகின்றனவா? பல்லாயிரங்கோடி ஆத்துமாக்களுக்காகவெனின், அவ்வாத்துமாக்க ளங்கிருந்தனவாகச் சாக்ரத்தில் ஒப்பவில்லையாதலின் அஃதுண்மையன்று; நம்மொருவர்நிமித்

தம் சிருஷ்டிக்கப்படுகின்றனவெனின், ஒருவர்க்காக க்ஷணத்துக்கு க்ஷணம் அளவற்ற கோடி யுலகங்கள் சிருஷ்டிக்கப்படுகின்றன வென்பது கூடாது; இந்தச் சாக்கிரவுலகம் அளவற்ற கோடி ஆத்துமாக்களுக்காகச் சிருஷ்டிக்கப்படுகின்றமையாலென்க. அளவற்ற கோடி ஆன்மாக்களுக் கிவ்வொரு உலகம் சிருஷ்டிக்கப்பட்டதென்பது நியாயமாகுமேயன்றி, ஒவ்வொருவ ராயுளினும் ஒவ்வொரு நாளினும் பலமுறை காணும் சொப்பன வுலகங்கள் பித்தம் சந்நிபாத தோஷமுதலிய காலங்களில் காணுமுலகங்கள் இவைமுதலியவை ஒருவர்பொருட்டுச் சிருஷ்டிக்கப்படுகின்றனவென்று கொள்வது சரியாமா? சிருஷ்டிக்கப்படுகின்றனவாகக் கொள்ளினும் சுழுத்தி அவஸ்தையினும் சாக்கிராவஸ்தையினும் மூர்ச்சை சமாதி காலங்களினும் அவை க்ஷணத்துக்கு க்ஷணம் அழிக்கப்படவேண்டுமன்றோ? சொப்பனம் மெய்யாயின் அதில் காணப்படும் நமது மித்திரர்களும் சத்துருக்களும் இவ்விருதன்மைய ரல்லாதவர்களுமான மனிதர் முதலிய சகல ஜீவராசிகளு மெய்யாதல் வேண்டும். மெய்யாகுங்கால் நாம் சுகதுக்கங்களில் மொத்துண்டு அவற்றை ஜாக்கிரத்தில் வந்துரைப்பதுபோல் நமது சொப்பனத்தில் காணப்பட்டவர்களும் வந்து கூறல் வேண்டும். கூறாமையால் அவர்கள் அசத்தாகின்றார்கள். இதனால் சொப்பனவுலகம் பிரமையினா லுண்டானதேயன்றிச் சத்துப்பொருளன்றென்பது திண்ணம். நாம் நாடகங்கள் பார்க்குமிடத்தும், காவியங்களைப் படிக்குமிடத்தும், கேட்குமிடத்தும், எழுதுமிடத்தும், பித்தவிகாரத்தின்கண்ணும், மயக்க வஸ்துவை உட்கொண்டவிடத்தும், சந்நிபாதசுரத்தினும், அபூர்வமான கதைகளைக் கேட்குமிடத்தும் ஜாக்கிரவுலகை மறந்து அவ்வவ்விஷயங்கள் எதிர்நிற்பனபோல அனுபவியாநின்றனம். அவை மனத்தோற்றமேயன்றி யுண்மையாமா? ஜாக்கிரத்தில் 50 வயசுள்ள மனிதனைக் கண்டு, நீ பிறந்து எத்தனை வருஷங்களாயின என்று வினவில் அவன் 50 வருஷங்களென்பான்; அஃதுண்மையே. சொப்பனத்தில் அவனை வினவில் அங்கும் 50 வயசென்றே விடையளிப்பான். சொப்பனத்திலளித்த விடை யுண்மையாமா? அப்போதுதான் தோன்றியவன் 50 வயதென யாங்ஙன முரையாட லமையும்?

காரணமாய நூலும் ஜடம், காரியமான ஆடையும் ஜடம், ஆகலால் நூலினின்று மாடை தோன்றுவது நியாயந்தான்; அவ்வாறு சித்தின்கண் சடமான பிரபஞ்சம் தோன்றுவது யாங்ஙனமமையும் எனின் கூறுவாம்: சித்தின்கண் அவ்வாறான சடசத்தியிருந்தால் தோன்றும். ஜடமான பழுதையின்கண் பாம்பானசித்துத் தோன்றவில்லையா? சடமான கட்டையில் சித்தான மனிதன் தோன்றவில்லையா? இவ்வாறே சித்தினிடத்துச் சடமான வுலகு தோன்றுகின்றது. சந்திரனில்லாப் பகற்காலத்தில் ஆகாயத்தில் சந்திரனிருப்பதாக வெண்ணுவோமாயின் அவ்வாறே மனதுக்கு அது விஷயமாகின்

றது. தோற்றப்படும் சடமான சந்திரன் சித்தின்கண் தோன்றியிருந்து மறைகின்றது. விசேஷ பித்தங்கொண்ட மனிதனுக்கு வேறு உலகங் காணப்படுகின்றது. அவ்வுலக மறிவினிடமே உதித்ததென்று ஒத்துக்கொள்வோம். அவ்வுலகமோ சடம்; அதன் காரணமான அறிவோ சித்து. ஒரு மனிதனுக்கு ஓர்வித வியாதி வந்தது; வந்தது முதல் அவனுக்குப் பின் ஒரு எருமைமாடு கூடவருவதாய்த் தோன்றிற்றும். அதற்குப் பலர் பல அவுஷதங்கள் தந்தும் தீராமல் முடிவில் ஓர் டாக்டர் அவுஷதங் கொடுத்துத் தீர்த்தாரென ஓர் பத்திரிகை சில வாண்டுகளின் முன்னர்ப் பேசியது. சில நாட்களின்முன் ஓர் பைத்தியக்காரன் 'தூள்கொடு தூள்கொடு' என்று முன்னிலையில் யாரோ விருப்பதாகக் கேட்பதை நாம் பார்த்தோம். அவனுக்கு எதிரில் மனிதன் தோற்றியே அவ்வாறு கேட்டான். தோற்றிய அம்மனிதனது சரீரமான சடம், சித்தான பித்தன் அறிவினின்றுமே தோன்றிற்றெனவுணர்தல்வேண்டும். "ஒரு மனிதனுக்குச் சந்நிபாததோஷம் கண்டு பித்தலும் பிதற்றலுமாகப் பேசினனென்றும், அப்போது 'பூச்சி கடிக்கின்றது, பூச்சி கடிக்கின்றது' என்று பயந்து விலகினனென்றும் நமது சிநேகிதரொருவருரைத்தார். இம்மாதிரிப் பலவிடங்களிலும் காண்கின்றோம். இது நூதனமல்ல. சடசித்தான பூச்சி, சித்தான அறிவினின்று முதிக்கவில்லையா? பூச்சியின் சரீரமான சடமே யிதில் நாமெடுத்துக்கொள்ளவேண்டிய வுவமானமாம். இதனாற் கூறுவதியாதெனின் சடத்தினின்றும் சடமுண்டாகலாம்; சித்தினின்றுஞ் சடமுண்டாகலாம். காரணத்தில் எந்தெந்தச் சக்திகளிருக்கின்றனவோ, அந்தந்தச் சக்திகள் வெளிப்படும். சித்தினின்றும் சித்தே யுண்டாகவேண்டுமென்னும் நியமமில்லை. இங்ஙனமே சித்தினின்றும் சொப்பனப்பிரபஞ்சமான சடம் தோன்றுகின்றது. மனந்திரிந்து உலகாயிற்று? திரியாமலாயிற்று? எனின் திரியாமலே யாயிற்று; கயிற்றினிடம் அரவும் கட்டையின்கண் கள்ளனும்போல. எங்கே யொரு பொருளின்கண் மற்றொரு பொருள் விவர்த்தகாரியமாகத் தோற்றுகின்றதோ! அது அசத்தேயாகும். விவர்த்தகாரியம் அசத்தாவதில் அதன் காரணமும் அசத்தாகவேண்டுமென்றுரைப்பது அனுபவவிரோதம். கயிற்றின்கண் விவர்த்த காரியமாய் அரவு பொய்யானால் கயிறும் பொய்யாமோ? சூரியன் கண்ணாடியில் பிரதிபலிப்பதுபோல், அறிவு, சொப்பன சரீரத்திற் பிரதிபலிக்கின்றது என யாமுரைத்ததில் சூரியனும் கண்ணாடியும் பின்னமானமையின் பிரதிபலிக்கக் கூடுமென்றும், அறிவே உலகு என்பதில் அறிவு முலகும் அபின்னமானமையின் பிரதிபலித்தல் அமையாதென்றும், இஃது உவமானதோஷமென்றும் பிரதிவாதியா ருரைக்கின்றனர். அதற்குச் சமாதான முரைப்பாம். அறிவின்கண் பின்னசக்தி, அபின்னசக்தியென இரண்டு சக்திகளுள்ளன. அவற்றில் பின்னசக்தியின் காரியம் சேதனாசேதனமான வுலகம்; அபின்னசக்தியின் காரியம் நமது சரீராதி யிந்திரிய அந்தக்கரணங்களாம். சொப்பனத்தில்

அறிவினின்றும் உலகமுண்டாகின்றது; நமது சரீராதி அந்தக்கரணங்களுமுண்டாகின்றன. நமது சரீராதி அந்தக்கரணங்கள் தவிர அவ்வுலகிலுள்ள ஏனைய வான்மாக்கள் பின்னுசக்தியின் காரியமாயிருத்தலால் அவ்வான்மாக்கள் அநுபவியாநின்ற சுகதுக்கள், காரணமான அறிவிற்குத் தோன்றுவதில்லை; நமது சரீராதி யந்தக்கரணங்கள் அபின்னுசக்தியின் காரியமாயிருத்தலால் சொப்பனத்தில் நாமெடுக்கும் சரீரங்களுக்கு வரும் சுகதுக்கங்கள் அவற்றினுக்குக் காரணமானஷை அறிவிற்குத் தோன்றுகின்றன. சொப்பனத்திற் காணப்படும் ஏனைய பல சரீரங்கள் பின்னமாகத் தோற்றலின் சூரியன் பின்னமான கண்ணுடியில் பிரதிபலிப்பதுபோல அறிவும் சரீரத்தில் பிரதிபிம்பிக்கின்றதென் றுரைத்தாம். (சரீரமென்பது சரீரத்தின்கணுள்ள அந்தக்கரணம்) காரணமான அறிவைத் தவிரப் பல சரீரங்களில் காணும் அறிவென்பது வேறில்லையெனற்கு ஒருவாறு பிரதிபிம்ப திருஷ்டாந்தமேயன்றி மற்றப்படியன்று. ஆயினும் அதற்கு விடையு மளித்தாம்.

கயிற்றின்கண் அரவு தோற்ற முண்டாவதுபோல் அறிவினிடத்து உலகம் தோற்றுகின்றதென்பதற்குப் பிரதிவாதியார் செய்யுமாக்ஷேபமாவது: கயிறு, அரவு, அதைக் காணும் புருஷன் ஆக மூன்றிருப்பதுபோல் அறிவினிட முலகு தோற்றுகின்றதென்பதில் அறிவுஸ்தானத்தில் கயிறும், உலகு ஸ்தானத்தில் அரவும் ஆகவிரண்டேயிருப்பனவன்றி, மூன்று பொருளில்லாமையால் உவமானதோஷமென்பதாம். இதற்குச்சமாதானம்: பாவஸ்துவின்கண் உலகம் தோற்றல்மாத்திர மென்பதற்குக் கயிற்றினிடத்து அரவு உவமானமுரைத்தாம். இது சத்துப்பொருளில் அசத்துப்பொருள் தோற்றல்மாத்திரமென்பதுவரையில் உவமானம். கயிறுஸ்தானத்தில்பாவஸ்துவும், அரவுஸ்தானத்தில்சேதனுசேதனவுலகமுமாகவைத்துக்கொண்டால்சங்கை தோன்றுது. சத்தான பாவத்துவின்கண் அசத்தான அல்லது சத்துப்போலியான சேதனுசேதனவுலகம் தோற்றுகின்றதென்பதற்கே கயிறு அரவு திருஷ்டாந்தம். உவமான மேகதேசமென்ப தியாரு மறிந்தவிஷயமே. இதற்கே சொப்பனுவத்தையில் காரணமான அறிவின்கண் காரியமான சேதனுசேதனவுலகம் தோற்றுகின்றதென்னு முவமானமுங் கூறினும். அறிவு காரணமும், உலகங் காரியமுமாயிருப்பனவன்றி அபேதமாயிருக்கின்றமையால் அறிவு பேதப்பட்டு உலகையறிதல் கூடாதெனச் சங்கைசெய்கின்றூர் பிரதிவாதியார். அறிவின்கணுள்ள பின்னுசத்தியின் காரிய முலகமானமையால் வேறுகவே தோற்றுகின்றது; தோற்றுகின்றமையா லவ்வாறு அறியவும் வருகின்றது. அறிவுக்கும் சத்திக்கும் அபின்னம்; சத்திக்கும் சத்தியின் காரியத்திற்கும் (பின்னமாகத் தோற்றினும்) அபின்னமே. சந்திரனில்லா ஆகாயத்துச் சந்திரபாவனை செய்ய மனத்திற்குச் சந்திரன் தோன்றுகின்றது. அச்சந்திரன் மனத்திற்குப் பேதமாய்த் தோற்றி

னும் அபேதமே யன்றோ? பித்தனுக்கெதிரில் தோற்றும் பொருள்கள், அப்பித்தனுக்குப் பேதமாய்க் காணப்படினும், அவன் பேதமாயுணரினும் அபேதமே யன்றோ? அங்ஙனமே அறிவிற்குச் சொப்பனவுலகு பேதமாய்த் தோற்றினும் அவ்வாறுணரப்படினும் அபேதமேயாம். எது பின்னைசத்தியின் காரியமோ அது தோற்றமான அசத்து, அல்லது சத்துப்போலியேயா மன்றி யோர்போதும் சத்தாகாதென்றுணர்க.

(ப்ரம்மவித்யா 1889ஹு ஆகஸ்டுமீ 31வ.)

"மண்ணானது அணுவாயும் அணுவானது பரமாணுவாயும் பரிக்கப்படினும் அவை முடிவிலில்லாமற் போய்விடுதல் அசங்கதம். கண்ணுக்குக் காணக்கூடாமல் அதிசூக்குமாயிருக்குமத்தால் அதனையில் பொருளாகத் துணிதல் கூடாது" என்று பிரதிவாதியார் கூறினர். இதனால் உலகை இல் (அசத்) பொருளெனக் கூடாதென்பதேயவர் சம்மதம். ஆகலின் உலகைத்தை நியாயவழியேநின்று காரியகாரணவதுவால் கடத்தைவைத்து விவகரிப்பாம்:—

கடமென்பது செய்வதற்கு முன்னுமில்லை; அழிவுபாட்டிற்குப் பின்னுமில்லை; இடையில்மாத்திர முளது. ஆதலால் நடுகின்றகாலத்தில் மாத்திரம் சத்தெனின், முன்னும் பின்னு மில்லாதகடம் இடையில் மாத்திரம் எங்ஙனந் தோன்றும்? "இல்லது வாராது" என்னும் நியாயத்தால் இல்லது இல்லதேயாமன்றி யோர்போது முள்ளதாகாது. இடைநின்றகாலத்து உள்ளதுதான் எனின், மண்ணாயிருந்தபோதுகடமில்லை; (అతఏవ నహి కశ్చిద్విద్యమానయోర్భేద్యోత్పద్యమానయోః) மண்ணினிடத்து வளைவு குவிவு முதலிய குணங்க டோன்றியபோது கடமென்னும்பெயரை யடைகின்றது. வளைவு குவிவுமுதலிய குணங்களையன்றிக் குணியாகமாட்டாது. அந்தக் குணங்களும் குணியான மண்ணினிடத்துத் தோன்றி அம் மண்ணினிடத்தே காணப்படுகின்றன. குணி யெப்போதிருக்கின்றதோ, அப்போதே அதற்கொரு குணமு முளதென்றுணர்க. வளைவு குவிவு முதலிய குணங்கடோன்றுதற்கு முன்னரும் உருட்சி அல்லது வேறுகுணம் உளதென்பதாம். மண்ணானகுணி தன் குணத்தோடுங் கூடியமாத்திரத்தானே அம் மண்ணுக்குக் கடமென்னும் பொருட்பெயர் எவ்வாறு பொருந்தும்? (తస్యచ ద్రవ్యాన్తరత్వం అతశ్చ అన్యథాఘటో నభోవ్యాహారత్వాత్వస్యనుపపత్తేః) மண்ணானகுணியும் அதனிடத்துள்ள வளைவுமுதலிய குணங்களுமே யல்லாமல் கடமென்னும் சொல்லுக்குப் பொருள் வேறேயில்லாமையால், மத்தியகாலத்தும் கடமிலதென்றே கூறத்தகுமென்க. இதனால் கடமென்னும் பொருள் எப்போது மிலதென்றே துணியப்படும் என்க. கடமானது எக்காலத்தும் இலதாயின் கடமென்னும் தோற்றமு மில்லாமற் போகவேண்டும். கடத்தோற்றம் காணப்படுகின்றமை

யால் கடமில்லையென்று எவ்வா றுரைக்கப்படுமெனின் தோற்றமெல் லாம் பொருளாகும் வகையில் கயிற்றின்கண் பாம்பும் மெய்பாக வேண்டும். பாம்பு பொய்யாகத் தோன்றினும் கயிறென் றறிந்த விடத்துப் பாம்பு தோன்றவில்லை; கடம் அவ்வாறல்ல; மண்ணைத்தவிர எப்போதும் கடமில்லையென்று அறிந்த பின்பும் கடம் தோன்று கின்றதே எனின், தோற்ற மிரண்டுவகை: காரணத்தைக் கண்டபின் னர்க் காரியந் தோன்றுதிருப்பதொன்று; அது கயிற்றின்கண் பாம்பு முதலியன; காரணத்தைக் கண்ட பின்னரும் காரியந் தோன்றுவ தொன்று; அது கானல்நீர் முதலியனவாம். கடத்தோற்றம் கானல் நீர் முதலியனபோல்வதாகலின் காரணமான மண்ணை எப்போதும் உளதெனவும், காரியமான கடம் எப்போது மிலதெனவும் ஆராய்ந்து தெளியினும் கடத்தோற்ற மில்லாமற் போவதில்லை. இதுவரையி னும் தோற்றம் பொருளல்லவென் றுரைத்தாமே யன்றித் தோற்ற மும் இலதென் றுரைத்தோ மல்லேம்.

"இல்லது வாராது, உள்ளது போகாது" என்னும் நியாயத் தால் காரிய மில்லையாயினும் காரியம் செய்யாக்கால் இல்லையேயல்லா மல் செய்தால் உளதாகாதோவெனின், செய்பவன் காரணத்தைக் குணவேற்றுமை செய்வதன்றி யில்லாதபொருளை யுண்டாக்கமாட் டான். மண்ணால் இயற்றிய கடம் மீண்டும் மண்ணுபவிடத்து "உள் ளது போகாது" என்னும் நியாயத்தால் கடமில்லாமற் போதல் அமையாது. கடம்போலும் தோன்றின தோற்றம் இல்லாமற் போனதேயன்றிக் கடமான பொருளொன்றிருந்து இல்லாமற்போன தல்ல. ஆகலின் "இல்லது இல்லதே, உள்ளது உள்ளதே" இல் லதை உள்ளதாகச் செய்யவும், உள்ளதை யில்லாததாகச் செய்யவும் எவரானும் ஆதலில்லை.

இனி "இல்லது வாராது" என்பது உண்மையாயினும், கடம் வனைவதற்குமுன் காரண ரூபமாயிருந்து, காரியப்படும்போது வெளிப்பட்டது என்றுரைக்கப்படும் எனின், காரியமானகாலத்தும் மண்ணையன்றிக் கடமென்னும் சொல்லுக்குப் பொருளில்லாமையா லும், காரணமான மண்ணினிடத்தும் கடமில்லாமையாலும் கடமா னது இல்லையென்றே கூறத்தகுமென்க. காரியப்பட்ட அவசரத்தும் கடமிருந்தாலன்று காரணத்தி லிருக்கிற தென்றுவது உரைக்கலாம்? ஒருவர் மற்றொருவரிடத்துப் பேசிக்கொண்டேயிருந்து சற்றுநேரம் வேறுவேலையிலிருந்து, பின்பு அவரைப் பார்த்தபோது, அவர்காணு மற் போவாரேல், அவர், வீட்டின்கண் அல்லது வேறிடத்தின்க ணிருப்பாரென் றனுமானிக்க விடமுண்டு. முன்னர் அவரைக் கண்டு பேசியிராவிடத்து, அவர் வேறு யிடங்களி லிருப்பாரென் றெவ்வாறு அநுமானிக்கலாம்? அதுபோல் காரியப்பட்ட காலத்துக் கட முளதாகக் கண்டிருப்போமானால் கடமில்லாதபோது காரணமான மண் ணின்கண் அடங்கியிருக்கலாமென அநுமானிக்கத்தகும். அவ்வா

றின்மையான் கடமிலதென்றே கூறத்தகும். இதனுலே கடம் மண்ணின்க ணிருக்கவுமில்லை, வெளிப்படவு மில்லையென்றறிக.

இரண்டு பொருள்கள் ஓரிடத்தின்க ணிரா. ஒன்று பிறிதொன்றுக்கு மேலாகவேனும், கீழாகவேனும், பக்கமாகவேனு மிருத்தல் வேண்டும். மண், கடம் ஆகிய இரண்டு பொருள்க ளுள்ளனவாயின் மண்ணுக்குக் கடம் எப்பக்கத்தினுள்ளது? எப்பக்கத்திலேனு முள்ளதாயின் மண்ணுக்குக் கடம் வேருகவே யிருக்கவேண்டும். அவ்வாறில்லை யென்பது கண்கூடு. సృష్టయోర్భేదరూపస్యత్వమేవాసుగుజ్యేద్వ్య పలంభప్రసంగాత్ ஒன்றில் பிறிதொன்றிருப்பது ஒன்று உண்மையும், ஒன்று தோற்றல் மாத்திரமுமாயின் அமையும்; கயிற்றிற் பாம்பும், கானலி னீரும்போல. அங்ஙனமே மண்ணிற் கடம் தோற்றமே யல்லது பொருளில்லையா மென்பது.

மண்ணினிடத்து வளைவு குவிவு முதலிய குணங்களுள்ளனவே யெனின் அவையும் தோற்றமேயாம். அவ்வாறன்றி ஒருமண்ணுயினும் வளையவும் குவியவும் கண்டோமில்லை. எல்லா மண்ணும் ஒருங்கு சேர்ந்து வளைதல் குவிதலான தருமத்தை யடைந்தனவெனின், எல்லாஞ் சேர்ந்துண்டான தருமம் ஒவ்வொன்றினுக்கும் சிறிது சிறிதாகவேனும் காணப்படவேண்டுமல்லவா? அவ்வாறில்லாமையால் மேற்கூறிய தருமங்களையும் பெற்றதேயில்லையென்பதாம். இதுவரையினுரைத்த நியாயங்களால் காரணமொன்றே முக்காலத்து முள்ளதென்றும், காரிய முக்காலத்து மில்லையென்றும், அஃதுஞ் சொல்மாத்திரமும் தோற்றல்மாத்திரமுமாமென்றும் கூறிஞம். இதனுனே மண் எப்போதும் உள்ளதென்பதும், கடம் எப்போதும் இல்லதென்பதும் துணியப்பட்டமை காண்க.

ஒருபொருள் உண்டாகவேண்டுமானுல் முன்பு இல்லாதிருந்தே உண்டாகவேண்டும். இல்லாதிருந்தது இறந்தகாலத்தில்; உண்டாதல் நிகழ்காலத்தில். இறந்தகாலமும் நிகழ்காலமும் ஒன்ருகா. அங்ஙனமாகாவிடத்து இன்மையாயுள்ள காலமும், உண்மையாயுள்ள காலமும் வேறேயாம். ஒரேகாலத்து இன்மையும் உண்மையும் ஆதல் பொருந்தாது. கடம் உண்டாமிடத்துக் கடம் இருந்து தோன்றிற்ரு? இல்லாமல் உண்டாயிற்ரு? இவ்வினுவுக்கு இருந்தே தோன்றிற்றெனின், இருந்தது தோன்றுவதற் கிடனில்லை; இல்லாததே தோன்றிற் றென்போமாயின் "இல்லது வாராது" என்னும் நியாயத்தால் இல்லது தோன்றுதல் அமையாது. அன்றி இன்மையும் உண்மையும் கால வேறுபாட்டைப் பெற்றிருக்கின்றமையால் நிகழ்காலத்தில் இன்மையும் உண்மையுங் கூடா. இதனுல் பொருள் தோன்றுவதற்கே யிடமில்லையென் றுணர்க. ஒரு பொருள் அழியவேண்டின் உள்ளது ஒருகாலமும், அழிவு ஒருகாலமும் ஆகும். அழியுங்காலத்து இருந்தது அழிந்ததா? இல்லாதது அழிந்ததா? இக்கேள்விக்கு இருந்தது

அழிந்ததென்றே விடை அளிக்கவேண்டும். இருப்பதாய உண்மையும் அழிவதாய இன்மையும் ஓரேகாலத்திலிலையா. ஆகலின் உள்ள பொருள் அழிவுபாடடைவதற் கிடமின்றென்க. "இல்லது வாராது, உள்ளது போகாது" என்னும் நியாயம் இதனை உறுதிப்படுத்துகின்றது.

காரியமான கடம் அசத்தாலும் காரணமான மண்ணாயினும் சத்தென்று கூறலாமே யென்றால் எது காரணமெனப்படுமோ, அது பிறிதொன்றிற்குக் காரியப்பட வேண்டும். வஸ்திரத்திற்கு நூல் காரணமேனும், அந்நூல் பஞ்சினுக்குக் காரியமாம். அங்ஙனமே கடத்திற்கு மண் காரணமாயினும் அம்மண்ணும் தன்காரணமான அணுவுக்குக் காரியமாம். காரியமென்ப தனைத்தும் எப்போதும் இன்றென்று முன்னரே கூறியுள்ளேமாகலின் மண்ணும் அசத்தென்றே துணியப்படுமென்க.

காரியமாகவேனுங் காரணமாகவேனும் உள்ள தியாதோ, அதுவே உண்மையாயுள்ளது எனின், காரியமாகவேனும் காரணமாகவேனும் இருந்தது யாதோ, அது காரியமாகவாவது காரணமாகவாவது இருக்கவேண்டும். காரியமென் றுரைக்கின்றாமெனின், காரியம் முக்காலத்து மில்லையென்று துணியப்பட்டது. காரணமென்றாலோ எது காரணமோ அது காரணமாகவே யிராமல் பிறிதொன்றுக்குக் காரியப்படுகின்றது. காரியம் முக்காலத்து மின்றென்பதே துணிபாம். காரியகாரணம் சங்கலித் தொடர்பாய் முடிவின்றி நிற்குமெனின் அதுவும் காரிய காரணத்தி லடங்கி அசத்தாகின்றது.

பரமாணு அழியாமல் எப்போது மிருந்து காரியப்பட்டு அக்காரியம் அழிந்து பின் காரணமாகவே யிருக்கும்; அது ஓர்போதும் காரியப்படுவதில்லை, எப்போதும் காரணமாகவே யிருப்பதொன்றாமாகலின். யாவுங் காரியப்பட்டுப் பரமாணுமாத்திரம் காரியப்படாதென்பதற்கு நியாயம் ஏதும் புலப்படவில்லை. அதுவே காரணமாமெனின் ஓர்பரமாணு பிறிதோர்பரமாணுவினோடும், அது மற்றொரு பரமாணுவினோடும் கூடி, இவ்வாறே காரியப்பட்டு மகத்தாக வேண்டும். முன்பு ஒரு அணுவோடு மற்றொரு அணு கூடுமாயின், ஒரு பக்கங்கூடி, மற்றைய பக்கம் கூடாதிருக்கவேண்டும். திருஷ்டாந்தமாக ஒரு எலுமிச்சங்கனியோடு பிறிதொரு எலுமிச்சங்கனி கூடுமாயின் ஒருபக்கம்கூடி மற்றப்பக்கம் கூடாதிருக்கப் பிரத்தியக்ஷமாகக் காண்கின்றோம். இவ்வாறே ஒருபொருளோடு பிறிதொரு பொருள் கூடுங்கால் ஒருபக்கங்கூடி மற்றையபக்கம் கூடா. கூடியவிடத்துக் கூடாமையும் நிகழ்தலின் முன் பின் நடு முதலியன நிகழ்வது ஒருதலையாம். எது அவயவத்தோடுங் கூடியதோ அஃது ஓர்போதும் காரணமாகாது; காரியமேயாமென்பது திண்ணம். காரணமாயிருப்பனயாவும் காரியமாக, இஃது ஒன்றுமாத்திரம் காரியப்படா

தென்பது நியாயமல்ல. எது எவ்வாறு இருக்கினும் காரணம் ஒன்றிருக்கவேண்டுமெனின் அதுமாத்திரம் ஏன் காரியமாகாது? உலகம் உண்டாதற்குக் காரணம் ஒன்று வேண்டுமேயெனின் அங்கு காரணமான அணு நிலைபெற்றுலல்லவா இங்கு உலகமென்பது சத்தாம்? காரிய காரண முடிவின்றிச் செல்லுமெனின், அளவுகடத்தல் என்னும் அநவஸ்தாதோஷ முண்டாகும். ஆதலால் முடிவில் எவ்வகை அணுவும் இருப்பதாக வுரைத்தல் ஒருவாற்றானும் பொருந்தாதென்க.

கண்ணுக்கு விஷயமான அணு அசத்தாயினும் கண்ணுக்கெட்டா அதிருட்ப அணுசத்தென் றுரைக்கப்படுமெனின், அஃது பிரத்தியக்ஷ மன்று. அநுமான ப்ரமாணத்தால் அறியப்படுமெனின், பிரத்தியக்ஷமான சத்தைக்கொண்டு அப்பிரத்தியக்ஷமான சத்தையறிவது அநுமானத்துக்குஇலக்கணமாம் இவ்விலக்கணத்தால்புகையுஞ்சத்து, நெருப்புஞ்சத்து. புகைபிரத்தியக்ஷம், நெருப்பு அப்பிரத்தியக்ஷமாம். பிரத்தியக்ஷமான புகைபால் அப்பிரத்தியக்ஷமான நெருப்பையறிவது தகுந்த திருஷ்டாந்தம். இந்தத் திருஷ்டாந்தத்தைப்போல் தாஷ்டாந்தம் ஒவ்வவில்லை. கண்ணுக்கு விஷயமான அணு அசத்தென்று துணியப்பட்டது. கண்ணுக்குப் புலப்படாத அணு அவசியம் சத்தாயிருக்க வேண்டுமென்பது பூர்வபக்ஷியார் கருத்து. பிரத்தியக்ஷமான புகை சத்தாயிருப்பதுபோல் தாஷ்டாந்தத்தும் கண்ணுக்கு விஷயமான அணு சத்தாயிருக்கவேண்டும். அங்ஙனமின்றி அது அசத்தாய்ப் போனமையால் திருஷ்டாந்தம் ஆபாசமாகின்றது. கண்ணுக்கு விஷயமான அணு சத்தாயிருக்குமேல் பிரத்தியக்ஷமான இந்தச் சத்தைக் கொண்டு அப்பிரத்தியக்ஷமான (கண்ணுக்குத் தோன்ரு) அணு சத்தா யிருக்கின்றதென்றே அநுமானிக்கலாம். புகையை ஆராய்ந்தபோது பனியாய்ப்போமாகுல் புகை அசத்தாய்ப்போ மன்ரு? புகை அசத்தாய்ப் போமாகுல் நெருப்பு எப்படிச் சத்தாகும்? அநுமானப் பிரமாணம் தோற்றமென்றும், யதார்த்தமென்றும் இருவகைப்படும். அவற்றுள் தோற்ற அநுமானத்தால் பொருள் சித்தித்திலது; யதார்த்த அநுமானத்தாலேதான் பொருள் சித்திக்கற்பாற்று. புகை யதார்த்தம்; புகையைப்போல் தோற்றி ஆராய்ச்சியில் பனியாய்ப் போவது தோற்றமாம். யதார்த்தமான புகையால் நெருப்புச் சித்திக்குமன்றித் தோற்றப் புகையால் (அதாவது பனியால்)சித்தியாது. அவ்வாறே கண்ணுக்கு விஷயமான அணுவால் கண்ணுக்கு விஷயமாகாத அதிருட்ப அணு சித்தித்த லின்றென்க.

இதுவரையிலுங் கூறிப்போந்ததனுல் "அணு முடிவிலில்லாமற் போய்விடுதல் அசங்கதம். கண்ணுக்குக் காணக்கூடாமல் அதிசூட்சுமமாயிருக்குமத்தால் அதனை யில்பொருளாகத் துணிதல் கூடாது" என்று பிரதிவாதியா ருரைத்தது நியாயமாகவே பூர்வபட்சப்படுகின்றது. "(உள்ளது போகாது, உள்ளது உள்ளதே) என்னுந் தருக்கத்

தால் கடம் சிதைந்து பரமாணுவான விடத்தும் போகாததும், உள்ளதுமேயாம்" என்றார். 'உள்ளது போகாது, உள்ளது உள்ளதே' என்னும் தருக்கம் எமக்கும் உடன்பாடே. கடம் உள்ளதென்று நியாயத்தால் காட்டின பின்னன்றோ அது பரமாணுவான விடத்தும் உள்ளதென் றுரைக்கவேண்டும்? கடம் சத்தென்பதற்கு யாதொரு ஆதாரமு மில்லாமைபால் அதை யுள்பொருளென் னுரைத்தல் அமையாது. கடமானது நிகழ்காலத்திலேயே யில்லையென்றபோது பரமாணுவான காலத்திலா இருக்கப்போகின்றது? "(இல்லது வாராது இல்லது இல்லதே) என்னுந் தருக்கப்படி உலக மில்லதாயின் வரமாட்டாது. வந்திருக்கையால் முயற்கோடுபோல் இல்லதாகமாட்டாது" என்றார். 'இல்லது இல்லதே' என்னுந் தருக்கத்தை யாம் அநாதரவு செய்தேமில்லை. அது எமக்குஞ் சம்மதமேயாம். ஆனால் அந்தத் தருக்கத்தின்படி உலகம் இல்லதே யென்றும், இல்லாமைபால் வரவில்லை யென்றும் கூறுகின்றோம். "உலகம் இல்லாததாயின் (இல்லதற்குத் தோற்றமின்மையின்) என்ற நியாயத்துக்கு விரோதமுண்டாம்; அவ்வுலகு தோன்றி யிருத்தலால்" என்றார். இல்லதற்குத் தோற்ற மில்லை யென்பது கூடாது; கயிற்றிற் பாம்பும், கானலி னீரும், சந்நிபாததோஷமுள்ளவனுக்கு எதிரில் தோன்றும் பொருள்களும், சொப்பனப் பிரபஞ்சமும் இல்லாதனவா யிருந்தும் தோற்றுகின்றமையானென்க. தோற்ற மிருவகை: உள்ள பொருள் தோற்றுதலும், இல்லாப்பொருள் தோற்றுதலுமாம். இல்லதற்குத் தோற்ற மில்லையென்பதன் பொருள் அசத்து அல்லது சத்துப்போலிக்குச் சத்துத்தோற்ற மில்லையென்பதாம். கயிற்றிற் காணும் (இல்லாத) பாம்பு யதார்த்தமான தோற்ற மல்லவென் றறிக. "அது ஒடுங்குமிடத்து இல்லாததாய்விடுமெனின், (யாது யாண்டொடுங்கும், அஃதாண்டுதிக்கும்) எனவும் (ஒடுங்கினவிடத்தினின்று மீளவுண்டாம்) எனவும் போந்த தருக்க வுரைகளால் புனருற்பவங் கூறும் வேதாகமங்களும் பொய்ப்பட்டுப்போம்" என்றார். ஒடுங்குதலாவது காரியம் காரணத்தில் அடங்குவதென்பது அவர் சம்மதம். காரியத்திற்குப் பொருளின்னதென்று விளங்காமையாலும், அதற்கு மறுப்பினை முன்னமே யாமுரைத்திருக்கின்றமையாலும் ஒடுங்குதலென்பது சொல்மாத்திரமே; பொருள் இருந்தன்று. கானலினிடத்து நீரும், அறிவின்கண் சொப்பனவுலகமும் ஒடுங்கி, ஒடுங்கினவிடத்தினின்று மீளவுண்டாவதுபோலெனின் நியாயமாகும். அவ்வாறன்றிச் சத்தென்பதமையாது. 'யாண்டொடுங்கும், அஃதாண்டுதிக்கும்' என்பதற்குக் கடம், மண்ணின்கண் ஒடுங்கி மீண்டும் அதினின்றே உதிக்குமென்று வைத்துக் கொள்ளலாம். ஆனால் இது வியாவகாரிகமேயன்றி உண்மையன்று; மண்ணைத்தவிரக் கட முக்காலத்து மின்றுதலாலென்க. * கிரமசிருஷ்டி யுரைக்குமிடத்து வேதம் வியாவகாரிக சிருஷ்டியை அங்கீ

---

* கிரமசிருஷ்டி: ஒன்றன்பின் ஒன்றுயுதிப்பது; பஞ்சினிடத்து நூலும் நூலினிடத்து ஆடையும்போல.

கரித்து, ஸ்ருதி * யுகபத் சிருஷ்டியைச் சொல்லும்பொழுது அவ் வேதம் ஷடி கிரமசிருஷ்டியைப் பூர்வபக்ஷம்பண்ணிக் கண்டனை செய்தது. (ஆதலால் யாது யாண்டொடுங்கும், அஃதாண்டுதிக்கும்) எனவும், (ஒடுங்கினவிடத்திநின்று மீளவுண்டாம்) எனவும் கூறிய தருக்கவுரை பூர்வபட்சமாகச் சம்மதமாம். உலகைச் சத்தெனக் கொள்ளுவாரை அநுசரித்து வேத முன்பு கிரமசிருஷ்டி கூறி, பின்பு யுகபத்சிருஷ்டி யுரைப்பதென் றுணர்க. ஆதலால் இது வைதிகசித் தாந்தமேயாம். இது நிற்க, இன்னும் உலகம் அசத்தைப்பற்றிக் கூறு வாம்:—

உலகினின்றும் பற்பல பொருள்கள் காரியப்பட்டுப் பின் காரண மாவதைக் கண்டிருக்கிறோ மல்லாமல் உலகம் காரியப்படுவதை நாமேனும் நம் முன்னோரேனும் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. காணுதல் உடலன்றியாகாது; கேட்பது பிறர் கூறியே கேட்கவேண்டு வது; கூறல் காணுதலின்றி யமையாது; காணுதல் உடலோடுகூடியே ஆகவேண்டுவது; உடலுலகன்றி யின்றாம். உலகத்தினது இல்லாமை உடலல்லாமற் பிறிதொன்றிருந்து கண்டாரை யாம் காண்கின்றிலேம். ஆதலால் உலகம் என்று முள்ளது; காரியமன்று. காரணமேயெனின் கூறுவாம்.

ஒவ்வொரு பொருளினையும் ஆராய்ச்சிசெய்யின் ஒன்றன்கூட் டம், அல்லது பலவின்கூட்டமென்று இருவகைப்படும். எந்தப் பொருளும் இவ்விருதன்மையிலே யடங்கும். திருஷ்டாந்தமாகக் கடம் ஒன்றன்கூட்டமா? பலவின்கூட்டமா? எனின் ஒன்றன்கூட்ட மான மண்ணையன்றிக் கடம் முக்காலத்து மின்றாம். அம்மண்ணும் ஒன்றன்கூட்டமான அணுவினையன்றி யின்றாம். பலவின்கூட்டமு மிதுபோலுமென்க. இவ்வண்ணமே ஒவ்வொரு பொருளையும் ஆராயு மிடத்து அபாவமாகவே முடியும். உலகு இவ்வகைப்பட்ட ஆராய்ச்சி யில் அபாவமாம். ஒன்றன்கூட்டம் பலவின்கூட்ட மென்பவை காரண மாம். அணுவை முன்பே பூர்வபக்ஷம் செய்தமையா லாண்டுக் கண்டு கொள்க.

"உலகம் காரியப்படுவதைக் கண்டாரும் கேட்டாரும் இல்லை யாகலின் எப்போதும் நித்தியமென் றுரைப்பாம்" எனின், உலகம் எப்போதும் சத்தாய் நித்தியமா? அசத்தாய் நித்தியமா? சத்தாய் நித்தியமேல் இதுவரையினு முரைத்த நியாயங்களால் சத்தென் றுரைப்பது பொருந்தாது. அசத்தாய் நித்தியமேல் இல்லாதது நித் தியமென்று கூறுதலினால் யாது பயன்? இல்லாத முயற்கொம்பினை யும் நித்தியமென் றுரைப்பதனோடு ஒக்குமல்லவா? உலகு எக்காலத் தும் அசத்து அல்லது சத்துப்போலியாகலின் அதனைக் காரியமென்

* யுகபத்சிருஷ்டி: ஒரேதடவையா யுதிப்பது; அது கடல்நீர், அலைநுரை குமிழியாவதுபோல.

றேனும் காரணமென்றேனும் கூறுதல் எவ்வாற்றானும் பொருந்தாதென்றுணர்க.

இதுமட்டும் கூறிவந்ததில் உலகம் அசத்தாயினும் பிரத்தியக்ஷமாகச் சுகதுக்கங்களை அநுபவிக்கின்றோமே; எப்படி உலகத்தை அசத்தென் றுரைப்பது? இது வாயடி கையடியா யிருக்கின்றதன்றிச் சந்தேக மொழியவில்லையேயெனின், சொப்பன முற்றும் பொய்யல்லவா? அச்சொப்பனத்தில் பிரத்தியக்ஷமாக அநுபவிக்கும் இன்ப துன்பங்களும் அவ்வுலகமும் பொய்யாய்ப் போகவில்லையா? அங்ஙனமே யிவ்வுலகையும் அதனின்ப துன்பங்களையும் ஏன் பொய்யென்றியம்பப்படாது?

ஒருபொருளை யறியவேண்டின் அப்பொருளுக்கு வேறாய்நின்றே யறியவேண்டும். வீட்டை அறியவேண்டின் வீட்டிற்கு வேறாய்நின்றே அறிகின்றோம்; கடபடங்களை யறியவேண்டுமானால் அவற்றையும் வேறாய்நின்றே அறிகின்றோம். இவ்வாறே எல்லாப் பொருள்களையும் அறிகின்றோம். அங்ஙனமே இவ்வுலகை யறியவேண்டின் வேறாய்நின்றே யறியவேண்டும். அங்ஙனம் கண்டுரைத்தார் யாருமிலர். காண்பவர், சமஷ்டியான உலக அமிச வியஷ்டி சரீரத்தைக் கொண்டு அறிகின்றமையால், அது வேறுபட்டு அறிந்ததாக யாங்ஙனம் உரைக்கலாம்? அசத்தியமான சொப்பன சரீரத்தின்கண் அவ்வசத்திய சகத்தின் அமிசமான அசத்திய சரீரத்தைக்கொண்டு அச்சகத்தை அவ்விடத்தில் காணும்வரையில் அது சத்தியமாகவே தோன்றினும், அச்சகத்தையும் அச்சகத்தின் அமிசமான சரீரத்தையும்விட்டு வேறாயிருக்கும் இப்போது, அது பொய்யாய்ப் போகவில்லையா? சொப்பனாவஸ்தையில் சொப்பனசகம் சத்தியமாகக் காணப்படினும் சத்தியமாக அறியினும் அக்காலத்தும் அச்சொப்பன சகம் எப்படிப் பொய்யோ, அப்படியே இச்சகமும் இச்சக அமிசமான சரீரமும் பொய்யென்று ஏன் கூறப்படாது? ஐயமின்றிக் கூறலாம். இதனானே ஒருபொருளை அறியவேண்டின் அறிபவன் வேறாய் நின்றே அறியவேண்டுமெனவும், அவ்வாறின்றி அதுவாயிருந்து அறிதல் பொய்யு மெய்யாய்த் தோற்றுமெனவும் கூறியவாறென்பது.

ஒருபொருள் உள்ளதா? இல்லதாவென் றாராயவேண்டின், அப்பொருளின் ஓர்பால் பிறிதோர்பாலொடு பொருந்துதலினாலே உள்ளதெனக் கொள்வது நூல்வாற்றானு மமையாது. அப்படிக் கொள்வதினால் கானனீரின் அலை பிறிதொரு அலையுடனே சம்பந்தப்படுவது கொண்டே, அக்கானல் நீரையும் உண்டென்று கொள்ளவேண்டி வரும். இங்ஙனமே உலகின் ஓர் பகுதி பிறிதொரு பகுதியினோடு பொருந்துதலினானே உலகைச் சத்தென்றுரைத்தல் அடாது.

பொன் பூஷணமாய்த் திரிந்தபோதும் திரியாதபோதும் ஒரு தன்மையா யிருக்கக்கண்டோமென்றும், அவ்வாறு அறிவும் அறிபடு பொருளும் ஒருதன்மையா யிருக்கவில்லையென்றும் பிரதிவாதியார் உரைக்கின்றார். பொன்னாகிய காரணத்தில் பூஷணமாகிய காரியம் தோற்றமேயன்றித் திரிபல்ல; திரிபுபோல் தோற்றுகின்றது. அவ்வாறே பாவஸ்துவின்கண் சேதனா சேதனமானவுலகம் தோற்றுகின்றது. பாவஸ்துதிரியவுமில்லை; காரியப்படவு மில்லை. இதுநிற்க.

(ப்ரம்மவித்யா 1888௵ செப்டம்பர்மீ 15௳.)

ஆங்காங்கு வேறு வேறு உவமானங்க ளுரைப்பது ஒன்றுக்கொன்று விரோதமா யிருக்கின்றதெனப் பிரதிவாதியார் குற்றங் கூறுகின்றார். அது அவரவர் பக்குவாபக்குவங்களை யநுசரித்து அவசரபேதமா யுரைக்கப்படுகின்றமையால் யாதுங் குற்றமின்றென்க. அதன் விவரத்தை ஆசிரியர் மாணாக்கன் இவ்விருவர் சம்பாஷணையாக வைத்துச் சமாதானஞ் சொல்வாம்.

உலகமொன்றேயுளது, அது அழிவதில்லை யென்னும் மாணாக்கனை நோக்கி, உலகம் காரியமேயன்றிக் காரணமல்லவென்றும், காரணமாவது எங்கும் பரிபூரணமான பாவஸ்துவே யென்றும் தாயினிடத்துப் பிள்ளை எப்படிப் பிறந்ததோ, அப்படியே பாவஸ்துவின்கண் உலகு உதித்தது என்றும் ஆசிரியர் கூற, மேலே மாணாக்கனுக்கும் ஆசிரியர்க்கும் நடக்கும் சம்பாஷணையாவது:—

மாணாக்கன்: தாயினிடத்துப் பிள்ளை பிறந்ததுபோல் பாவஸ்துவின்கண் உலகுதிக்குமாயின் தாய் வேறு பொருள், பிள்ளை வேறு பொருள், அன்றி இரண்டும் கண்டப்பொருள்கள். இவ்வுவமானப்பிரகாரம் உவமேயத்தைப் பார்ப்போமானால் பாவஸ்துவும் கண்டப்பொருள், உலகமுங் கண்டப்பொருள்க ளாகின்றன. இது பாவஸ்து பரிபூரணமென் றுரைத்ததற்கு விரோதமாகின்றதே.

ஆசிரியர்: உலகமே பொருளென்றும், அதற்குக் காரணம் பிறிதொருபொரு ளில்லையென்றும் கூறும் சித்தாந்தத்தை மறுக்கவேண்டி, இதற்குமேல் பொருளொன் றுண்டெனத் தாய் பிள்ளை யுவமானங் கூறினதேயன்றி, அதுவே சித்தாந்தமன்று. பின்னை, பால் தயிராவதுபோல் பரிணாமவாதமாம். தாயும் பிள்ளையும் வேறானமையினால் உண்டாகும் பரிபூரணதோஷம் பாலே தயிராவதான பரிணாமவாதத்தில் இல்லை. இவ்வுபமானத்திற்கு உவமேயம் பாவஸ்துவே உலகம்.

மாணாக்கன்: ஆசிரியரே! நீருரைத்த தோஷ மில்லாவிடினும் வேறு பெருந்தோஷ முண்டாகின்றது. அஃதியாதெனின்,

பாலே தயிராவதில் பால் கெட்டுத் தயிராகின்ற தென்ப தாம். இவ்வுவமானப்படிப் பரம் கெட்டு உலகாகின்றது. அதனே டொழியவில்லை. பால் கெட்டுத் தயிரானல் தயிர் தயிராகவே யிராது; அதுவுங் கெட்டு வேறும், அதுவுங் கெட்டுப் பிறிதொன்றுமாகி, முடிவில் இன்ன நிலைமைத்தென்றுரைக்க இயலாமற்போம். அங்ஙனமே பரம் கெட்டு உலகாகி, அதுவுங் கெட்டு வேருகி, அதுவுங் கெட்டு மற்ருென்ருகி, ஈற்றில் இன்ன நிலைமைத் தென்று கூற முடியாமற்போம்.

ஆசிரியர்: அஃதுண்மைதான். நாம் பரிபூரணதோஷம வாாமற பொருட்டும், இரண்டு பொருள்களல்ல வென்பதற்கும் பால் தயிரென்னும் உவமானங் கூறினமே யன்றி அதுவே ஸித்தாந்த மன்று. பின்னே மண்கடம்போல் காரணகாரியமாம். மண்கெடாமல் கடமாவதுபோல் பரவஸ்து கெடாமல் உலகாகின்றது.

மாணுக்கன்: இதிலும் தோஷமில்லாது போகவில்லை. மண் விகாரப் பட்டன்ருே கடமாகின்றது? அங்ஙனமே பரம் விகாரப் பட்டன்ருே உலகாகவேண்டும்? நிர்விகாரமான பரத்துக்கு விகாரத்துவங் கற்பிப்பது நியாயமன்றே.

ஆசிரியர்: உண்மைதான். பால் கெட்டுத் தயிராவதுபோல் மண் கெட்டுக் கடமாவதில்லை யென்பதற்கும், தயிர் மீண்டும் பாலாகாமற் போவதுபோலன்றிக் கடம் மீண்டும் மண்ணகு மென்பதற்கும் இவ்வுவமானமே யன்றி மற்றப் படியல்ல. இனி விகாரப்படாத வுவமான முரைக்கின் ருேம். அஃதாவது சூரியனும் பிரதிபிம்ப சூரியனும் போல. சூரியன் விகாரப்படாமல் எப்படிப் பிரதிபிம்பிக் கின்ருனே அப்படியே பரமும் விகாரப்படாமல் பிரதி பிம்பிக்கின்றது.

மாணுக்கன்: இதிலும் சங்கையில்லாமற் போகவில்லை. பிம்பப்பொருள் பிரதிபிம்பிக்கிறதற்கு ஆதாரமொன்று வேண்டும். சூரியன் பிரதிபிம்பிப்பதற்கு ஜலம் எப்படி ஆதாரமோ, அப்படியே பரம்பொருள் பிரதிபிம்பிப்பதற்கு ஆதாரமொன்று வேணடும். எது மற்ருெரு ஆதாரத்தில் பிரதி பிம்பிக்கின்றதோ, அது அபரிபூரணப் பொருளாயிருக்க வேண்டுமேயன்றி, ஓர்போதும் பரிபூரணப் பொருளாகாது. ஜலத்தில் பிரதிபிம்பிக்கும் சூரியனும், கண்ணடியிற் பிரதிபிம்பிக்கும் நமது முகமும் பரிபூரணப் பொருளாமா? சூரியனும் நமது முகமும் ஒரு இடத்திலும், ஜலமும் கண்ணடியும் பிறிதொரு இடத்திலும் இருக்கின்றமையால் பிம்பப்பிரதிபிம்ப வுவமானம் அபரி

பூரணப் பொருளுக்கே பொருந்துமென்றவாறுயிற்று. இவ்வுவமானப்பிரகாரம் பரம் அபரிபூரணப் பொருளாகின்றது.

ஆசிரியர்: பிம்பப்பிரதிபிம்ப திருஷ்டாந்தம் பரவஸ்து விகாரப்படுவதில்லை யென்பதற்கு மாத்திரமே. இனிப் பரிபூரண தோஷமில்லாமைக்கு வேறு திருஷ்டாந்த முரைக்கின்ருேம். அஃது கயிற்றிற் பாம்பும், கிளிஞ்சலில் வெள்ளியும் எப்படித் தோற்றமோ, அப்படியே பரத்தினிடத்துச் சிற்சடமான வுலகு தோற்றுகின்றது.

மாணுக்கன்: இதிலும் வினு நிகழ்கின்றது. கயிற்றைத் தவிரப் பாம்பு இல்லையெனத் தெளியின் பின்னர்ப் பாம்பு தோற்றுவதில்லை. உலகு காரணத்தையன்றி யில்லை என்றுணரினும் மீண்டும் தோற்றுகின்றது. மண்ணையன்றிக் கடமென்னும் பொருளின்றென ஆய்ந்தறியினும் பெயர்த்தும் தோற்றுவதைப் பார்க்கின்ருே மன்ருே?

ஆசிரியர். உலகம்பொருளல்லவென்பதற்கு மாத்திரம்கயிற்றிற்பாம்பும் கிளிஞ்சலின்கண் வெள்ளியும் திருஷ்டாந்தமேயன்றி முற்று மல்ல. இனி அத்தோஷமும் வாராமற் பரிகரிக்கின்ருேம். அஃதியாதெனின் கானனீராம். கானலையன்றி நீர் முக்காலத்து மின்றெனத் துணியினும் மீண்டும் தோற்றிக்கொண்டே யிருக்கின்றது. அதுபோல் உலகம் அசத்தெனத் துணியினும் தோற்றிக்கொண்டேதா னிருக்கும்.

மாணுக்கன்: கானலினிடத்து நீரில்லையென்று தெளிந்தபின்னர்த் தோற்றினும் அது அநுபவத்திற்கு வருவதில்லை. அஃதாவது நீரை அருந்த வுதவுவதில்லை. உலகோ அவ்வாறன்று; சத்த ஸ்பரிச ரூப ரச கந்தங்கள் அநுபவிக்கப் படுகின்றன. ஆகலின் இத்திருஷ்டாந்தம் பொருத்தமுருது.

ஆசிரியர்: உலகம், அசத்தென் றுணரினும் பெயர்த்தும் தோற்றும் என்பது வரையிலுமாத்திரம் கானனீர் திருஷ்டாந்தமாம். மற்றப்படி அநுபவ மாகின்றதைப்பற்றி வேறு திருஷ்டாந்தம் கூறுவோம்: அஃதாவது சந்நிபாததோஷத்திற் காணும் உலகும், சொப்பனவுலகும், பிறவும் போலுமாம். சந்நிபாததோஷ முதலியவற்றுற் காணும் உலகு தோற்றமேனும் அனுபவத்தோடுங் கூடிய தோற்றமாம்.

இதனுல் வேறு வேறு உவமானங்க ளுரைத்ததற்குச் சமாதானம் விளங்கியது.

கயிறு ஜடம், அரவு சித்து, இது உவமானம். அறிவு சித்து, உலகம் சடம், இது உவமேயம். சடமான உவமானம் சித்தான வுவமேயத்துக்கும், சித்தான வுவமானம் சடமான வுவமேயத்துக்கும் உரைப்பது பொருந்தாதென்று உரைத்ததனோடு நாம் திரிபுணர்ச்சியால் மயங்கினதாகவும் கூறியுள்ளார். அறிவினின்றும் உலகம் தோற்றுமென்னும் உவமேயத்துக்குக் கயிற்றரவு உவமானம், ஒன்றிலொன்று தோற்றுமென்பதுவரையில் மாத்திரமாகலின் பொருத்த முடையதேயாம். எதற்காக வுவமானம் உரைக்கப்படுகின்றதோ, அதுவரையில் நின்று உரையாடல்வேண்டுமல்லது மற்றப்படி பேசுவதுதகுதியன்று. அறிவினின்றும் உலகு உண்டாவதற்குக் கயிற்றின்கண் அரவுண்டாதலொன்று, அறிவினின்றும் அரவுண்டாதலொன்று. இவ்விரண்டும் ஒன்றினின்று பிறிதொன் றுண்டாவதற்குப் பொதுவான உவமானமாம். இவற்றில் கயிற்றின்கண் அரவுண்டாதல் ஒன்றினின்று மற்றொன்றுண்டாதல் வரைக்கும், அறிவினின்றும் அரவுண்டாதல் சித்தினின்றும் சித்சடமான வுலகுண்டாதல் வரைக்கும் உவமானமாம். இதில் திரிபுணர்ச்சி யாது மின்றென்க. உவமானம் ஏகதேசமெனவும், உவமேயத்தில் இன்ன குணத்துக்காக இன்ன வுவமானம் எடுக்கப்பட்டதெனவும் உணர்தல்வேண்டும்.

"ஒருவன் ஒருபதார்த்தத்தை விசாரித்து இல்லையென்றுவாயாற் சொல்லிவிடுவதினாலேயே அது இல்லாமற் போய்விட மாட்டாது. ஒரு பதார்த்த மிருந்ததனால், அதனை விஜாரிக்கவந்ததேயன்றி அது இல்லையாயின் விசாரிக்கவேண்டிய தின்றாம்" என்றார். அவ்வாறு இல்லையென்று நாம் வாயாற் சொல்லவில்லை; நியாயத்தாலேதான் ருசுப்படுத்தினோம். இல்லாத பதார்த்தத்தையும் விசாரிப்பதுண்டு; கயிற்றின்கண் அரவான இல்லாப் பதார்த்தத்தை விசாரிப்பதுபோலென்க. "இல்லாதது உள்ளதாகத் தோற்றியதற்கு ஓரேது வேண்டுமாகலின், அவ்வேது யாது? ஏதுவின்றி முன்னில்லாதது தோன்றமாட்டாதாகையால், முன்னிருந்ததே தோன்றியதெனல் சித்தம்" என்றார். முன்னில்லாதது தோன்றமாட்டாதென்றும், முன்னிருந்ததே தோன்றுமென்றும் அவர் சொல்வது நியாயமானதுதான். மண்ணினிடத்துக் கடாதிகள் தோன்றுமேயன்றி வஸ்திராதிகள் தோன்றுமா? நூலின்கண் வஸ்திராதிகள் உண்டாகுமேயன்றிக் கடாதிகள் தோன்றுமா? இதனால் எந்தெந்தச் சத்திகள் எதெதின்கணுளவாமோ, அந்தந்தச் சத்திகள் அததின்கண்ணின்று வெளிப்பட்டுக் காரியமாகின்றனவென்றும், இல்லது வாராதென்றும், உள்ளது போகாதென்றும் ஏற்படுகின்றன. இதனால் காரியம் சத்துப் பொருளாக மாட்டாது. கானலின்கண் நீர் தோன்றிப் பின்னும் அதிலேயே மறைந்து மீண்டும் தோற்றுகின்றது. கானலினிடத்து நீர் தோற்றமே யன்றிக் கடபடாதிகள் தோன்றமாட்டா. இன்னதில் இன்னதுதான் தோன்றுமென்னும் நியம மிருக்கின்றமையால் அன்ன

தில் அன்னதே தோன்றும். இதனால் தோற்றமெல்லாம் பொருளென்றுரைத்த லமையாது. "முன்னிருந்ததே தோன்றியதெனல் சித்தம்" என்று அவர் உரைத்தது உண்மையே. கானலினிடத்து நீர் தோற்றுந்தன்மை முன்னரே உண்மையானென்க. இதனால் உலகம் சத்தாதல் ஓர்போதுமில்லை.

கயிற்றின்கண் அரவு உண்டாதற்குக் கயிறும் காரணந்தான், அறிவுங் காரணந்தான். கயிறுமாத்திரங் காரணமாகாது. கயிறே காரணமாயின் மயக்கம் நீங்கித் தெளிந்த பின்னரும் அரவு காணப்படவேண்டும். அறிவொன்றே காரணமென் றுரைப்பாமெனின், கயிறில்லாவிடத்து அரவு காணப்படவேண்டும். அவ்வாறின்மையின் இரண்டும் காரணந்தான். அவ்வாறே கடத்தோற்றத்திற்கு மண்ணும் அறிவுங் காரணமாம். மண்ணை விசாரித்தவிடத்துப் பொருளில்லாமற் போகின்றமையின் அறிவைக் காரணமென்றும். உலகும், உலகைச் சத்தென்றுவது அசத்து அல்லது சத்துப்போலி யென்றுவது அறியும் அறிவும் பரவஸ்துவின்கண் அசத்து அல்லது சத்துப்போலியேயாம். சடாசடமான உலகில் சடமும் சித்தும் சமஷ்டியில் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்திருக்கமாட்டா. இவற்றில் சடம் காரியமும்,சித்து காரணமுமென் றுரைப்பது எதுபோலெனின்,சொப்பனத்தில்காணப்படும் தாய், பிள்ளை இருவரில் தாய் காரணமும் பிள்ளை காரியமும் என்பன போலாம்.

"அறிவே கடமாயின் கடமில்லாததாய் விடுகிறபடி அதற்கு மூலமாகிய அறிவும் இல்லாததாய் விடும். இல்லாததில் இல்லாதது பிறக்குமேயன்றி உள்ளதில் இல்லது பிறவாது" என்றார். காரிய மில்லாததாயின் காரணமு மில்லாமற் போகவேண்டுமென்ப தென்ன நியாயம்? காரியமான கட முடைந்து இல்லாமற்போனால் காரணமான மண்ணு மில்லாமற்போமோ? வஸ்திரம் கிழிந்துபோனால் நூலுக்குக் கேடுண்டோ? பாம்பில்லாமற்போனால் கயிறு மில்லாமற்போமோ? இந்திரசாலப்பொருளில்லாமற்போனால் அதன்காரணமுமறையுமோ? பிள்ளை இறந்துபோனால் தாயும் இறந்துபோகவேண்டுமோ? இல்லாததில் இல்லாதது பிறக்கு மென்பதைப்பற்றி நாம் இப்போது பேசஅவசியமில்லை. நிற்க; "உள்ளதில் இல்லது பிறவாது" என்பது வெறுந் தப்பாகின்றது. உள்ளதான கயிற்றின்கண் இல்லதான அரவும், உள்ளதான கிளிஞ்சலினிடத்து இல்லதானவெள்ளியும், உள்ளதான கானலினிடத்து இல்லதான நீரும், இவ்வாறு பிறவுந் தோற்றுகின்றமையானென்க.

இரஜ்ஜு (கயிறு) வின்கண் தோன்றும் சர்ப்பம் சத்தா? அசத்தா? சதசத்தா? இவ்வினுவுக்குச் சத்தெனின் இரஜ்ஜு (கயிறு) என்றறிந்தபோது சர்ப்பம் தோன்றவேண்டும்; தோன்றாமையின் சத்தெனல் அமையாது. அசத்தென்பாமெனின் மலடிமைந்தன் போன்று தோன்றாமல் இருக்கவேண்டும்; தோன்றுதலின் அசத்

தென்று முரைத்தல் கூடாது. சதசத்தென் றுரைக்கப்படுமாலோவெனின் மறுதலைப்பட்ட இரண்டுதருமம் ஒன்றின்கணிரா. ஆகலின் சர்ப்பமானது சதசத்விலக்ஷண மென்க. அன்றி இன்ன தன்மைத் தென்று கணிக்கப்படாதெனப் பொருள்கொள்ளும் அநிர்வசநீயமுமாம். இவ்வாறே உலகமும் சதசத்விலக்ஷண அநிர்வசநீயமென்க. முன்பு உலகை அசத்தென் றுரைத்தது யாதுக்கெனின் உலகம் சத்தென்பாரை மறுத்தற்கென்க. உலகம் அசத்தென்பது பூர்வபட்சமேயன்றிச் சித்தாந்தமன்று.

உலகென்பது சேதனாசேதனமாம். ஷை சேதனாசேதனத்திற்குச் சாட்சியாயும், காரணமாயும், காரியகாரண ரகிதமாயும், ஆதாரமாயும், நிராதாரமாயுமுள்ளதெதுவோ, அதுவே பரவஸ்துவாம். அறிவே உலகென்றுரைத்ததில் அறிவென்பது உண்மையாகப்பரவஸ்துவாம். ஷை பரவஸ்து சேதனாசேதனவுலகத்திற்குக்காரணமேனும் சேதனாசேதனமிரண்டனுள் அசேதனத்திற்குச் சேதனம் காரணமாம். இவ்விரண்டற்கும் பரவஸ்து காரணம். சேதனாசேதனமான இரண்டனுள் ஒன்று காரணமும் பிறிதொன்று காரியமுமென் றுரைப்பது, சொப்பனத்தில் தோற்றும் தாய் பிள்ளை இவ்விருவருள் தாய் காரணம் பிள்ளை காரியமென் றுரைப்பதுபோலாம். விவகாரத்தில் தாய் காரணமும் பிள்ளை காரியமுமாகவொப்பினும் உண்மையில் அச்சொப்பனத்திற்கு அறிவே காரணமாம். அங்ஙனமே சேதனாசேதனமான வுலகில் ஒன்று காரணமும், ஒன்று காரியமுமானாலும் யதார்த்தத்தில் பரம்பொருளுக்கு மேற்படி இரண்டும் காரியமாம்.

"சொப்பன வுலகமானதும், சொப்பன சரீரத்தி னுழைந்ததும் அறிவேயன்றி அறிவினது பிரகாசமன்று. கண்ணாடியி னுழைந்தது சூரியன் ஆகிய முதலாகாமல் அவனது பிரகாசமாக முடிந்தது. இதனால் உபமான விருத்த முண்டாயின தன்றியும், அந்தக் கண்ணாடியில் சூரியன் பிரதிபலித்தபோது பிரகாசத்தை வெளியே கண்டதன்றி ஒரு செங்கற்பலகையில் சூரியன் பிரதிபலித்தலும், அதினின்று பிரகாச மெழுதலுங் காணக்கூடாமையால் கண்ணாடியைத் தள்ளிச் சூரியப்பிரகாசம் வெளியானதற்குக்காரணம் என்றுவரைந்து கொண்டது தவறாக முடிந்தது சூரியனது பிரகாசம் வெளியானதற்கு அந்தச் சூரியனேயன்றி அவன் பிரதிபலித்த கண்ணாடியாகிய நிர்மல வஸ்துவுங் காரணமாய் நின்றமையால், நம்மவாது நியாயம் நிலைபெறா தொழிந்தது" என்றார்.

சூரியனே பிரகாசரூபமா யிருத்தலால் பிரகாச மென்பதைச் சூரியனாக வைத்துக் கொள்ளலாம். அல்லது சூரியனது பிரகாசமே பிரதிபலித்தது என்று கொண்டாலுங் கொள்ளலாம். இது குற்றமல்ல. சூரியன் பிரதிபிம்பிப்பதற்கு நிர்மலவஸ்துவும் காரணந்தான்.

அதுபோல அறிவு நிர்மலமான அந்தக்கரணமுள்ள சரீரத்திலேயே பிரதிபிம்பிக்கின்றது. மற்ற அந்தக்கரணங்களில்லாத கல்முதலிய பொருள்களில் பிரதிபிம்பிப்பதில்லை. அறிவின்கண் சொப்பனவுலகு, சரீரம், இந்திரியம், அந்தக்கரணம் இவை யாவுமே உண்டாகின்றன.

(ப்ரம்மவித்யா 1888ஹு செப்டம்பர்மீ 30உ.)

"உலகமே அறிவென்பவாது நியாயத்தை, அறிவே உலகம் என்பவர் வருவித்துக் காட்டியமேயன்றி, அந்த நியாயத்தை மறுத்துப் பின்னர்த் தமது ஸித்தாந்தத்தை நாட்டினாரில்லை" என்றார் பிரதிவாதியார். எமது சித்தாந்தம் அவரது சித்தாந்தத்தை மறுத்தமையானும், அதற்கு முன்னும் அவரது சித்தாந்தத்தை மறுத்தமையானும் அவரது சித்தாந்தத்தை மறுக்கவில்லை யென்பது கூடாது. உலகை அசத்தென் றுரைப்பது எமது சித்தாந்தமென்று அவரடிக்கடி யுரைக்கின்றார். சத்தென்று கூறுவாரை மறுத்தற்கு அசத்தென் றுரைப்பதே யன்றி அதுவே எமது சித்தாந்தமன்றென முன் பத்திரிகையி லுரைத்தாம். பின்னர் எமது சித்தாந்தமு மின்னதென்றுங் கூறினும்.

"அத்வைதி" என்றும், "சித்தாந்தி" என்றும் பெயர்பூண்ட பிரதிவாதியார் ஆக்ஷேபித்த ஆக்ஷேபங்களுக்கு மாத்திரம் இதுகாறும் சமாதானமுரைத்து; மற்றப்படி அவர் நம்மை இகழ்ந்து பேசியதற்கும் பரிகசித்ததற்கும் நாம் பதில் பேசாதிருத்தலே நன்றென்று மௌனஞ் சாதித்தோம். நாமும் அவரோடு அவ்வாறு பேசப்புகின் எடுத்த விஷயம் முடிவு பெறுமற்போம்; அன்றி மேலோர் குற்றங் கூறுவர். அவரிதுவரையில் பேசியது மாத்திரமல்ல, இன்னும் எவ்வளவு இகழ்ந்தும் பரிகசித்தும் பேசினும் அதற்கு நாம் வந்தனம் புரிவோமேயன்றி அதற்காக அவர்பேரில் மனஸ்தாபப்படமாட்டோம்.

(ப்ரம்மவித்தியா 1888ஹு அக்டோபர்மீ 31உ) ஓர் நண்பன்.

☞ இதைச் சார்ந்த சில விஷயங்கள் பின்னர் அரக்கோணம் சைவ சித்தாந்தியார் என்பவருக்கும் ஷை ஓர் நண்பருக்கும் நடந்தன. அவை பயனற்ற வீண் வார்த்தைகளாய்ப் போனமையின் அவற்றை இதில் சேர்க்கவில்லை.